www.padippakam.com

நவம்பர் 1987 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் விலை : ரூ. 1-

# புதிய கலாச்சாரம்




படிப்பகம்

# சாதி வெறியர்களின் காட்டுமிராண்டித்தனம்



மலத்லைதத் தின்னச் சொல்லி சாதி வெறியர்களால் சித்திரவதை செய்யப்பட்ட இளைஞர்கள்.

"இதத் தின்னுங்கடா அரிசன நாய்ங்களா! அப்பத்தாண்டா உங்களுக்குப் புத்தி வரும்!" என்று சாதி வெறியர்கள் மிரட்டினார்கள். 200க்கும் மேற்பட்ட சாதி இந்துக்கள் கையில் அரிவாள் கம்புகளுடன் சூழ்ந்திருக்க காலில் விழுந்து கெஞ்சிக் கொண்டிருந்த அந்த இளைஞர்கள் முன்னே மலச்சட்டி வைக்கப்பட்டிருந்தது. "தின்னுங்கடா! இல்ல, கொன்னுடுவோம்!" என்று அரிவாளை உயர்த்தினார்கள். அந்த ஐந்து இளைஞர்களும் கெஞ்சினார்கள். சாதி வெறியர்கள் மசியவில்லை. கூட்டத்திலிருந்து ஒரு சாதிவெறியன் ஓடிவந்து சுபாஷ் என்ற இளைஞரை எட்டி உதைத்தான். நிலை குலைந்து மலச்சட்டி மீது விழுந்த அந்த இளைஞரின் முகமெல்லாம் அந்த அசிங்கம் அப்பிக் கொண்டது. சாதி வெறியர்கள் கூட்டம் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை ரசித்து கெக்கலி கொட்டிச் சிரித்தது.

கர்நாடக மாநிலம்; பெல்காமிலிருந்து 24 கி.மீ. தொலைவிலுள்ளது பெந்திகெரி கிராமம். சாதி இந்துக்களான லிங்காயத்துக்கள் கோலோச்சும் அந்தக் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் 100 பேர் வாழ்கின்றனர்.

கிராமத்தின் பண்ணையார் மெல்லாட். அவரது வயலில் திருட்டுத்தனமாகப் புல் வெட்டியதாக சுபாஷ், சாவந்த், கல்லப்பா, எல்லப்பா, மடிவாலி ஆகிய ஐந்து இளைஞர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். இதற்காக பண்ணையாரின் அடியாட்கள் இவர்களைக் கட்டி வைத்து அடித்தனர். ஆகஸ்ட் இரண்டாம் நாள் இது நடந்தது.

ஆனாலும் பண்ணையாருக்கு ஆத்திரம் அடங்கவில்லை. சுபாஷின் தந்தை ஜனதா கட்சி ஆதரவில் பஞ்சாயத்து போர்டு உறுப்பினரானவர். பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றுப் போன பண்ணையாருக்கு ஜனதா கட்சியினரைப் பழிவாங்க இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. ஜனதா கட்சி தூண்டுதலாலேயே இவர்கள் திருட்டுத்தனமாக புல் வெட்டினார்கள் என்று குற்றஞ்சாட்டி அவமானப்படுத்த அடுத்த நாள் கிராமப் பஞ்சாயத்தை தனது வீட்டிலேயே கூட்டினார்.

குற்றம் சாட்டப்பட்ட அந்த இளைஞர்கள் பண்ணையாரின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டார்கள். பண்ணையாரின் அடியாட்களும் சாதிவெறியர்களும் அவர்களை செருப்பால் அடித்தனர். 'சோறு தின்பதற்குப் பதிலாக மலத்தைத் தின்றால்தான் இவர்களுக்குப் புத்தி வரும்' என்று கூடியிருந்த 200க்கும் மேற்பட்ட சாதி இந்துக்கள் தீர்ப்பு வழங்கினர். பஞ்சாயத்துக்கு வந்திருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் இப்படிப்பட்ட கொடூரமான தண்டனையைத் தராதீர்கள் என்று காலில் விழுந்து கெஞ்சினார்கள். சாதி வெறியர்கள் இரக்கம் காட்டவில்லை. இரண்டு அடியாட்கள் சுபாஷை இழுத்துக் கொண்டு காட்டுப் பக்கம் சென்று சட்டியில் மலத்தை அள்ளச் சொன்னார்கள். அந்த மலச் சட்டியை இளைஞர்கள் முன் வைத்து பஞ்சாயத்தார் முன்னிலையில் அடித்தனர்.

அடிமைக்கால வரலாற்றில் கூட அறிந்திராத இந்தக் கொடூரம்—காட்டுமிராண்டித்தனம் மெதுவாகவே கர்நாடக பத்திரிக்கைகளில் வெளிவந்தது. அப்போது கர்நாடக மாநிலத்திற்கு வந்திருந்த மத்திய அமைச்சர் சங்கரானந்த் பெந்திகெரி கிராமத்திற்குச் சென்று தாழ்த்தப்பட்ட மக்களைச் சந்தித்து 'ஆறுதல்' கூறினார். கர்நாடக அரசு, திப்பாசாமி தலைமையில் பிற்பட்டோர் நலனுக்கான சட்டசபைக் கமிட்டியை அந்தக் கிராமத்திற்கு அனுப்பி இருதரப்பாரையும் கூட்டி வைத்து பஞ்சாயத்து பேசி 'சமரசம்' செய்து வைத்தது.

இதற்கிடையே செப்டம்பர் இறுதியில் கர்நாடகப் பத்திரிக்கைகளுக்கு பெந்திகெரி கிராம மக்கள் சார்பில் ஒரு விளக்கக் கடிதம் வந்தது. அதில் ஆகஸ்ட் 3ந் தேதியன்று இப்படியொரு சம்பவமே நடக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட இளைஞர்களும் அதில் கையெழுத்திட்டிருந்தனர். திப்பாசாமி தலைமையிலான குழு இதுபற்றி கிராமத்தில் விசாரித்தபோதுதான் தெரிந்தது; சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்களிடம் வங்கிக் கடன் வாங்குவதற்கான விண்ணப்பம் என்று ஏய்த்து கையெழுத்து வாங்கியுள்ளனர் என்று.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனியாக டீ குவளை வைப்பது, மேல் சாதியினர் வசிக்கும் தெருக்களில் செருப்போ, சட்டையோ அணிந்து செல்ல தடுப்பது, கோயில்களில் நுழைய விடாமல் மறுப்பது, பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்க விடாமல் அடிப்பது, மேல் சாதியினரின் பம்பு செட்டுகளில் தண்ணீர் பிடிக்க விடாமல் சாணியைக் கரைப்பது, கட்டிவைத்து சவுக்கால் அடிப்பது, பெண்களைக் கற்பழிப்பது முதலான அட்டூழியங்களைத்தான் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் அதைவிட மோசமான முறையில் தாழ்த்தப்பட்ட மக்கள் நாயினும் கேடாக இழிவுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

கர்நாடக அரசு 13 பேரைக் கைது செய்துள்ளதாம்! ஆனால் இந்தியாவெங்கும் இம்மாதிரியான குற்றங்கள் எதுவுமே தண்டிக்கப்பட்டதில்லை. குற்றவாளிகளே இங்கே நீதிபதிகளாக்கப்படுகிறார்கள். ஆந்திராவின் அடிலாபாத் ஆதிவாசி மக்களைப் போல, பீகாரின் தாழ்த்தப்பட்ட மக்களைப் போல கர்நாடகத்தின் தாழ்த்தப்பட்ட மக்களும் கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் ஆயுதமேந்தி அணி திரளுவார்கள். இந்தக் காட்டுமிராண்டிகளைத் தண்டித்து அவர்களால் ஏற்பட்ட அவமானத்திற்கு வஞ்சம் தீர்ப்பார்கள். அடக்குமுறைக்குள்ளானவர்கள்தான் தீர்ப்பு வழங்கவும் உரிமை பெறமுடியும்!

● மணி



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே!

தி. தர்மகுலசிங்கம்
பியா கெவ்ங்கெஜ்-6
எஸ்ரி. ஆர்ஸ்ற்
6600 ஆறேஜ்
டென்மார்க்.

● போர்: 5
● குரல்: 6
● நவம்பர்' 87

ஆண்டுச் சந்தா : ரூ. 18
தனி இதழ் : ரூ. 1.50

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்:

அ. முகுந்தன்,
22, சாமியார்தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதை,
சென்னை-600 015.

# பாசிச ராஜீவ் கும்பலின் ஈழ ஆக்கிரமிப்பை முறியடிப்போம்!

பிற்போக்கு சக்திகளின் பிடியிலிருந்து இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக—என்று சொல்லிக் கொண்டு அவசர நிலையை அமல்படுத்தி பெயரளவிலான ஜனநாயக உரிமைகளையும் சிலுவையில் அறைந்தார் பாசிச இந்திரா. இப்போது 'ஈழ தமிழர்களுக்கு அமைதியான வாழ்க்கையைக் கொடுப்பதற்காக' ஈழத்தமிழர்கள் மீது மூர்க்கத்தனமான யுத்தத்தைத் தொடுத்திருக்கிறார் பாசிச ராஜீவ். அமைதி ஒப்பந்தம் கையெழுத்தான மறுகணமே இந்திய ராணுவத்தின் போர் விமானங்களும், கப்பல்களும், டாங்கிகளும் இலங்கையை நோக்கிப் புறப்பட்டுவிட்டன.

இந்திய விஸ்தரிப்புவாதிகளுக்கு ஆக்கிரமிப்பு யுத்தம் என்பது புதில்லை. காஷ்மீரைக் கைப்பற்ற பாகிஸ்தான் மீது தொடுக்கப்பட்ட யுத்தம், நேரு—கென்னடியின் தேன்நிலவுக்காலத்தில் சீனாமீது நடத்தப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தம், லால் பகதூரின் காலத்தில் மீண்டும் பாகிஸ்தான்மீது யுத்தம், வங்கதேசத்திற்கு 'விடுதலை' வாங்கித்தருகிறோம் என்ற பெயரில் பாகிஸ்தானை இரண்டாகப் பிளப்பதற்காகவே நடத்தப்பட்ட இந்திராவின் 'பங்களா தேஷ்' யுத்தம், அதன் பின் சிக்கிமை விழுங்குவதற்காக போர் எதுவும் இல்லாமலே நடத்தப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு, இன்றைக்கு ஈழத்தில் நடத்தப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்பு.

ஈழ விடுதலை என்ற கோரிக்கை வெற்றி பெற்றாலும், தோல்வியடைந்தாலும் அதில் தன்னுடைய நலன் பாதிக்கப்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதால்தான் தனது கையாட்களாக சில விடுதலை இயக்கங்களை இந்திய அரசு தயாரித்தது. இனப்படுகொலை தொடங்கிய 1983 முதல் இன்றுவரை இந்தியத் தரகு முதலாளிகளின் இலங்கை வர்த்தகம் சீராக அதிகரித்து வந்துள்ளது. இப்போது ஒப்பந்தத்தின் பின் ஈழத்து எண்ணெய் வயல்களை இந்தியா கையகப் படுத்திக் கொள்வதுடன், புதிய பல வர்த்தக ஒப்பந்தங்களுக்காகவும் இந்தியத் தரகு முதலாளிகளின் குழு ஒன்று இலங்கை சென்றுள்ளது. தனது திரிகோணமலை கடற்படைத்தளத்தை எவ்விதத்திலும் கேள்விக் குள்ளாக்கவில்லை என்பதால் அமெரிக்காவும், எதிர்காலத்தில் தனது இந்திய எடுபிடிகள் மூலம் இதைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்பதால் ரஷியாவும் இந்த ஒப்பந்தத்தையும் அதனடிப் படையிலான ஆக்கிரமிப்பையும் எதிர்க்காமலிருக்கின்றன, ஆதரிக்கின்றன.

இந்நிலையில் இந்திய ராணுவத்தின் ஆக்கிரமிப்பு வெறியாட்டங்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே போராடுகிறது. அந்தப் போராளிகளின் வீரமும், திறமையும், தியாகஉணர்வும் இந்தியக் கூலிப்படைக்கு குலை நடுக்கத்தைத் தருகிறது. யாழ் மக்களின் எதிர்ப்பு ஆத்திரத்தைக் கொடுக்கிறது. எனவே இராணுவப் பீரங்கிகளின் குண்டுகளுக்கு யாழ் மக்களைப் பலியாக்கிக் கொண்டே, தனது பிரச்சார பீரங்கிகளின் பொய்களால் இந்திய, தமிழக மக்களை மூளைச் சலவை செய்கிறது பாசிச ராஜீவ் கும்பல். பிரபாகரனின் பாசிச நடவடிக்கைகளை நாம் ஏற்கனவே அம்பலப்படுத்தியிருக்கிறோம். இருப்பினும் பாசிச ராஜீவ் கும்பலின் ஆக்கிமிரப்பு நடவடிக்கையை எதிர்த்து உறுதியாகப் போராடுகின்றவரையில் ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையில் விடாப்பிடியாக நிற்கின்ற வரையில் புலிகளின் போராட்டம் புரட்சிகரமானது; ஆதரிக்கத்தக்கது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்திய அரசின் ஆக்கிரமிப்பு நோக்கமும், இந்திய ராணுவத்தின் கொலைவெறித்தனமும் இந்திய மக்கள் மத்தியில் அம்பலமாகியுள்ளது. தமிழக மக்களின் எதிர்ப்புணர்வு பெரும்பாலும் இனவுணர்வு அடிப்படையிலானது என்றாலும்கூட அதனை அடுத்த கட்டத்திற்கு வளர்த்தெடுக்கவேண்டும். இனவுணர்வின் அடிப்படையில் போராட்டங்களை நடத்தி வருகின்ற திமுக, தி. க, நெடுமாறன் கட்சி ஆகியவை 'போர் நிறுத்தம்' என்ற கோரிக்கையுடன் முடங்கிக் கொள்கின்றன. போர் முனையில் அரசியல், ராணுவ நிலைமைகளுக்கேற்ப புலிகள் போர் நிறுத்தம் கோருவது நியாயமானது; சில வேளைகளில் தவிர்க்க இயலாதது. ஆனால் ஆக்கிரமிப்பு நாடான இத்தியாவைச் சேர்ந்த நாம் படைகளை திரும்பப் பெறுமாறு கோரிப் போராடுவதே சரியானது.

எனவே பாசிச ராஜீவ் கும்பலுடன் விட்டுக் கொடுத்து சமரசம் செய்து கொள்ளும்வகையில் ''இந்தியப்படை அங்கேயே இருக்கட்டும்; போர் நிறுத்தம் செய்யுங்கள் போதும்'' என்று கோரும் அனைத்துக்கட்சிகளும் அம்பலப்படுத்தப் படவேண்டும், இதன் மூலம்தான் சரியான அரசியல் கண்ணோட்டத்தில் மக்களின் அணுகுமுறையைத் திருப்ப முடியும். மாறாக, ''ஏதோ ஒரு விதத்தில் இந்திய இராணுவத்தை எதிர்க்கிறார்களே'' என்று திமுகவின் போர் நிறுத்தக் கோரிக்கையை அம்பலப்படுத்தாமல் விட்டோமானல் அது திமுகவின் இனவாத அரசியலுக்கும், பாசிச ராஜீவ் கும்பலின் ஆக்கிரமிப்பு நோக்கத்திற்கும் வால்பிடிப்பதாகவே பொருள்படும்.

எனவே, இந்தியராணுவ ஆக்கிரமிப்பை திரும்பப் பெறு! ஈழத்தமிழரின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரி! என்ற முழக்கங்களின் அடிப்படையில் பாசிச ராஜீவ் கும்பலுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வோம்!

T THARMAKULASINGAM
BJARGEVANGET-6

படிப்பகம்

# உடன்கட்டை இந்துமதக் கோட்பாட்டைத் தீயிடுவோம்!

திமிறிக் கொண்டு அந்தப் பெண் வெளியே ஓடுகிறாள். வயல்களில் தட்டுத் தடுமாறி ஓடுகிறாள். ஆ, அதோ ஒரு நெல் குதிர். அதில் புகுந்து ஒளிந்து கொள்கிறாள்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவளது மாமியார், மாமனார், மைத்துனன் என்று கொடியதொரு கூட்டம் துரத்தி வருகிறது; தேடுகிறது; நெல் குதிரையும் விடவில்லை, துழாவுகிறது, பெண்ணைப் பிடித்துவிடுகிறது.

மாமியார் சபிக்கிறாள். 'என் மகனை முழுங்கிட்டியேடி, உனக்கு விட்டவழி சதி ஒன்னுதான்டி' ஓ! இந்தச் சதிக் கூட்டம் செத்துப் போன மகனோடு மருமகளையும் நெருப்பில் போட்டு சாகடிக்கப் போகிறது.

அவளைப் பலவந்தப்படுத்தி வலுவான போதை மருந்து (அபின் போன்ற) கொடுத்துக் காட்டுக்கு இழுத்துச் செல்கிறார்கள். சிதையின் உள்ளே வைத்து கட்டையால், தேங்காய்களால் மூடி எரியூட்டுகிறார்கள். அந்த உள்ளம் என்னவெல்லாம் எண்ணியதோ? காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று சொல்லி எப்படியெல்லாம் கதறியதோ?

வெளியே யாருக்கும் கேட்டிருக்காது. அங்கே ஓயாமல் பறைக் கொட்டும், 'சதிமாதாகீ ஜெய்!' கூச்சலும், பார்ப்பனர்களின் வேத இரைச்சலும் நிரம்பி வழிகிறதே—எங்கே கேட்கும்?

சதிமாதாவா? உயிருக்கு மன்றாடுகிற அந்தச் சாதாரணப் பெண் ரூப்கன்வார் சதிமாதாவாக்கப்பட்டு விட்டாளா? ராஜஸ்தான் வீரபுத்திரர்கள் என்று மேல்ஜாதி வெறி வலம் வரும் ராஜபுத்திரக் கும்பலின் சதியல்லவோ இது.

*சிதை பாதியில் அணைந்துவிட்டது. பாதி வெந்து போன ரூப்கன்*வார் துள்ளிக் குதிக்கிறாள். வெளியே ஓடித் தப்ப மாட்டோமா; இப்போதாவது, முடமாகவாவது ஒரு மனித உயிராக எங்காவது ஒரு மூலையில் உயிர் வாழ மாட்டோமா என்று வெறியோடு, ஏக்கத்தோடு வெளியே எம்புகிறாள். கத்தியோடு காவல் நிற்கும் இளைஞர் கும்பல் கட்டைகளைச் சரிசெய்கிற சாக்கில் அவள் மண்டையில் அடித்தே கொன்றுவிடுறது.

சே! பூச்சைக் கொலை பட்டப் பகலில். நூற்றுக்கணக்கான பொது மக்கள் எதிரில். இந்து தர்மம், ராஜ புத்திர வீரம் என்று சாட்சி வைத்து சாதி, மதத்தின் பேரால் பச்சைக் கொலை. ஆனால் பெயர் என்னவோ "சதி தர்மம்! (உடன்கட்டை தர்மம்!)" என்று பெரிய பெயர். நடந்த இடம் ராஜஸ்தான் மாநிலம், தியோராலா கிராமம்.

● ● ●

நூற்றுக்கணக்கில் உள்ளூர் மக்கள் செயலற்று ஊமைகளாக, அல்ல அல்ல, நிர்ப்பந்தப்படுத்தி அழைக்கப்பட்ட அடிமைகள் போல் அங்கே சாட்சிகளாக நின்றார்கள். அவர்களில் சிலர், குறிப்பாக, சமூகத்தில் அடித்து கீழே வைக்கப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் சிலர்தான் மேலே சொன்ன உண்மை விவரங்களை எடுத்துச் சொன்னார். இல்லை என்றால் உண்மை கூட சதித் தீயில் வெந்து சாம்பலாகி விட்டிருக்கும்.

எத்தனைப் பெரிய கொடூரம். காட்டுமிராண்டித்தனம். ரூப்கன்வரின் உறைந்து போன ரத்தத்தின் மீதுராஜபுத்திர வெறி அடிக்கின்ற கூத்து தாங்க முடியவில்லை. பதின்மூன்றாம் நாள் ரூ 4000க்கு சரிகை இழைத்த சுன்ரி—புதுப்புடவையை எரித்த இடத்தில் விரித்துத் தொழுவது லட்சக்கணக்கான மக்கள் கூடிய விழாவாக ஆக்கப்பட்டது. ஒருத்தியைக் கொலை செய்துவிட்டு, பெண்ணடிமை மூடத்தனத்தால் வெறியால் அதை மூடிமறைக்க ஒரு விழா—இப்போது ரூப்கன்வார் சதிமாதாவாக ஆக்கப்பட்டு விட்டாள்.

இதுதான் தருணம் என்று ஜாதி வெறி ஊட்டப்பட்டது. ரஜ்புத்சபை மறுபடி கட்டப்பட்டு விட்டது. ரஜ்புத் சாதிய மாணவர் சங்கம் கிளம்பி விட்டது; எரிகின்ற கொள்ளியிலே ஆதாயம் பிடுங்க ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள் வந்துவிட்டார்கள்; எரிந்தாலென்ன, எரிக்கப்பட்டாலென்ன, வியாபாரம் ஆகிறதா என்று வாழ்க்கை மதிப்புக்களே அற்ற கயவர்கள் ஒன்றுகூடி "சதி சமிதி" கட்டினார்கள். கிட்டத்தட்ட 40 லட்சம் ரூபாய்க்கு மக்களிடமிருந்து காசு சேர்த்துவிட்டார்கள்—கோயில் எழுப்புவதற்காக. அவர்களில் வியாபாரிகள் தேங்காய், பலகாரம், மற்றும் வெட்டி ஓட்டிப் போலியாக தயாரித்த சதிமாதா (ரூப்கன்வார் சிதையில் கணவர் உடலை மடியில் கிடத்தி எரிவது போல) வண்ணப் படங்களை விற்று லட்சக்கணக்கில் சம்பாதித்தார்கள்.

பெண்கள் இயக்கம் ஒன்று ஜெய்ப்பூரில் ஆர்ப்பாட்டம் நடத்தியது—சதிக் கொடுமைக்கு எதிராக. செப்டம்பர் 4ல் ரூப் எரிக்கப்பட்டாள்; செப்டம்பர் 6ல் அவர்கள் முதலமைச்சரைச் சந்திக்கிறார்கள். சரமாரியாகக் கேட்கிறார்கள். அவருக்கு வெட்கம், மானம் எதுவும் கிடையாது. 'நான் விவாதிக்க விரும்பவில்லை வெளியே போங்கள்' என்று எரிந்து விழுந்தார். இவர் சதிக்கு ஆதரவு தருகின்ற முதலமைச்சர்.

ஜனதா தலைவர் கல்யாண்சிங் கால்வி, பாரதீய ஜனதா, லோக்தள எம்எல்ஏக்கள் சதிக் கமிட்டியின் தூண்கள். செப்டம்பர் 27 அன்று தியோரலாவில் பொதுக்கூட்டம் போட்டார்கள். அங்கே 'போர்க் குரல்' திமிரோடு அறிவிக்கப்பட்டது; 'வாளை ஏந்துவோம் ராஜபுத்


**சதியை எதிர்த்து பெண்உரிமை அமைப்புகள் ஊர்வலம்; சதியை ஆதரித்து ராஜபுத்திர மதவெறியர்கள் ஊர்வலம்.**





படிப்பகம்

www.padippakam.com



உ.பி.யில் சதி: எரிந்தபோது எடுத்த படம்

திரர்களே!' என்ற முழக்கம் ஏலம் விடப்பட்டது.

இவர்களது தலைவர்கள் டெல்லியிலிருந்து சதியை எதிர்த்து அறிக்கை விட்டாலும், ராஜஸ்தான் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அப்புறம் அரசியல் பிழைப்பு என்னாவது?

இந்தக் கும்பலுக்கு ஜாதி ரீதியில் டிஐஜி ஆதரவு! ஒருவேளை பின்னால் விசாரணை வந்தாலும் சாட்சிகள் இல்லாமல் செய்ய, முன்பிருந்த கலெக்டர், எஸ்.பி, டி.எஸ்.பி, எஸ்.டி.ஓ ஆகியோர் திடீர் மாற்றம் செய்யப்பட்டார்கள். காரணம் அவர்கள் ராஜபுத்திர ஜாதி அல்லவாம்!

ராஜஸ்தான் மாநிலம் முழுவதும் ராஜபுத்திர ஜாதிவெறி எரிய விடப்பட்டது. சதிக்கு எதிராகஇயக்கம், ஆர்ப்பாட்டம் நடந்த போது, வாளேந்திய ராஜபுத்திரர்கள் இரண்டுமுறை ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். சதி உரிமையில் கைவைக்க யாருக்கும் உரிமை கிடையாது என்று சவால் விட்டார்கள்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் கோயங்காவின் உள்ளூர் (ராஜஸ்தான்) ஏடு 'ஜனசட்டா'வில் சதியை ஆதரித்துத் தலையங்கம் தீட்டினார் பார்ப்பனீய ஆசிரியர் பிரபாத் தோஷி. டைம்ஸ் ஆஃப் இந்தியா ஜெய்ப்பூர் பதிப்பு சதியைப்புகழ்ந்து தள்ளியது. 29 நாட்கள் கழிந்த பிறகே தலையங்கம் எழுதி மழுப்பியது. இந்த ஏடுகளின் மற்ற மாநிலப் பதிப்புக்கள் ஆங்காங்குள்ளஎதிர்ப்பு உணர்வுக்கு ஏற்ப கபட நாடகமாடின; அதற்கேற்ப விமரிசனங்களைச் சேர்த்து எழுதின. அரசியல் கட்சிகளைப் போலவே நிலப்பிரபுத்துவத்தை அரவணைக்கத் துடிப்பவர்களே இவர்கள்.

ஜாதி, மதவெறி தலைக்கேறி விட்டால், இந்தப் பிரச்சனைகள் தலை எடுக்கும் போதெல்லாம் கட்சிக் கரைகள் உடைந்து போகின்றன. ஒன்றாகக் கலந்து விடுகிறார்கள். முஸ்லீம் பெண்களின் உரிமைகளை ஒடுக்கும் ஷாரியத் சட்டத்திற்கு ஜனதா எதிர்ப்பு தெரிவித்தாலும், அதை முழுமுச்சாக ஆதரித்த சையத் சஹாபுதீனைக் கட்சியைவிட்டுவெளியேற்றவில்லை ஏன்? ஓட்டு போய்விடக்கூடாதே, அதற்காக. தமிழகத்தில் வன்னியர் ஜாதியப் போராட்டத்தின்போது ஓட்டுக்கட்சிகள் வாய்மூடி வேடிக்கை பார்த்ததற்குக் காரணம், ஓட்டு—பதவிகள். அது போலவே, ராஜஸ்தானில் சதியை எதிர்த்த மசோதா வந்தவுடன், பெண்கள் அமைப்பு உயர்நீதிமன்றத்திலிருந்து சுன்ரி விழாவைத் தடைசெய்ய கட்டளை வாங்கியவுடன் அனைத்துக் கட்சி ராஜபுத்திர வெறியர்களும் ஒன்று சேர்ந்து விட்டார்கள்.

கம்ப்யூட்டர்களோடு, போலிச் சாமியார்களின் (ஏஜெண்டுகளின்) யாகங்களை, கோயில்களைச் சுற்றி வலம் வரும் பிரதமர் ராஜீவ்காந்தி சம்பவம் முடிந்து 21 நாட்கள் கழிந்த பிறகுதான் வாயைத் திறந்தார். ராஜஸ்தானின் நிலப்பிரபுக்களைப் பகைத்துக் கொள்ளாமலிருக்கும் 'ராஜதந்திரம்' இது. 'சதி' முடிந்து, சுன்ரி விழாவும் முடிந்த பிறகு கவனமாக அறிக்கை விட்டார்—'சதி —தேசத்திற்கேஒரு பெரிய அவமானச் சின்னம்.' அவரது அறிக்கையைப் பற்றிக்கவலைப் படவேயில்லை ஜாதி வெறிக்காரர்கள்.

சொல்லப்போனால் இதற்கும் ஒரு மதப்பூச்சு கொடுத்துவிட்டார்கள். 'முஸ்லீம் ஷரீயத்துக்குப் பணிந்து போகிற ராஜீவ் சதி உரிமையில் ஏன் தலையிடுகிறார்?' என்று கேட்கிறார்கள். 'கிறித்தவர்கள் சவ அடக்க பூமியில் கல்லறை, நினைவுச் சின்னம் எழுப்பவில்லையா? சுன்ரி விழா, சதிமாதா கோயில் கட்டுவது குடிமகனது உரிமை தானே? அதில்—எப்படிச் சட்டம் தலையிடலாம்?' என்று கேட்கிறார்கள்.

ஒப்புக்காக, தியோரலா சதியில் சம்பந்தப்பட்ட ரூப்கன்வாரின் கணவன் மால்சிங் குடும்பத்தாரைக் கைது செய்தபோது பெரிய எதிர்ப்புக்கூட்டம் நடத்தப்பட்டது. "அவர்களை விடுதலை செய்யாத வரை எந்த ஒரு உண்மையான ராஜபுத்திரனும் விளக்கேற்றி தீபாவளி கொண்டாடக்கூடாது" என்று தீர்மானம் போட்டார்கள்; இதையே இந்து மதத்தோடு சம்பந்தப்படுத்தி "எந்த ஒரு இந்துவும்" என்று பின்னால் தீர்மானத்தை மாற்றி இந்துமத வெறியைப் பக்கபலமாகச் சேர்த்துக் கொண்டார்கள்; 'இந்து தனிநபர் உரிமைச் சட்டத்தை' முன்னால் எடுத்து வீசுகிறார்கள்.

சுரண்டும் ஆண்டை வர்க்கமும், அஞ்ஞானவாதிகளும் இந்தியச் சமூகத்தை பின்னோக்கி விரட்டுவதில் குறியாக இருக்கிறார்கள். பெண் அடிமைச் சதிக்கொடுமைக்கு வக்காலத்து வாங்குகிறார்கள். ராஜபுத்திர ஜாதிவெறிக்கு ரூப்கன்வார்களின் ரத்தக் கொழுப்புகளை ஊற்றுகிறார்கள்.

● ●

சதிக்கொடுமை, காட்டுமிராண்டித்தனம் தமிழகத்தில் நடக்கவில்லையே; நாம்தான் எதிர்க்கிறோமே, அதைப்பற்றி ஏன் நாம் விவாதிக்க வேண்டும் என்று சிலர் கேட்கலாம். அவசியமிருக்கிறது. போலிச் சுதந்திரத்துக்குப் பிறகு ராஜஸ்தானில் நடந்த 28 சதிகளை நடத்தியவர்களுக்குத் தண்டனை இல்லை; சதி மேளா நடத்தி கொலைகளை எல்லாம் சமூகநீதியில் புகழும் தியாகமாக்கி விட்டார்கள். ஜெயில்சிங்கிலிருந்து ராஜஸ்தான் முதல்வர் ஹரிதேவ்சிங் வரைமேளாவைத் திறந்து வைக்கிறார்கள்; அரசு விடுமுறை விடுகிறார்கள்.

அந்த இந்திய அரசுதான் அதிகாரத்தில் இருக்கிறது—இதை நாம் முதலில் உணர வேண்டும்.

அடுத்து, சதியைக் காட்டிலும் கொடிதான விதவைக் கோலத்தை (அதிலும் இளம் வயதினர்) பெண்கள்மீது கட்டாயப்படுத்தும் வழக்கம் தமிழகத்திலே இருக்கிறது. பெரியார் கேட்பது போல,—"...விதவைப் பெண்ணுக்கு அவள் ஆயுள் காலம் முழுவதும் அங்குலம் அங்குலமாகச் சித்திரவதை செய்வதைப் போன்ற கஷ்டத்தை விநாடி தோறும் அனுபவித்து வர



படிப்பகம்

www.padippakam.com



ரூப்கன்வார்

நேரிடுகிறதா இல்லையா... விதவைகளுக்கு உடனே மணம் செய்ய வேண்டும்... இல்லையானால் ஜீவகாருண்யத்தை உத்தேசித்து, பழைய உடன்கட்டை ஏற்றும் வழக்கத்தையாவது புதுப்பிக்க வேண்டும்...” உடன்கட்டை வேண்டும் என்று பெரியார் வாதிடவில்லை; விதவைப் பெண் சதிப் பெண்ணைக் காட்டிலும் பெரிய கொடுமையை அனுபவிக்கிறாள் என்றுசொல்கிறார். உண்மைதானே? ஒரு காலத்தில் தமிழகத்திலும் உடன்கட்டை ஏறும் வழக்கம் திணிக்கப்பட்டிருந்தது. அதன் பிறகு அதைவிடக் கொடிய விதவை வழக்கம் இருந்து வருகிறது.

விதவைக் கோலம் என்பது உயிரோடு நடமாடும் பிணம். கொளுத்தப்படாமலேயே அன்றாடம் வெந்து வெந்துரணவேதனைப் படும்நிரந்தரச் சதி; நிரந்தர உடன்கட்டை. ராஜஸ்தானிலே விதவையாகஇருந்து கேவலப்படுவதைவிட மூச்சுப் பிடித்துச் செத்துப் போகலாம் என்றுதான் உடன்கட்டை ஏறுகிறாள் ஒரு விதவை. ஆனால் இங்கே... கண்ணெதிரே எத்தனை விதவைகள்?

இது மட்டுமா? குழந்தை மணம் (பால்ய விவாகம்) தமிழகத்தில் இன்னமும் நடக்கிறதே? இதற்காகவே ரூ 5000 பணம் தருகிறாரே சங்கராச்சாரி. கேட்டால் இல்லவே இல்லை; இந்து தர்மத்தில் அப்படி இல்லையே என்பார். காஞ்சி, பூரி சங்கராச்சாரிகள்தானே சதியை ஆதரித்து அறிக்கை விட்டவர்கள். கேட்டால், “இந்து தர்மத்தில் அப்படி இல்லை. ஆனால் அதை எதிர்க்க மாட்டேன்” என்பார் காஞ்சி சங்கராச்சாரி.

இப்படித் தமிழகத்தில் நடைப் பிணங்களாக, பிற்போக்கும், சம்பிரதாயமும் கொத்திக் குதறிய நெஞ்சங்களோடு உலவும் பெண்களை முன் வைத்து நாம் சிந்திக்க வேண்டாமா? ரூப் கன்வார்களின் ரத்தக் கண்ணீர் நிலப்பிரபுத்துவப் பெண் அடிமைத்தனத்தை நமக்கு நினைவு படுத்திக் கொண்டுதான் இருக்கும்— நாம் நிலப்பிரபுத்துவத்தை, சாதிகளை, மதவெறியைச் சுட்டுப் பொசுக்கும் வரை.

—வேலாயுதம்

## அமைப்புச் செய்திகள்

பாசிச ராஜீவ் ஊழல் அம்பலமாகி விட்டதைக் கண்டு தாண்டிக் குதிக்கிறார்; பாராளுமன்றத்துக்கு வாய்ப்பூட்டு போட்டு விட்டுத் தனது பாசிசத் திணிப்பை முயன்று கொண்டிருக்கிறார். மக்களது கவனத்தைத் திருப்புவதற்காக சீர்குலைவுச் சக்திகளால் அபாயம், நாட்டுக்கு ஆபத்து என்று ஊளையிடுகிறார். ராஜீவோடு போலி கம்யூனிஸ்டுகளும் ஒத்துஊத பாராளுமன்ற கேலிக்கூத்து நாடே சிரிக்கும் செய்தியாகி விட்டது. மற்ற எதிர்க் கட்சிகள் ‘தேசீய மாற்று’ மோசடி வித்தைகளில் இறங்கியுள்ளன.

—இந்த நேரத்தில் மக்களுக்கு நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டி, ஓட்டுக் கட்சிகளை அம்பலப்படுத்தி, மாற்று ஆயுதம் தாங்கிய புதிய ஜனநாயகப் புரட்சியே என்று மக்களை அணி திரட்டிட, ‘பாசிச ராஜீவ் கும்பலுக்குப் பாராளுமன்றம் மாற்றல்ல!’ என்ற இயக்கத்தை எமது அமைப்பு கிளைகள் மூலம் கடந்த அக்டோபர் முழுவதும் நடத்த திட்டமிட்டது.

இதற்கிடையே, இந்திய—இலங்கை துரோக ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அமைதிப்படை என்ற பெயரில் இந்தியா ஈழத்தமிழர்மீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்தது. இந்திய ராணுவம் செய்தஅட்டூழியங்கள்—சொல்லக் கூசுபவை; ஈவிரக்கமற்றவை; நெஞ்சதிரச் செய்பவை,

“ஈழத்தமிழரைக் காப்பாற்ற ராணுவம் அனுப்பு” என்று தமிழகத் திராவிடக் கட்சிகளும், நெடுமாறனும் முன்பு முழங்கியபோதே எமது அமைப்பு அம்பலப்படுத்தியிருந்தது. இப்போது மீண்டும் இந்திய அரசை நேரடியாக எதிர்க்கத் துணியாத இவர்களது மழுப்பல் அரசியலை அம்பலப்படுத்தும்அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்தியஆக்கிரமிப்பு, தெற்காசியாவில் அது எடுத்து வரும் மேலாதிக்க நாட்டாண்மைத் தோரணையைவெட்ட வெளிச்சமாக எடுத்துச் சொல்கிறது. ராஜீவ் கும்பலின் பாசிச முனைப்பும், ஆக்கிரமிப்பு யுத்தமும் எவ்வாறு கைகோர்த்துச் செல்கின்றன என்ற அபாயச் செய்தியை மக்களிடம் உடனே எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ‘இந்திய ராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக’ என்றதொரு இயக்கத்தை முக்கியப்படுத்தி எடுத்தோம்.

எம்.ஜி.ஆரின் போலீஸ் சென்னைப் பகுதியில் பொதுக் கூட்டத்தைத் தடை செய்தது. எனவே, அதற்கிணையாகத் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. (நவல்பர் 9-ல் பொதுக் கூட்டம் நடத்தப்பட உள்ளது.) தடையை எதிர்த்துக் கண்டனச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அனைத்துக் கிளைகளிலும் சுவரொட்டிகள், பிரசுரங்கள், தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் என்ற வரிசையில் இயக்கம் சிறப்பாக நடந்தது. ஈழத்தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்த்த முழக்கங்கள் பிரசுரமாக அடிக்கப்பட்டு தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் உழைப்பாளிகள் மத்தியில் பரவலாக விநியோகிக்கப்பட்டன; சுவரொட்டிகளாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டது; ‘துணிச்சலான முழக்கங்கள்!’ என்ற வரவேற்பையும் பெற்றன.

திருச்சியில் 6 இடங்களில் பொதுக் கூட்டமும், ஒரு கருத்தரங்கமும், இந்திய வானொலி—தொலைக்காட்சியில் அநியாய யுத்தத்தில் இறங்கியுள்ள சிப்பாய்களுக்குச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்துவதை எதிர்த்தும், ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்த்தும் ஒருநாள் ஆர்ப்பாட்ட ஊர்வலமும், ராணுவ அராஜகம், அட்டூழியத்தை எதிர்த்து ஒருநாள் சைக்கிள் ஊர்வலமும் எழுச்சியோடு நடத்தப்பட்டன. கடலூரில் பொதுக்கூட்டத்தோடு ராணுவ அராஜகத்திற்கெதிராக ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. தஞ்சை, அதிராம்பட்டினம், சீர்காழி, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் பொதுக் கூட்டம் சிறப்புற நடத்தப்பட்டது. இணைச்செயலர் தோழர்கதிரவன் சிறப்புப் பேச்சாளராக அனைத்து இடங்களிலும் கலந்து கொண்டார். பரமக்குடி, காட்பாடி இரு நகரங்களிலும் இந்திய ராணுவத்தின் ஆக்கிரமிப்பை, அராஜகத்தைக் கண்டித்து மிக விரிவான அளவில் சுவரொட்டிப் பிரச்சாரம் நடந்தது; பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன.

தமிழகத்தின் இன்றைய அரசியல் நிலைமையை வேகமான ஒரு கண்ணோட்டமிட்டால்—காங்கிரஸ், மற்றும் அதன் காலடியில் கிடக்கும் அரசியல் கட்சிகள் விசிறிவிட்டுள்ள தேசியவெறி ஒருபுறம்; இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்தால் எங்கே எதிர்காலம் பாழாகுமோ என்றஞ்சும் பிழைப்புவாதத்தில் ஊறிய தி.மு.க போன்ற கட்சிகளின் ‘போர்நிறுத்தம்’ என்ற சந்தர்ப்பவாதம் இன்னொருபுறம்; இத்தகைய நேரத்தில் எமது புரட்சிகரமான பிரச்சாரம் தமிழக மக்களிடையே கணிசமான வரவேற்பைப் பெற்றது.

—மக்கள் கலை இலக்கியக் கழகம்,
தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவ் கும்பலுக்கு இன்னுமொரு கூஜா!

இலங்கை இனப் படுகொலையால் லட்சக் கணக்கான ஈழத் தமிழர்கள் வாழ்க்கையை இழந்தனர். அதே இனப் பிரச்சினை காரணமாக சில தமிழகத்து 'அறிவு ஜீவிகள்' வாழ்க்கையைப் பெற்றனர். உளவுத் துறையிடம் வாங்கிய காசிலும், தமிழக மக்களிடம் வசூலித்த நன்கொடையிலும் ஒரு சிறு துளியை இந்த "ஜனநாயக உணர்வுள்ள முற்போக்கு அறிவு ஜீவிகளுக்கு"ப் படியளந்தன போராளிக் குழுக்கள்.

இந்திய அரசின் உத்தரவுப்படி ஈழப் 'போராளிகள்' நாட்டுக்குத் (ஈழத்திற்கு) திரும்ப வேண்டியிருந்ததால் போகும்போது செய் நன்றி மறவாமல்இவர்களுக்கு தக்க சன்மானங்களை வழங்கிச் சென்றனர். இப்போதுபுதிதாக வரத் தொடங்கியுள்ள'எக்ஸ்ரே ரிப்போர்ட்' டக்ளஸ் தலைமையிலான ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் குரலாக ஒலிக்கிறது.

டாங்கே, போலிக் கம்யூனிஸ்டு கும்பல்களின் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆனால் ராஜீவுக்கு ஆதரவு என்ற நைந்து போன கந்தல் அரசியலை வைத்துக் கொண்டு தமிழக பத்திரிக்கை உலகில் இதன் ஆசிரியர் செம்பியன் நுழைந்திருக்கிறார். இந்தப் பத்திரிக்கையில் வெளி வரும் கட்டுரைகளும், இது வெளிவந்திருக்கும் தருணமும் நமக்கு ஐயத்தைத் தோற்றுவிக்கிறது. விடுதலைப் புலிகள்மீது இந்திய ராணுவம் நடத்தும் தாக்குதலை மனமாரப் பாராட்டுகிறது இப்பத்திரிக்கை. அது மட்டுமல்ல; பிரபாகரன்மீது பக்கத்திற்குப் பக்கம் வசைமாரி தவறாமல் இடம் பெற்றுள்ளது.

ஆக்கிரமித்திருக்கின்ற இந்திய ராணுவத்தை எதிர்த்து பிரபாகரனின் விடுதலைப் புலிகள் இயக்கம் போரிடுவதால் ஈழத்திலுள்ள பிற புரட்சிகரப் போராளிகள் ஜனநாயகத்தை நிபந்தனையாகக் கொண்டு விடுதலைப் புலிகளுடன் ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டும் என்று நாம் எழுதினோம்.

ஆனால் திருவாளர் செம்பியனும் அவரது ஆதர்ச இயக்கமான டக்ளஸின் ஈ.என்.டி.எல் எப்பும், டெலோ, ஈபிஆர்எல்எஃப், பிளாட் போன்ற ஆள்காட்டி அமைப்புகள் ஈழத்தின் விமோசனத்திற்கு ராஜீவ் என்ற அவதார புருஷரையல்லவா நம்பியிருக்கின்றனர்! என்ன இருந்தாலும் செம்பியனின் எஜமான விசுவாசம் அளவு கடந்துபோகிறது. மிதமிஞ்சிய உற்சாகத்தில் அவர் தட்டுகின்ற ஜால்ராவின் சத்தத்தில் விவரமறியாத சாதாரண வாசகர்கள்கூட விழித்துக் கொண்டுவிடும் அபாயம் உள்ளது.




எந்த அமிர்தலிங்கத்தை நேற்று வரை அமெரிக்க எடுபிடி என்று சொன்னார்களே அந்த அமிர்தலிங்கத்துடன், திரிகோணமலையில் அமெரிக்கக் கடற்படை முகாமடிக்க ஆதரவு கொடுத்தாரே அந்த அமிர்தலிங்கத்துடன்— கலந்துரையாடல் நடத்துகிறார் செம்பியன். டக்ளஸுடன் ஐக்கியபடுமாறு அவருக்கு 'அறிவுரை' கூறுகிறார். அமிர்தலிங்கம் கட்சி மாறி 'சோசலிச' (ரசிய) முகாமுக்கு வந்து விட்டாரோ! அதெல்லாம் நமது கண்களுக்கு எப்படித் தெரியும்? எக்ஸ்—ரே கண்களுக்குத் தான் புலப்படும்.

டக்ளஸ் தேவாவை ஸ்பார்ட்டகஸுக்கு ஒப்பிடுகிறார் செம்பியன். நமக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. (ஒரு வேளை டக்ளஸுக்கே கூச்சமாக இருக்கக் கூடும்) ஆனால் பேட்டியில் ஈபிஆர்எல்எஃபை விட்டு அவர் ஏன் விலகினார் என்பதையும்சூளை மேடு விவகாரத்தையும் பற்றி ஒன்றுமே கேட்கவில்லையே! அங்கேதான் நெருடுகிறது.

சூளைமேடு விவகாரம் ஜோடிக்கப்பட்ட நிகழ்ச்சி; அரசின் சதி; என்று நாம் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினோம். சிறையிலடைக்கப்பட்ட டக்ளஸை ஜாமீனில் எடுக்கக்கூட ஈ.பி.ஆர்.எல் எஃப் தலைமை முயலவில்லை. இதனால் முரண்பாடு முற்றி டக்ளஸ் வெளியேறினார். மத்திய உளவுத்துறை 'ரா' (RAW)வின் வலையில் வீழ்ந்தார். ஈ.என்.டி.எல்.எஃப் உதயமானது. அதற்கு ராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் 'ரா'வின் தயவில் கிடைத்தன.

இந்திய ராணுவம் ஈழத்தை ஆக்கிரமித்திருக்கின்ற இந்தத் தருணத்தில் இந்த உண்மைகள் எல்லாம் வெளி வருவது சங்கடத்தைத் தரும் என்பதால்தான் அதையெல்லாம் 'கிளறாமல்' அகில இந்திய வானொலியின் பாணியில் பேட்டி எடுத்திருக்கிறார் செம்பியன்.

திரிகோணமலையில் அமெரிக்கக் கடற்படை நங்கூரம் போட்டிருக்கும்போது இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை எதிர்ப்பதா? அப்படி எதிர்ப்பவர்கள் நிச்சயம் சிஐஏ ஏஜெண்டுகள்தான் என்கிறது எக்ஸ்ரே ரிப்போர்ட். இந்திய—இலங்கை ஒப்பந்தத்தில் அமெரிக்கக் கடற்படையை விரட்டிவிடப் போவதாக ஏதாவது ஷரத்து இருக்கிறதா? நமக்குத் தெரிந்தவரை இல்லை. ஒரு வேளை ரகசியமாக செம்பியனுக்குத் தகவல் வந்திருக்கக்கூடும். போகட்டும். ஒப்பந்தத்தையும், இந்திய ஆக்கிரமிப்பையும் எதிர்ப்பவர்கள் அனைவரும் சிஐஏ என்றால் இவற்றை ஆதரிக்கும் 'சோ'வும் இந்தியன் எக்ஸ்பிரசும் அமெரிக்க எதிர்ப்பாளர்களோ?

இலங்கை விவகாரத்தோடு நிற்காமல் உள்நாட்டு அரசியலிலும் ராஜீவுக்கு வாலைக் குழைக்கிறது எக்ஸ்—ரே ரிப்போர்ட். அலிக்கு ஆண் வேடம் கட்டிய கதையாக அமெரிக்காவை எதிர்த்துப் போராட ராஜீவுக்கு ஆலோசனை வழங்குகிறது. ஈழ சுயநிர்ணய உரிமையைத் தாங்கள் எதிர்ப்பதைத் தெளிவாகக் கூறிய பின்னாலும், ராஜீவையும் இந்திராவையும் சோசலிசவாதிகள் என்றும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள் என்றும் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள் ஈழப் போராளிகள். ஒரு கடைந்தெடுத்த பொய்யை பிரச்சாரம் செய்து தமிழக மக்களைக் குழப்பினார்கள். ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு கொடுத்த தமிழ் மக்களுக்கு அவர்கள் இங்கே இருந்தபோது தந்த பரிசு இது. இப்போது இங்கிருந்து போன பின்னாலும் தாங்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதற்கு செம்பியன் போன்றோரை நியமித்திருக்கிறார்கள் போலும்!

**தமிழகத்தில் ஒரு கயிலை மன்னன் போதாதா?**

● அஜித்



படிப்பகம்

www.padippakam.com

# நாய்ச் சண்டை!

துப்பாக்கிகளின் சத்தம் தெரு நாய்களின் கூச்சலை அமுக்கி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இந்திய இராணுவத்தின் ஈழ ஆக்கிரமிப்புப் போர் காரணமாக தினத்தந்தி—தினமலர் குடும்பங்களுக்கு இடையே நடக்கும் சண்டையை அவர்கள் அவ்வளவு பெரிதாக்கிவிட முடியவில்லை. இல்லையென்றால் இதுவே இன்று தமிழகத்தின் தலையாய பிரச்சினையாக்கப்பட்டு—சங்கராச்சாரி ஓடிப் போனதைப் போல— கதிகலங்கச் செய்திருக்கும்.

“தினத்தந்தி நிறுவனர் ஆதித்தனைத் தமிழர் தந்தை” என்று சொல்வதைப் பற்றி அவதூறு எழுதி அதன் மூலம் தமிழ் இனத்தையே இழிவு படுத்திவிட்டது தினமலர்; இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக கோவையிலிருந்து கொதிப்படைந்த தினத்தந்தி ஊழியர்கள் ஈரோடு போனார்கள். அனுமதியுடன் தினமலர் அலுவலகத்துக்குள் போனபோது தினமலர் நிர்வாகம் குண்டர்களை ஏவி தாமே இயந்திரங்களைத் தாக்கினர்; தினத்தந்தி ஊழியர் காரைத் தாக்கி சிலரைப் பிடித்து போலீசிடம் ஒப்படைத்தனர்’—என்று குற்றஞ்சாட்டுகிறது, தினத்தந்தி.

‘மதுரை, நெல்லை, திருச்சி, சென்னை தினமலர் அலுவலகங்களின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்த அதேநாளன்று ஈரோடு அலுவலகத்தில் தினத்தந்தி ஊழியர்கள் புகுந்து தாக்கினர். பொருட்களுக்கு சேதம் விளைவித்ததோடு தினமலர் ஊழியர்களையும் தாக்கிப் படுகாயப் படுத்தினர். பொதுமக்கள் குறுக்கிட்டு காப்பாற்றினர்.’ என்று தினமலர் எதிர்க்குற்றஞ்சாட்டுகிறது.

தினத்தந்தி—தினமலர் இரண்டுமே தமது சாதியினரையே விசுவாசமாக இருப்பார்கள் என்று வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் அவர்களைக் கொத்தடிமைகளாகவே நடத்துகின்றன. இந்த நிலையில் அவற்றின் ஊழியர் தாமே—மோதிக் கொண்டதாகவும், பொதுமக்கள் காப்பாற்றியதாகவும் சொல்வது புளுகுதான். கட்டாயப்படுத்தி ஊழியர்களை மோதவிட்டு ரத்தம் குடிப்பதும், அடியாட்களை வைத்துத் தாக்குவதுமே இரண்டு குடும்பங்களின் “வீரம்.”

இதைத் தொடர்ந்து தமிழகத்தின் சுவர்களில் பெரிது பெரிதாகச் சுவரொட்டிகள், ஊர்வலங்களை தினத்தந்தி கும்பல் ஏற்பாடு செய்து வருகிறது. ஆதித்தன் குடும்பம் கருப்புப்பணத்தை வாரி இறைக்கிறது. “ஆதித்தனாரை தமிழர் தந்தை என்று சொல்வதா? மானமுள்ள ஐந்து கோடி தமிழர்களுக்கும் ஒரே தந்தையா? எனக்கேட்டுத் தமிழ் இனத்தையே இழிவுபடுத்திய தினமலர் மீது நடவடிக்கை எடு!” “தமிழ் இனத்தை இழிவு படுத்திய தினமலரே மன்னிப்புக் கேள்!” தாய்க்குலத்தை இழிவு படுத்திய தினமலருக்கு எதிராக மக்கள் பேரணி!” “தமிழக அரசே தினமலர் மீது நடவடிக்கை எடு, அரசு விளம்பரங்களை, அரசு சலுகைகளை நிறுத்து!”

இப்படிப்பட்ட ஏராளமான சுவரொட்டிகள் தமிழர் பாதுகாப்பு பேரமைப்பு, தமிழ் இலக்கிய அணி, தமிழ் மாணவர் மன்றம் போன்ற “திடீர்” காகித அமைப்புகள் நாடார் பேரவை, உறவின் முறை சங்கம், வியாபாரிகள் சங்கம் போன்ற ஆதித்தன் சாதி அமைப்புகள், இவற்றின் தூண்டுதலோடு முக்குலத்தோர், யாதவர், சைவ வேளாளர், முத்தரையர் போன்ற சாதியினரது சங்கங்கள், சில முஸ்லீம் அமைப்புகளின் பெயரால் சுவரொட்டிகள், ஏராளமான சுவரொட்டிகள். அத்தனையும் ஆதித்தன் குடும்பத்தினுடைய அல்லது ஆதித்தன் சாதிவியாபாரிகளுடைய கருப்புப் பணம்.

ஏராளமான அரசியல் அனாமதேயங்கள், ஒட்டுப் பொறுக்கிகள், சினிமா கழிசடைகள், எழுத்துலக விபச்சாரிகள் தினமலரைக் கண்டித்து அறிக்கை—கோபாவேசம். இவர்கள் பங்கேற்ற பிரம்மாண்டமான பேரணி. தமிழ் இன உணர்வு பொங்கிவழிவதால் அல்ல, தினத்தந்தி குடும்ப ஏடுகள் கொடுக்கும் கீழ்த்தரமான பிரச்சாரங்கள், இல்லையானால் இருட்டடிப்பு செய்வோம் என்கிற உருட்டு மிரட்டல்கள் இவர்களை இழுத்து வந்தன. மத்திய அரசின் இந்தித் திணிப்புக்கு எதிராகவோ, ஈழத்தமிழர்களின் படுகொலையைக் கண்டித்தோ இந்த சுயநலவாதிகளில் எவ்வளவு பேர் பொங்கி எழுந்தனர்?

ஆதித்தன் குடும்பமும் அவர்களது சாதி வெறியர்களும் இத்தனை கூச்சல் போடுவதற்கு என்ன காரணம்? திருச்செந்தூர் பஸ் நிலையத்துக்கு 1969இலிருந்து “தியாகி பகத்சிங்” பெயருள்ளது. அந்த பஸ் நிலையத்தைப் புதுப்பித்து விட்டு பகத்சிங் பெயர் பலகையைப்பிடுங்கிவீசிவிட்டு “கல்வித் தந்தை அமரர் சி. பா. ஆதித்தனார் பேருந்து நிலையம்” என்று சென்ற ஆண்டு மாற்றி விட்டனர். இதை எதிர்த்து காங்கிரசாரும், “சுதந்திரபோராட்டதியாகிகளும்” போராடி வருகின்றனர். சென்ற மாதம் மதுரை வந்த ராஜீவ்காந்தி காங்கிராசார் கோரிக்கைப்படி பகத்சிங் பெயரையே வைக்கும்படி உத்திரவு போட்டும் அதிகாரிகள் அமுலாக்கவில்லை. ஆதித்தன் குடும்பச் செல்வாக்கே காரணம். பஸ் நிலையப் பெயர் மாற்றத்துக்கு எதிராக தினமலர் தொடர்ந்து பிரச்சாரம் செய்கிறது.

சென்ற மாதம் தினமலர் வார இதழில் பெயர் குறிப்பிடாமல் ஆதித்தன் குடும்ப ஏடுகளைக் கிண்டல் செய்து ஒரு கட்டுரை வந்தது. அதில் “இதன் ஸ்தாபகரைத் தமிழர் தந்தை என்று கூறிக் கொள்வது இதன் வழக்கம். மானமுள்ள ஐந்து கோடி தமிழர்களுக்கும் ஒரே தந்தையா? கேட்கவே விரசமாக இல்லையா...விரசமே இதன் ஸ்பெஷாலிட்டி (தனிச்சிறப்பு)” என்று எழுதியது. இப்படி எழுதியது தான் தமிழ் இனத்தையும், தாய்க்குலத்தையும் இழிவு படுத்துவது என்று ஆதித்தன் குடும்பம் திருப்பிவிட்டுப் பிரச்சாரம் செய்கிறது.

விரசம்—ஆபாசம் என்பதில் தினமலர் - தினத்தந்தி இரண்டுமே போட்டி போட்டுக்கொண்டு தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழிப்பவையே. இரண்டுமே ஆளுங்கட்சிகளின் ஊதுகுழல்கள். அதே சமயம் தினமலர் காங்கிரசையும், தினத்தந்தி எம்ஜிஆர் கட்சியையும் பிரதானமாக ஆதரித்துப் பொய்ப்பிரச்சாரம் செய்வதே அவற்றின் வேலை. தமிழகப் பத்திரிக்கைச் சந்தையில் வியாபாரப் போட்டி, மலிவான விளம்பரம், செல்வாக்கையும் பலத்தையும் காட்டுவது, அதனால் அரசச் சலுகைகளை வாரிச் சுருட்டிக் கொள்வது— இவையே இப்போது நடக்கும் தினமலர்—தினத்தந்தி தகராறுக்கு அடிப்படை. மற்றபடி பகத்சிங் பெயரை மாற்றுவதால்

> அன்னை இந்திரா, தேசபிதா காந்தி, மாமா நேரு என்று சொல்கிறார்களே! இதிலெல்லாம் விரசத்தைப் பார்க்க தினமலர் தவறுவதேன்? தேசபிதா என்றால் 80 கோடி மக்களின் தந்தையா? நேரு மாமா என்றால் யாருக்கு மாமா?



படிப்பகம்

www.padippakam.com



*'தினமலர்' என்கிற கண்டித்து ஊர்வலம் புறப்பட்ட இடத்தில் பாக்யராஜ், ராதிகா, டிஸ்கோ சாந்தி ஆகியோர் நின்றிருந்த காட்சி.*

இந்தித் திணிப்பை எதிர்த்தும், இந்திய ராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்தும் இந்தக் கழிசடைகளின் தமிழின உணர்வு பொங்கி எழாதது ஏன்?

தேசிய உணர்வுகளைப் பாதிப்பதாக தினமலரும் தமிழரை இழிவு படுத்தி விட்டதாக தினத்தந்தியும் குதிப்பது வெறும் பித்தலாட்டமே.

பகத்சிங் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உயிரைத் தியாகம் செய்து போராடியதை அங்கீகரிக்க மறுத்ததோடு கொச்சைப்படுத்தி எதிர்த்தவர்களே இந்த காங்கிரசார். இப்போது காந்திய வேஷம் கலைவதால் பகத்சிங் போன்றவர் தியாகத்தின் கீழ் தமது "தேசியத்தை" நிலைநாட்ட முயலுகிறார்கள். அது மட்டுமல்ல ஆதித்தனைத் "தமிழர் தந்தை" என்று சொல்வதை விரசமாகக் கருதும் தினமலர் கும்பலின் தேசிய யோக்கியதை என்ன? அன்னை வைஜயந்திமாலா, அம்மா மரகதம் சந்திரசேகர் முதல் அன்னை இந்திரா வரை சொல்லிக் கொள்கிறார்களே! தேச ப்பிதா காந்தி, மாமா நேரு என்று சொல்கிறார்களே! தேசப்பிதா என்றா 80 கோடி இந்திய மக்களின் தந்தை; மாமா என்றால் யாருக்கு மாமா? இதிலெல்லாம் விரசத்தைப் பார்க்கத் தவறுவது ஏன்? இப்படி மக்கள் விரும்புகிறார்களோ இல்லையோ பட்டங்கட்டிக் கொள்வது திராவிடக் கட்சிகளுக்கு மட்டுமல்ல, தேசியக் கட்சிகளுக்கும் ஒட்டுப் பொறுக்கவும், தங்களுடைய அவமானகரமான கடந்தகாலத்தை மூடிமறைக்கவும் கையாளும் தந்திரமே.

சுயவிளம்பரம் ஓட்டுப் பொறுக்கிகளுக்கு வெட்கக்கேடான விதிவிலக்கற்ற குணாம்சம். தேசியப் பாரம்பரியம் பாரட்டும் துக்ளக், தினமலர் போன்ற பார்ப்பனக் கும்பல், இது ஏதோ திராவிடக் கட்சிகளுக்கு மட்டுமே உரிய கீழ்தரமான ரசனை என்பதாக கிண்டல் செய்கின்றன. அதிலே ஒரு கடைகோடிக்குப்போய் தினமலர் எழுதி உள்ளது.

திருச்செந்தூர் பஸ் நிலையத்துப் பிரச்சினை, நெல்லைமாவட்டத்தில் நடக்கும் மறவர்—பிள்ளைமார் சாதியின் பண முதலைகளுக்கும் நாடார் சாதி பணமுதலைகளுக்கும் நடக்கும் அரசியல் போட்டியின் விளைவுதான். குறிப்பாக ஏ.பி.சி வீரபாகு மற்றும் ஆதித்தன் குடும்பத்துக்கு இடையிலான ஆதிக்கப் போட்டிதான்.

தன் நெற்றியிலேயே அசிங்கத்தை வைத்துக் கொண்டு மற்றவர்களை கேலி செய்யதுக்ளக்குக்கோ, தினமலர் கிருஷ்ணமூர்த்தி போன்றவர்களுக்கு யோக்கியதை இல்லைதான். ஆனால் தமிழர் தந்தை என்று சொல்லிக் கொள்வதற்கு ஆதித்தனுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று தட்டிக் கேட்க தமிழ் மக்களுக்கு உரிமை உண்டு. பகத்சிங்கோடு ஒப்பிடக் கொஞ்சமும் அருகதையில்லாத அரசியல் சந்தர்ப்பவாதியும், கருப்புப் பண—காரியவாதியும்தான் ஆதித்தன்.

அண்ணாத்துரை திராவிட இன உணர்வைத் தி.மு க.வின் அரசியல் பிழைப்புவாதத்துக்கு ஆதாயமாகக் கொண்டார் என்றால் ஆதித்தன் 'நாம் தமிழர்'என்கிறஒரு நபர் கட்சியமைத்துத் தனது பதவிக்கும் குடும்ப நலனுக்கும் ஆதாயமாக்கிக் கொண்டார். தினத்தந்தி தொடங்கி நடத்தியதே தமிழர் அறிவுக் கண் திறந்த சீரிய தொண்டாக சொல்லிக் கொள்கிறார்கள். தமிழக வாசகர்களை செக்குமாடுகளாக்கி வைத்துக்கொள்வதற்கான ஆளும்வர்க்க ஆயுதமே தினத்தந்தி. மூளையே இல்லாத முண்டங்களுக்கு என்றே தினத்தந்தி நடத்துகிறேன் என்று ஆதித்தன் தன்னிடம் சொன்னதாக எம்ஜிஆர் முன்னிலையில் "தாய்" பத்திரிக்கை வெளியீட்டு விழாவில் "திருக்குறள்" முனுசாமி பிரகடனப் படுத்தினார். பத்திரிக்கை நடத்தி அறிவுக்கண் திறந்ததாகக் கூறும் ஆதித்தன் அமைச்சரானதும் தனக்குப் போட்டியான 'நவமணி' நாளேட்டை இழுத்து மூடி தொழிலாளர்களை நடுத்தெருவில் நிறுத்தியதுதான்.

கருணாநிதியுடன் கூட்டுச் சேர்ந்து அமைச்சர் பதவி அனுபவித்த பிறகு, நெடுஞ்செழியன், பண்ருட்டி, ப.உ.ச போல கடைசியில் எம்ஜிஆருடன் ஒட்டிக் கொண்டார். "கல்வித் தந்தை" என்கிற நாடார் மகாஜன பட்டமே கூட கருப்புப்பணத்தைப் பதுக்குவதற்காக, அறக்கட்டளை மோசடிகளில் ஈடுபட்டதற்கான பரிசுதான். அந்த அறக்கட்டளையின்கல்வி நிலையங்களும் தமது சாதியினருக்கானதாகவும், கொள்ளையிடுவதற்காகவும் தான்.

பிரச்சார பலமும், பணபலமும், அரசியல் செல்வாக்கும் இருப்பதனால் இன்று ஆதித்தன் ஒரு தமிழர் தலைவர் ஆகிவிட முடியும் என்றால் இதே பலத்தைக்கொண்டு தினமலர் நிறுவனர் ராமசுப்பையர் நாளை தேசத்துக்கு ஒரு "இது" வாகி விட முடியும்.

அரசியல் அநாமதேயங்கள், ஓட்டுப் பொறுக்கிகள், சினிமாக் கழிசடைகள், எழுத்துலக விபச்சாரிகள் தினமலரைக் கண்டித்து ஊர்வலம் போனதற்குத் தமிழின உணர்வு பொங்கி வழிந்ததல்ல காரணம். தினத்தந்தி குடும்ப ஏடுகள் தமக்குப் பிரச்சாரம் கொடுக்காமல் இருட்டடிப்பு செய்து விடும் என்ற அச்சம்தான் காரணம்.

சிவராஜ்—வே. ஜெயகுமார்



படிப்பகம்

www.padippakam.com



# எட்டிப்பாருங்கள்...!



கொடிது கொடிது பாதுகாப்பு கொடிது!

ராஜீவ்காந்தி வீட்டில் மிகமிக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் போடப்பட்டுள்ளன. காவலர்கள் பணியை ஒழுங்காகச் செய்கிறார்களா இல்லையா என்று வேவு பார்க்க ஆங்காங்கே டி.வி.கேமிரா பொருத்தப்பட்டிருக்கிது. இடமும் வலமும் அலையும் அந்தக் காமிராக்கள் காவலாளிகள் எந்த அளவு பொறுப்போடிருக்கிறார்கள் என்பதை வீட்டுக்கு உள்ளேயிருந்து கண்காணிக்கும் அதிகாரிகளுக்குத் தெரிவித்துவிடும்.

பாவம் அந்தக் காவலாளிகள்! தேநீர், சமோசா வேண்டுமென்றாலும் படாத பாடுபட்டுச் சாப்பிடுகிறார்கள். காமிராலென்ஸ் தன்னை விட்டு நகர்ந்ததுமே குறிப்பிட்ட காவலாளி சமோசாவைக் கடிக்கிறார், தேநீர் குடிக்கிறார். மறுபடி காமிரா இவர்பக்கம் வந்ததுமே விறைப்பாக— 'அட்டென்சனில்!' நிற்கிறார். சில சமயங்களில் அவசர அவசரமாக வாயில் போட்ட சமோசா துருத்திக்கொண்டு 'உம்ம்' மென்று வாயில் இருக்கும். சமாளிக்க வேண்டியதுதான்!

எஜமானுக்குமணிக்கு மணிபுத்தம் புதிய ருசியான உணவு வகைகள்; காவாலாளிக்கோ தேநீருக்குக் கூட திண்டாட்டம். எல்லாம் எஜமானின் பாதுகாப்புக்காகவாம்!

பிரதமரின் பாதுகாப்பு எல்லா இடங்களிலும் தொல்லை தருகிற பிரச்சனை. பிரதமர் போகிறார்— சாலைப் போக்குவரத்தே நின்றுவிட வேண்டும்; பிரதமர் பாராளுமன்றத்துக்குக் காலையில் வருகிறார்— அவர் உள்ளே நுழைந்த பிறகுதான் மற்ற மந்திரிகள், எம். பிக்கள் நுழையலாம். எல்லா அமைச்சரகத்திலும் கண்டிப்பாகப் பலமுறை சோதனைகள் நடக்கிறது; மத்தியச் செயலகப் பாதுகாப்பு வட்டாரத்தில் வேலை செய்கின்ற எல்லா மத்திய அரசு ஊழியர்களுக்கும் கட்டாய சோதனை.

போதாக்குறைக்கு இப்போது புதியதோர் ஏற்பாடு. ஊழியர் எல்லோரும் மார்பின் இடதுபுறம் சங்கிலியில் கட்டிய அடையாள அட்டையைத் தொங்கவிட வேண்டும். இது செப்டம்பர் 1முதல் அமுலுக்கு வந்துவிட்டது. தவறினால், ஒழுங்கு நடவடிக்கை; வருடாந்திர ஊதிய உயர்வு (இன்க்ரிமெண்ட்) நிறுத்தப்படும்; ஊழியர் நன்னடத்தைக் குறிப்பேட்டில் கறுப்புப் புள்ளி விழும்... கபர்தார்! எச்சரிக்கை!... இதற்காக ஆகும் செலவு மட்டும் 10 லட்ச ரூபாய். மக்கள் வரிப்பணம் எந்தச்சாக்கடையில் எல்லாம் போகிறது தெரிகிறதா? ●

கடவுள்களின் குடியிருப்பு போதைகளின் கடைவிரிப்பு!



இமாசலப் பிரதேசம்—குலு பள்ளத்தாக்கு (பொருள்: கடவுள்களின் பள்ளத்தாக்கு) — போதை மருந்துகளால் நாசமாகிறது. லட்ச ரூபாய் கொடுத்து ஒரு கிலோ வெள்ளை ஹீராய்ன் (மார்ஃபினிலிருந்து தயாரிக்கப்படும் போதைப் பொருள்) வாங்குகிறார்கள் சுற்றுலா என்ற பெயரில் இங்கே தங்கி 'மோட்சம்' காண வந்திருக்கும் ஹிப்பிகள். இதன் மலிவுப் பதிப்பு 'பழுப்புச் சர்க்கரை' எனப்படுகிறது.

பெரிய வீடுகளைஹிப்பிகளுக்கு வாடகைக்கு விட்டுக் கொழுத்த பணம் சம்பாதிக்கும் பணக்காரர்கள், வியாபாரிகள் இதில் கள்ளக் கூட்டு. மாமூலோடு ஒதுங்கிக்கொள்ளும் போலீஸ் இதில் கையாள்.

பள்ளத் தாக்கின் சிறுவர்கள் இதனால் கெட்டுப் போகிறார்கள். 1000 ஹிப்பிகள் போதை ஏற்றிக் கொண்டு "நிர்வாணம் தேடுகிறேன்" என்று கோயில்களில் நிர்வாணமாகக் கூத்தடிக்கிறார்கள். இளைஞர்களைச் சீரழிக்கும் போதைக்கும், ஹிப்பி கலாச்சாரத்துக்கும் எதிராக, ஏறெடுத்தும் பாராமல் ஆட்சி சுகத்தில் கிறங்கிக் கிடக்கும் அரசாங்கத்துக்கு எதிராக இப்போது மக்களே தன்னெழுச்சியாகப் போராட ஆரம்பித்திருக்கிறார்கள். ●



படிப்பகம்

## நசீம் ஹிக்மத் போராடிய மண்ணில் புரட்சி தொடருகிறது

துருக்கி போலீஸ் நிலையம் ஒன்றில் 26 வயதே நிரம்பிய பெண் அவளது குழந்தையோடு 20 நாட்கள் தொடர்ந்து சித்திரவதை செய்யப்பட்டாள். மே தினத்துக்கு முந்திய நாள் கம்யூனிஸ்டு பிரசுரங்களை விநியோகித்தாள் என்பதுதான் குற்றச் சாட்டு.

இதற்காகவே தனி நாற்காலி தயாரித்திருந்தார்கள். அதில் அரைகுறை ஆடையோடு அமர்த்தி மின்சாரம் பாய்ச்சினார்கள். மெலிதான அளவிலிருந்து கடுமையான அளவு வரை. இரு சித்திரவதைகளுக்கிடையில்தான் விசாரணை நடத்தப்பட்டது. ஆணிகள் தலைகீழாக அடிக்கப்பட்ட பிரம்பால் அவளது உடல் விளாசப்பட்டது. அடிபட்ட இடத்தில் வலியும் வேதனையும் அதிகமாவதற்காகவே குளிர்ந்த நீரை வீசினார்கள். மிக மோசமான 'மூன்றாம் தரமான' சித்திரவதைகளை நடத்தினார்கள்.

உள்ளூர் ஏடுகளிலும், சர்வதேச ஏடுகளிலும் அறிக்கைகள் இவற்றை அம்பலப்படுத்தின. அப்படியும் சித்திரவதைகள் நிற்கவில்லை. அவ்வாறு செய்தபோலீஸ் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் வாய்ச் சவடால் அறிவிப்புகளைக் கொடுத்தது; கொடுத்து வருகிறது.

துருக்கி போலீஸ் தலைவன் சர்ஃபெட் அரிகான் பெதுக் தனது சகாக்களைப் பாதுகாக்கிறான். எல்லாக் குற்றங்களிலிருந்தும் அவர்களை விடுவித்து விடுகிறான். 1980-லிருந்து இதுவரை 196 சித்திரவதைச் சாவுகளும், 86 போலீஸ் நிலையத் தற்கொலைகளும் நடந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

அந்த 26 வயதுப் பெண்ணைப் போலவே பல ஆண்டுகள் சித்திரவதையை அனுபவித்தான் துருக்கி நாட்டுப் புரட்சிக்கவி நசீம் ஹிக்மத். சிறையிலிருந்து கொண்டே சீனச் செம்படை வெற்றிநடை போடுவதைப்பற்றி நெஞ்சு மகிழ்ச்சியால் துள்ள வாழ்த்தினான். சித்திரவதைகள்—வீரம் தியாகம் மிக்க கம்யூனிஸ்டுகளை அடக்கிவிட முடியாது. துருக்கிப் புரட்சி தொடரும்!

## இளமை உலகம் நொறுக்கப்படுகிறது!

கேரளத்தின் கிராமப்புறம். வர்க்காலா அருகே அய்ரூர். முக்கியச் சாலை. காலை 9 மணி. பேருந்து நிறுத்தம் ஒன்றில் பள்ளி—கல்லூரி மாணவ, மாணவிகள், ஆசிரியர்களின் கூட்டம். அருகே சந்தைக்கடை சந்தடிகள்.

தொலைவில் வரும் பேருந்துக்காக அனைவரும் பரபரப்பாக அங்கேயே பார்க்கின்றனர். அதே நேரத்தில் பதினைந்து, பதினாறு வயது மதிக்கத்தக்க ஒரு பெண் சாலை கடந்து நிறுத்தத்துக்கு விரைந்து செல்கிறாள்.

சாலை ஓரத்திலிருந்து ஒரு அம்பாசிடர் கார் நகருகிறது. ஒரு சிலர் அதைப் பார்க்கிறார்கள். பெண்ணைக் கடக்கும்போது கார் குலுங்கி நிற்கிறது. மறுகணம் ஓர் இளைஞன் காரிலிருந்து இறங்கி அவளை இழுத்துக் காருக்குள் தள்ளுகிறான். கார் விரைவாக நகருகிறது.

அந்தப் பெண் கதறுகிறாள்; "என்னை விடு... காப்பாத்துங்க யாராவது காப்பாத்துங்க..." சுற்றி இருந்தவர்கள் என்ன நடக்கிறது என்று ஊகிப்பதற்குள் கார் முன்னே பாய்ந்து சென்று விடுகிறது.

நின்றிருந்தவர்களுக்கு அதிர்ச்சி. இப்படியும் நடக்குமா—சினிமா போல? அவர்களின் முகங்களில் திகைப்பு கவ்வியிருந்தது. தெருவில் அனாதையாக உருண்டு கிடந்த டிபன் பெட்டி; சிதறிய புத்தகங்கள் இரண்டே சாட்சியங்கள். நடக்கக் கூடாதது நடந்து விட்டது—ஒரு சிலர் சுயநினைவு வர இயங்கினார்கள்; ஒரு வண்டியைப் பிடித்துக் கொண்டு காரைத் துரத்தினார்கள்; அது எப்போதோ எங்கேயோபோய் விட்டது.

போலீசுக்குச் சொன்னார்கள். பெண்ணைக் கடத்தியவர்கள் அவளைக் கற்பழித்துக் கசக்கிப் போட்ட பிறகே சம்பந்தப்பட்ட வீட்டைக் கண்டு பிடித்தது போலீஸ். வளைகுடா நாட்டில் பிழைக்கப் போயிருக்கிற ஒருத்தன் மனைவிதான் கடத்தல் கும்பலுக்குத் தலைவி—அப்புறம் கண்டு பிடித்தார்கள்.

ஓர் இளம் பெண்—அது உங்கள் மகளாக, சகோதரியாக இருக்கலாம்—தெருவில் பாதுகாப்பாக நடக்க முடியாது என்ற அளவுக்குச் சீரழிவுகள் சமூகத்தில் மண்டி விட்டன; நடுத்தெருவில் அக்கிரமம் நடந்தாலும் உடனே செயல்பட முடியாத அளவுக்கு மக்கள் ஒதுங்கி ஒதுங்கி மரத்துப் போய்விட்டார்கள். பார்க்கின்ற சினிமா, டி.வி., கேட்கின்ற பாடல்கள் அப்படி ஆக்கியிருக்கின்றன. சமூகத்தில் இப்படி அக்கிரமங்கள் நடந்தால் யாருக்கோ நடக்கிறது என்று இனிமேலும் சும்மா இருப்பீர்களா? சொல்லுங்கள்!

## மால்டாவில் வெள்ளம்! 'மார்க்சிஸ்டு'களுக்கோ கொண்டாட்டம்!

வரலாறு காணாத வகையில் மே. வங்கத்தின் மால்டா மாவட்டத்தை வெள்ளம் சூழ்ந்து நூறாண்டுகளாகக் காணாத பெரு வெள்ளம் என்று ஆளும் 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசுவே மதிப்பிட்டார்.

மால்டா மாவட்டத்தை வெள்ளம் சூழ்ந்த போது மக்களுக்காகவே 'அவதாரம்' எடுத்துள்ள 'மார்க்சிஸ்டு'கள் என்ன செய்தார்கள் தெரியுமா? எவன் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று துர்க்கா பூசை விழாவை கோலாகலமாக தலைநகரில் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்! மால்டா மாவட்டத்தை வெள்ளம் சூழ்ந்த நேரத்தில் தான் துர்க்கா பூசை (நவராத்திரி) யும் வந்தது.

அரசு அலுவலகங்களுக்கே விடுமுறை விட்ட பிறகு, நிவாரணத் துறையினர் மட்டும் ஓடிவந்து வேலை செய்வார்களா என்ன! வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் உண்ண உணவோ, குடிக்க நீரோ, புகலிடமோ மருத்துவ வசதியோ இன்றி பரிதவித்தனர். எப்படியோ ஒரு வழியாக கொண்டாட்டங்கள் முடிந்த பிறகு மெதுவாகவே நிவாரண வேலைகள் துவக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிகமாக குடிசை போட பாலீதீன் பாய்களைக் கொடுத்தது அரசு. பலருக்கு இதுகூட கிடைக்கவில்லை. வெள்ளத்தில் அடித்து வரும் மரங்களையும், குப்பை கூளங்களையும் கொண்டு மேடான நெடுஞ்சாலையின் ஓரத்தில் தற்காலிகமாக குடிசை போட்டுக் கொண்டு குளிரில் விறைத்து நிற்கிறார்கள்.

இதிலே கொடுமை என்னவென்றால் கார்டோல்லா கிராம மக்களுக்கு வெள்ளத்தை வெளியேற்ற பம்பு செட்டுகளை நிவாரணக் கமிட்டி தரவேயில்லை. ஏனென்றால் இவர்கள் பஞ்சாயத்து தேர்தலில் ஆளும் 'மார்க்சிஸ்டு'களுக்கு எதிராக வாக்களித்தார்களாம்! லக்ஷ்மிபூர் மக்களோ, "நாங்கள் தேர்தலில் 'மார்க்சிஸ்டு' கட்சிக்கு ஓட்டுப் போட்டோம். எங்கள் தொகுதி 'மார்க்சிஸ்டு' வேட்பாளர் சைலீன் சர்க்கார் நகர்ப்புற மேம்பாட்டு மந்திரியானார். வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் எங்களை அவர் இதுவரை எட்டிக்கூட பார்க்கவில்லை" என்று அங்கலாய்க்கிறார்கள். அவர் ஊரில் இருந்தால் தானே? அவர் மட்டுமா, மாவட்ட கட்சி செயலாளரிலிருந்து எம்.எல்.ஏ.க்கள், முக்கிய பிரமுகர்கள்வரை எல்லாருமே துர்க்கா பூசையை சிறப்பாகக் கொண்டாட தலைநகருக்கு ஓடிவிட்டார்கள். மக்கள் மீது என்னே கரிசனம்! ●

www.padippakam.com

# பொய்களுக்கு எதிராக...

இந்திய ராணுவ அதிகாரிகள் காட்டிய இடங்களை மட்டும் பார்த்து, அதிகாரிகளிடம் மட்டும் பேட்டி எடுத்து "எல்லாம் நல்லபடியாகவே நடக்கின்றன" என்று அவர்களுக்கு வாலைக்குழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மத்தியில்—

'இந்தியா டுடே' ஆங்கில பத்திரிக்கையின் புகைப்படக்காரர் ஷியாம் தேக்வானியும் வேறு இரண்டு பத்திரிக்கையாளர்களும் புலிப்படையுடன் தொடர்பு கொண்டு அவர்கள் உதவியுடன் போர்முனைக்கே சென்று நடந்த விஷயங்களை நேரில் கண்டு எழுதியுள்ளனர்.

அந்தப் புகைப்படங்களையும், தாம் நேரில் கண்ட காட்சிகளை விவரித்திருக்கும் அவரது கட்டுரையின் தமிழாக்கத்தையும் வெளியிடுகிறோம்.

மீசையரும்பாத முகம், இடுப்பில் ஒரு கைலி அல்லது சாதாரண பாண்ட், செருப்பணியாத வெறுங் கால்கள்— இவர்களை உலகின் நான்காவது பெரிய ராணுவத்தை எதிர்த்துப் போரிடும் புடம்போட்ட கொரில்லா போர்வீரர்கள் என்று நிச்சயமாக யாரும் சொல்லமுடியாது. பெரும்பாலோர் 20 வயதுக் குட்பட்டவர்கள், இளம்பெண்கள்— யாருக்கும் 30 வயதுக்கு மேல் இல்லை. தங்கள் கையில் வைத்திருக்கும் அதிபயங்கர ஆயுதங்களை அவர்கள் கையாளுகின்ற லாகவம், கண்களில் ஒளிவிடும் புரட்சித்தீயும், அந்த வட்டாரத்தின் புவியியலைப் பற்றிய அவர்களது ஆழமான அறிவு, மரணத்தைத் துச்சமாகக் கருதும் அவர்களின் வீரம்—இவையெல்லாம் பார்க்கும் போதுதான் 2000 பேர் அடங்கிய இந்திய அமைதிப்படையை இவர்கள் இப்படி படாதபாடு படுத்துகிறார்கள் என்பது புரிகிறது.

உக்கிரமான போரின் மத்தியில் நான் புலிகளுடன் கழித்த 5 நாள் அனுபவத்திலிருந்து சொல்கிறேன். அவ்வப்போது அவர்களிடம் தென்பட்ட மனித உயிர்களைப் பற்றிய உணர்ச்சியற்ற, குரூரமான அணுகுமுறைகளுக்கிடையிலும் கொஞ்சம் தயக்கத்துடனாவது அவர்கள்மீது ஒரு மரியாதை வரத்தான் செய்கிறது. வயிற்றில் குண்டடிபட்ட ஒரு விடுதலைப் புலி தனக்கு சிகிச்சை அளிப்பதற்காக தோழர்களின் போர்த் தாக்குதல் நின்று போய்விடக்கூடாதே என்பதற்காக வெகு நிதானமாக சயனைடு மாத்திரையை விழுங்குவதைப் பார்த்தேன். பிரமிக்கவைக்குமளவு அழகான ஒரு இளம் பெண் ஒரு கையில் துப்பாக்கியும் இன்னொரு கையில் சீப்புமாக மிகுந்த பெருமிதத்துடன் நட்டநடுச் சாலையில் நின்றிருப்பதைப் பார்த்தேன். மிகப் பெரும் இந்திய ராணுவத்தால் தாம் கொல்லப்படுவோம் என்று நிச்சயமாகத் தெரிந்தும்கூட அவர்களிடம் ஒளிவிட்ட நம்பிக்கையும் உற்சாகமும் தனிச்சிறப்பானவை.

ஒரு முழு மூச்சான போரின் நடுவில் அவர்கள் சிறுவர்களைப் போலத் தமக்குள் பேசிச் சிரித்துக் கொண்டும் அரட்டையடித்துக் கொண்டும் இருந்ததைப் பார்த்த

சாவகச்சேரி : கடைவீதியில் இந்திய ராணுவ ஹெலிகாப்டர் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட பொதுமக்கள். "இவர்கள் என்ன குற்றத்திற்காகக் கொல்லப்பட்டார்கள்?"



www.padippakam.com

போது காண்பது கனவா இல்லை நனவா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டது. பணயக் கைதிகளாக புலிகள் பிடித்து வைத்திருந்த 15 இந்திய ராணுவ சிப்பாய்களை இருந்த இடத்திற்கு என்னை அழைத்துச் சென்ற அன்சார் (வயது—18) எனது கண்களைக் கட்டி அழைத்துச் செல்ல நேரிட்டமைக்காக வருத்தம் தெரிவித்தான். என் கண்கள் கட்டப்பட்டிருக்கும் குறையை நான் உணராமலிருப்பதற்காக 2 மணி நேரம் கொட்டும் மழையில் வண்டியை ஓட்டியபடி பாட்டுப் பாடிக் கொண்டே வந்தான். சிரித்துக் கொண்டே என்னை வரவேற்ற நிஷாந்தன் "ஒரு வழியாக இப்போதுதான் உண்மையான யுத்தமே நடத்துகிறோம்" என்றான்—ஏதோ சிங்கள ராணுவத்துடன் இத்தனை நாளும் நடந்த சண்டையெல்லாம் பயிற்சிக் காலத்தைப் போல.

ஹெலிகாப்டரிலிருந்து குதித்த 18 இந்திய சிப்பாய்களை புலிகள் சுட்டு வீழ்த்திய இடமான கொக்குவிலுக்கு நான் சென்றபோது பாபுவும் (18) கீதனும் (17) மிச்சமிருக்கும் இரண்டு சிப்பாய்களை யார் சுடுவது என்று தமக்குள் விவாதம் செய்து கொண்டிருந்தனர். புலிகளின் அந்தத் தாக்குதல் நடந்த சில நிமிடங்களில் நான் அங்கே போய் விட்டேன். மீதமிருந்த 2 இந்தியச் சிப்பாய்களைத் துப்பாக்கி மழையில் புலிப்படை கொரில்லாக்கள் துளைத்தெறிந்ததைக் கண்ணால் பார்த்தேன்— இது போன்ற காட்சியை இனி ஒருமுறை நான் காணப் போவதில்லை. நாலாபுறமும் தோட்டாக்கள் சீறிப் பாய்ந்து கொண்டிருந்தன. அதைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் கையில் ஆயுதம் எதுவுமில்லாமல் ஒரு இளைஞன் எலியைப் போல குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கொண்டிருந்தான். ஒவ்வொரு இந்திய சிப்பாயும் சுடப்பட்டு வீழ்ந்தவுடனே குண்டடிபட்ட இந்திய சிப்பாயிடமிருந்த துப்பாக்கியையும் வெடி மருந்தையும் சேகரித்துக் கொண்டிருந்தான். பரபரப்பான அந்தச் சூழ்நிலையை நினைத்துப் பார்த்தால் அவர்களுக்கு மனித வேட்டை நடத்தும்வெறி பிடித்து விட்டதோ என்று அஞ்சினேன்.

சில நேரங்களில் அந்தக் காட்சி சிறுவர் குழாம் ஒன்று திருடன்—போலீஸ் விளையாட்டு விளையாடுவதைப்போல இருந்தது. ஒரு வேறுபாடு என்னவென்றால் இங்கே தோட்டாக்கள் உண்மையானவையாக இருந்தன. சில நேரங்களில் அவர்கள் வெறிகொண்டவர்கள் போல நடந்து கொண்டார்கள். பிணங்களின் சட்டைப் பைகளில் கையைவிட்டு சாக்லெட்டுகளை எடுத்தார்கள்; சாலையில் கிடக்கும் பிணங்கள்மீது பிணங்களைக் காலால் நெட்டித் தள்ளிவிட்டுப் போனார்கள்,

உலகின் பலம் வாய்ந்த ராணுவங்களில் ஒன்றை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கிறோம் என்று எந்த சந்தர்ப்பத்திலும் நினைத்ததாகத் தெரியவில்லை. சொல்லப் போனால் நிலைமை நேர் எதிராகத்தான் இருந்தது. "எங்கள் புலிக் குட்டிகளில் யாருடன்வேண்டுமானாலும் இந்திய ராணுவ சிப்பாய்கள் 'ஒத்தைக்கு ஒத்தை' மோதிப் பார்க்கட்டும். நாங்கள் வென்று காட்டுவோம்" என்றார் ஒரு விடுதலைப் புலி. நகர்ப்புற கொரில்லா யுத்தத்தில் இந்திய அமைதிப் படைக்குப் பயிற்சி கிடையாது. ஆனால் புலிப்படையில் பலருக்கு வாழ்க்கையே அதுதான். இரண்டு வார காலம் போர் புரிந்தபின் அவர்களுக்கு இந்த அளவு நம்பிக்கை வருவதற்கு அதுதான் காரணம். அவர்களுக்கே உரித்தானசயனைடு குப்பிகளை இப்போதெல்லாம் அவர்கள் சட்டைக்குள்ளே மறைத்துக் கொள்வதில்லை. சட்டைக்கு மேலேயே தொங்கவிட்டுக் கொள்கிறார்கள்.

## இந்திய விமானப்படை சாவகச்சேரியில் ஹெலிகாப்டரிலிருந்து துப்பாக்கிச்சூடு நடத்தியபோது

அக்டோபர் 24ம் தேதி வவுனியாவில் நான் புலிகளைச் சந்தித்து என்னை யாழ்ப்பாணத்திற்கும் போர்முனைக்கும் அழைத்துச் செல்லுமாறு கேட்டதிலிருந்து, அக்டோபர் 28ம் தேதி நான் யாழ் தீபகற்பத்தை விட்டு வெளியேறும் வரையிலும் ஒரே ஒருமுறை மட்டுமே— இந்திய அமைதிப்படையின் துப்பாக்கிச் சூட்டை நான் எதிர்கொள்ள நேர்ந்தது. எல்லா சந்துபொந்துகளையும், உப்பங்கழிகளையும், மறைவிடங்களையும் புலிகள் எவ்வளவு நுணுக்கமாக அறிந்து வைத்திருந்தார்கள் என்பதற்கும், எதிர்பாராத விமானத்தாக்குதலைத் தவிர அமைதிப்படையின் மற்றெல்லா அசைவுகளையும் உடனுக்குடன் அறிவிக்கக்கூடிய அளவு அதிநவீன தகவல் தொடர்பு முறைகளை வைத்திருந்தார்கள் என்பதற்கும் இதுவே சான்று.

கண்கள் கட்டப்பட்ட நிலையில் இந்திய ராணுவப் பணயக்கைதிகள் இருந்த இடத்திற்கு நான் கொண்டு செல்லப்பட்டேன். அவர்களுக்கு விலங்கு பூட்டியிருந்தார்கள். நான் கேட்டுக் கொண்டதன் பேரில் விலங்குகளைக் கழற்றினார்கள்.

அக்டோபர், 26ம்தேதி யாழ்ப்பாணத்தின் புற நகர்ப்பகுதியில், புலிப்படையின் துணைத்தளபதி மாத்தையாவைச் சந்தித்தேன். நான் உள்ளே நுழைந்தபோது இந்திய அமைதிப்படையை எப்படி எதிர்த்துப் போரிடுவது என்று தன் படை அணிகளுக்கு விளக்கிக் கொண்டிருந்தார். அவர் புலிப் படையின் பயங்கரமான துணைத் தளபதியாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு உற்சாகமான வியாபாரியைப் போலக் காணப்பட்டார். அவர் என்னை முதலில் கேட்ட கேள்வி "நீங்கள் இந்தியராக வந்திருக்கிறீர்களா, அல்லது பத்திரிக்கையாளராகவா?" என்பதுதான்.

நான் உளவாளி அல்லஎன்று உறுதியாகத் தெரிந்தபின் தங்களது 'பொடியன்'களைப் பற்றியும் பேசினார். "இலங்கைத் தமிழர்களை இந்தியா நம்பவைத்துக் கழுத்தறுத்து விட்டது" என்றார். "கடைசி நபர் உயிரோடிருக்கும் வரை போராடுவோம்" என்றார். இருப்பினும் புலிப்படை விதிக்கும் நிபந்தனைகளின் அடிப்படையில் போர்நிறுத்தும் அறிவிக்கப்பட்டால் ஏற்றுக் கொள்வோம் என்றார். தன் மூன்று விரல்களை உயர்த்திக் காட்டியபடி 'மறைந்திரு' 'எதிர்பாராதபோது தாக்கு' 'வேகமாகத் தாக்கு' என்று தனது பொடியன்களுக்கு போதிக்கத் தொடங்கினார்.

யாழ் மக்கள் புலிப்படையை முழுவதுமாக அங்கீகரிக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. அதேபோல அவர்கள் இந்தியாவை வெறுக்கவில்லை; இந்திய அரசையும் அதன் பிரதிநிதிகளையும்தான் கடுமையாகத் தாக்கிப் பேசுகிறார்கள். இந்திய ஹை கமிஷனர் தீட்சித்தைத் தாக்குகிறார்கள்; ராஜீவைக்குள்ள நரி என்றும் ஜெயவர்த்தனாவை கிழட்டுநரி என்றும் ஆத்திரத்துடன் குறிப்பிடுகிறார்கள். சாவகச்சேரி விமானத்தாக்குதலுக்குப் பின் அவர்களது ஆத்திரம் எல்லைகடந்திருக்கிறது.

மாயமாய்த் தெரிகின்ற இந்த யுத்தத்தின் உண்மையான பலிகடாக்கள் அகதிகள்தான். எங்கு திரும்பினாலும் அகதிகள்; கொட்டும் மழையில் ஓடினார்கள்; சைக்கிளிலும், கை வண்டிகளிலும் பறந்தார்கள்; அதிர்ஷ்டம் உள்ளவர்கள் லாரிகளில் தப்பினார்கள். எங்கே போகிறோம் என்ற இலக்கே இல்லாமல் ஓடினார்கள். 1983இலிருந்து இசையைப்போல அவர்களது காதில் ஒலித்துக்கொண்டே இருக்கும் மரணத்தை அறிவிக்கின்ற துப்பாக்கி சத்தத்திற்குத் தப்பிஅவர்கள் அங்குமிங்கும் ஓடியபடியே இருந்தார்கள். பெண்களின் கண்ணீர் வற்றிவிட்டது போலும்! அவர்கள் மவுனமாக அழுதார்கள். "இந்த வெறியாட்டங்கள் எப்போது ஓயும்?" எல்லோரும் இந்தக் கேள்வியைத்தான் எழுப்பினார்கள். அந்தக்கேள்விக்குத்தான் யாராலும் பதிலளிக்க முடியவில்லை. ●



படிப்பகம்

www.padippakam.com

"யாழ் நகரில் விமானக் குண்டு வீச்சு நடத்தவில்லை. இந்திய சிப்பாய்கள் வீடுகளை கொள்ளை யடிக்கவோ, பெண்களைக் கற் பழிக்கவோ இல்லை. அமைதிப் படையின் சேவையை பல நிருபர் கள் வந்து பார்த்துச் சென்றிருக் கின்றனர். இலங்கையில் சமுக நிலை உருவாக வேண்டும் என்ப தைத் தவிர இந்திய அரசுக்கு வேறெந்த குறிக்கோளும் இல்லை. விடுதலைப் புலிகளுக்கு மக்கள் ஆதரவு இல்லை"—இப்படிப் பல வாறாக இந்திய அரசு செய்யும் பொய்ப் பிரச்சாரத்திற்கு பதிலடி தரும் வகையில் தி வீக், இந்தியா டுடே ஆகிய ஆங்கில ஏடுகளில் வந்துள்ள செய்தியாளர் அறிக்கை கள் மற்றும் பேட்டிகளிலிருந்து முக் கியமானவற்றைத் தொகுத்துத் தரு கிறோம்:



# பொய்களுக்கு எதிராக...

"யாழ்ப்பாண மருத்துவ மனைக்கும், அகதிகள் முகாமுக்கும் ஒரே ஒரு முறை போய் வந்ததுமே ஒன்று மிகத் தெளிவாகத் தெரிந் தது. பிரபாகரனின் புலிகளின ஆளுமைதான் இன்னமும் அங்கே முதலிடம் வகிக்கிறது. (இந்தியா கருதுவதைப் போல) யாழ் தமிழர் கள் புலிகளை ஆதரிப்பது எல்டிடி ஈயின் அச்சுறுத்தலினால் அல்ல."

"மெட்ராஸ் ரெஜிமெண்டைச் சேர்ந்த சிப்பாய் கோவிந்தன் சொன்னார்: யார் புலி யார் புலி யல்ல என்று சொல்வதே சிரமம். எல்லோருமே, அது ஆணோ பெண்ணோ—16 வயதுக்கு மேற் பட்ட ஒவ்வொருவருமே ஆயுதம் தாங்கியிருந்தார்கள். பயங்கரமான வர்கள். சின்னஞ்சிறு பெண்கள்கூட கவுனுக்குள்ளிருந்து துப்பாக்கி எடுத்து எங்களைச் சுட்டார்கள். எப்படி அவர்களோடு சண்டை போடுவது?"

"அடைக்கலமாதா கோயிலின் அருகே வாழும் மருத்துவர் ராம் ரத்தன் இந்திய ராணுவத்தினர் தனது வீட்டைச் சூறையாடிக் கொள்ளையடிப்பதை நேருக்குநேர் பார்த்தார். வீட்டில் வைக்கப்பட்டி ருந்த நகைகளை அவர்கள் திருடிக் கொண்டு போனார்கள்..."

"ஒர் உயர் அதிகாரி யாழ் நகரில் வீட்டுக்கு வீடு சோதனை செய்து கொண்டு வரும்போது வீடு ஒன்றில் நுழைந்தார். இளம் பெண் ஒருத்தியைத் தவிர வீடே வெறிச் சோடிக் கிடந்தது. வெளியே போவதற்காகத் திரும்பியபோது, அவள் மிகவேகமாகத்துப்பாக்கியை வெளியே எடுத்து அதிகாரியின் முது கைப் பார்த்துச் சுட்டாள்..."

"டி. விமலா. வயது 45. யாழ் ரயில் நிலையத்தின் அருகே வாழ் கிறார். எதிரெதிரே பாயும் துப்பாக் கிக் குண்டுகளில் மாட்டிக் கொள் வோமா என்று அச்சப்பட்டார். அகதிகள் முகாமுக்குப்போய் விட லாம் என்று கிளம்பியிருக்கிறார். அதே சமயம் அங்கு வந்த இந்திய ராணுவக் கும்பல் ஒன்று அவரது மகளைச் சீண்டியிருக்கிறது. அவர் களது மொழி அவருக்குப் புரிய வில்லை. ஆனால் எதற்காகக் கூப்பிடுகிறார்கள் என்பது அவர் களின் ஆபாசமான சைகைகளி லேயே தெரிந்து விட்டது..."

"படைகளை ஏற்றிச் செல்ல நாங்கள் ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தினோம். ஆனால் அவர்கள் புலிகளால் மறைந்திருந்து தாக்கப்பட்டார்கள். அதனால் மேலிருந்து எதிர்த்தாக்குதல் நடத் தச் சொல்லி நாங்கள் உத்தரவிட வேண்டியிருந்தது. —லெப்டினன்ட் ஜெனரல் தீபிந்தர்சிங்."

"யாழுக்குக் கிழக்கே 32கி.மீ தொலைவில் உள்ளது சாவகச்சேரி நகரம். இந்திய ராணு வத்தின்பீரங்கிகள் பொருத்தப்பட்ட எம்.ஐ 24 ஹெலிகாப்டர்கள் சாவ கச்சேரி மீதுகுண்டு மழைபொழிந்து நாசமாக்கின. இந்தியாடுடே நேருக்கு நேர் இதைப் பார்த்தது. இந்திய அரசாங்கம் முதலில் இதை மறுத்தது. பிறகு இந்தியப் பத்திரிக் கைகளில் நேரடி சாட்சியங்களின் அறிக்கைகள் வரும் என்று தெளி வாகத் தெரிந்து கொண்டதும், சம் பவம் நடந்ததைகடைசியில் ஒப்புக் கொண்டார்கள். இப்போது கூட இதுபோல் நடந்துள்ளது ஒரே ஒரு சம்பவம்தான் என்று சாதிக்கின்ற னர்..."

கொக்குவில் சுடுகாட்டில் ஹெ
இந்திய சிப்பாய்கள் அங்கேயே சுற்றி
புலிகளால் கொல்லப்பட்டனர்.
"இவர்கள் எந்த லட்சியத்திற்

விடுதலைப் புலிகள
இந்திய சிப்பாய்கள
"இவர்கள்





படிப்பகம்

www.padippakam.com



டரிலிருந்து குதித்த
க்கப்பட்டுவிடுதலைப்
யிர் துறந்தனர்?"

போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட
ந்க்காக சண்டையிட்டார்கள்?"



"மேஜர்—ஜெனரல் கல்கத், போரில் சாதாரண தமிழ் மக்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஒப்புக்கொண்டார். அமைதிப் படை நடத்திய குண்டுவீச்சில் 200 பேர் கொல்லப்பட்டார்கள் என்று எல்டிடிஈ கூறுவதாக அவர் சொன்னார். அது உண்மையாகவே இருக்குமானாலும், தீவிரமாகப் போடப்பட்ட இப்படிப்பட்ட யுத்தத்தில் இதுமிகப்பெரிய எண்ணிக்கைஅல்ல என்றும் அவர் சொன்னார்..."

"மிகப்பெரிய மிகத்தேர்ச்சி பெற்ற எண்ணிக்கையானாலும், (இந்தியாடுடே அந்த எண்ணிக்கை அரை ராணுவப்படையைத் தவிர 30,000 பேர் என்று கருதுகிறது.) ஏராளமான யந்திரத் துப்பாக்கிகளைப் பெற்றிருந்தாலும், தொழில் ரீதியில் பயிற்சி பெற்றிருந்தாலும், அமைதிப்படை 15நாள் தீவிரச் சண்டையில் மிகப்பெரிய அளவில் எதிர்பாராத விதத்தில் நிறைய இழப்புகளை அடைந்திருக்கிறது."

"முகாம்களிலிருந்த அகதிகளுடன் பத்திரிக்கையாளர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே ராணுவத்தினர் குறுக்கிட்டனர். தங்களுக்கு வேலைகள் இருப்பதன் காரணமாகப் பேட்டியைத் தொடர முடியாது என்று அறிவித்தனர். இந்திய ராணுவத் தலையீடு பற்றி யாழ் தமிழர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி பத்திரிக்கையாளர்கள் சுதந்திரமான, நியாயமான கணிப்புக்கு வருவதை அமைதிப்படையினர் விரும்பவில்லை என்று சந்தேகம் தோன்றுகிறது..."

"நான் (வீக் பத்திரிக்கையாளர்) யாழ் கோட்டைக்கு அருகில் இருந்த யாழ் போலீஸ் நிலையத்தின் பக்கம் சென்றபோது போலீஸ் நிலையத்தின் உள்ளே ஏதோ விசாரணை நடத்திக் கொண்டிருந்த ராணுவ அதிகாரி ஒருவர் குறுக்கிட்டார். "உங்களை யார் இங்கே அனுமதித்தார்கள்? நீங்கள் இங்கேயெல்லாம் நிற்கவே கூடாது" என்று விரட்டினார். போலீஸ் நிலையத்தைச் சுற்றி மராட்டா படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் வளையமாக நிறுத்தப்பட்டிருந்தனர். கைது செய்து போலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த இளைஞர்களுக்கு புலிகளுடன் ஏதாவது தொடர்பு உண்டா என்று விசாரித்துக் கொண்டிருந்தார். அவர்களில் பெரும்பாலோர் 20 வயதுக்குட்பட்ட இளைஞர்கள். அதில் சிலர் தங்களை விட்டுவிடுமாறு கெஞ்சியபடியே அந்த அதிகாரியைக் கை யெடுத்துக் கும்பிட்டனர். உடனே அந்த இளைஞர்களின் முகத்தில் பளார் பளாரென அறைவிழத் தொடங்கியது..."

"இதுவரை 700 விடுதலைப் புலிகளைக் கொன்று விட்டதாக அமைதிப்படை பீற்றிக் கொள்கிறது. ஆனால் மேஜர் ஜெனரல் கல்கத் ஒப்புக் கொள்கிறார்: 'எங்களிடம் சரியான கணக்கு இல்லை. முன்னேறிப் போவதில்தான் குறியாக இருக்கிறோமே தவிர, பிணங்களைக் கணக்கு பார்ப்பதற்காக எங்கும் நாங்கள் தங்கவில்லை..."

"பாதுகாப்புத்துறை மேலிடத்துத் தகவல்களின்படி—வடஇலங்கையில் லெப்டினன்ட் ஜெனரல் கஜுரியா (இவர் முன்னாள் ராணுவ உளவுத்துறையின் இயக்குனராக இருந்தவர்)வின் கீழ் இந்திய ராணுவத்தின் தெற்கு ஆணையத் தலைமையகத்தை நிறுவப் போகிறார்கள். இது சேமிப்புப் படையாக இருக்கும். அப்படியானால் இதன் பொருள் தெளிவானது. இந்தியப் படை அங்கேயே சில காலம் தங்கப் போகிறது..."

'மற்ற குழுக்கள் நம் கட்டுப்பாட்டில் உள்ளன. புலிகளின் ஆதிக்கத்தைக் குறைப்பது நமது நோக்கம். இவ்வாறு செய்து விட்டால் இடைக்கால நிர்வாகத்திலும், இடைக்கால கவுன்சிலிலும் டெல்லியின் ஆணைகளை ஏற்றுச் செயல்படுத்தக் கூடிய ஆட்களாக நிறையபேரை வைத்துவிட முடியும்' என்று மூத்த உளவுத்துறை அதிகாரி ஒருவர் சொல்கிறார்.."

"உயர் ராணுவ அதிகாரிகள் தமக்குள் பேசிக் கொள்ளும்போது இந்தப் போரை வியத்நாம்—ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்புப் போர்களோடு ஒப்பிட்டுப் பேசத் தொடங்கிவிட்டார்கள்..."

"சராசரியாக ஒவ்வொருநாளும் 25 முதல் 30 பேர் காயமடைந்து சிகிச்சைக்கு வருகிறார்கள். இந்திய சிப்பாயாக இருந்தாலும், தமிழ்ப் புலியாக இருந்தாலும் சாவு என்பது எங்களைப் பொறுத்தவரை ஒன்றுதான். இயல்பாகவே எங்கள் மத்தியில் ஒரு கேள்வி எழுகிறது 'நாம் நடத்திக் கொண்டிருக்கும் யுத்தம் நியாயமானதுதானா?'
—'அமைதிப்படை' மருத்துவர்"

"உள்நாட்டில் மக்களிடம் செல்வாக்கிழந்து வருகின்ற இரண்டு நாட்டுத் தலைவர்களால் தங்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட யுத்தமாக பெரும்பாலான இந்திய சிப்பாய்கள் இதைக் கருதுகிறார்கள். நாற்றம் பிடித்த அரசியலின் விளைவாகத்தான் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று இந்திய சிப்பாய்கள் பரவலாக பேசிக் கொள்கிறார்கள்..."



படிப்பகம்

www.padippakam.com

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை, 'ஒப்பந்தமல்ல—ஈழத் தமிழரைக் கொல்லும் தீப்பந்தம்' என்று சாடுகிறது திமுக. இந்திய அமைதிப்படை தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கச் சென்ற கூலிப்படை என்கிறார் கருணாநிதி. இந்திய ராணுவத்தை எதிர்த்துப் போராடும் புலிப்படையை 90 சதவீதம் மக்கள் ஆதரிக்கிறார்கள். இந்திய ராணுவத்தை எதிர்க்கிறார்கள்—என்று பல பத்திரிக்கையாளர்கள் எழுதிவிட்டனர். இந்திய ராணுவ அதிகாரிகளும் ஒப்புக் கொள்கின்றனர். ஆக, இந்திய ராணுவம் அங்கே இருப்பதை இந்திய அரசின் கைக் கூலிகளாகிவிட்ட குழுக்களைத் தவிர ஈழத் தமிழ் மக்கள்யாரும் விரும்பவில்லை

இந்நிலையில் இந்திய ராணுவத்தை வாபஸ் வாங்கு. ஈழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்காதே என்று குரல் கொடுப்பதற்குப் பதிலாக போர் நிறுத்தம் செய்யுங்கள் போதும் என்று ராஜீவிடம் கோருகிறது திமுக. அதாவது இந்திய ராணுவம் அங்கே முகாமடிப்பதை திமுக ஏற்றுக் கொள்கிறது. இது ஈழத் தமிழருக்குச் செய்யும் துரோகம். சென்னையில் கலைஞர் நடத்திய கண்டனப் பேரணியில் தொடங்கி இன்றுவரை திமுக, திக, நெடுமாறன் கட்சி ஆகியவை ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடுவதற்குப் பதில் எப்படியெல்லாம் ராஜீவிடம் மன்றாடுகின்றனர் என்பதை விளக்குகிறது இக் கட்டுரை.

## போர் நிறுத்தக் கோரிக்கை:

# கழகங்களின் பித்தலாட்டம்

ராஜீவின் கொலைவெறி பிடித்த ராணுவம் யாழ்ப்பாணத்தை சுடுகாடாக்கிக் கொண்டிருக்கும் வேளையில், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு கொடுத்து அரவணைத்த தமிழக மக்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? 1983 ஜூலைப் படுகொலையின் போது குமுறி எழுந்த தமிழகம் இன்று உறங்கிக் கிடக்கிறதா? நாளைக்கு ஒரு ஊர்வலம், வீதிக்கு ஒரு கொடும்பாவி என்று அமர்க்களப்பட்ட தமிழகம் இன்று 'அமைதிப் படை'யின் அக்கிரமங்களைக் கேட்டபின்னரும் அமைதியாக இருப்பதேன்? ஈழத்தின் மீதான இந்திய ஆக்கிரமிப்பை எதிர்க்கின்ற ஜனநாயக உணர்வுள்ள அனைவரின் மனதிலும் எழுந்துள்ள கேள்விகள் இவை.

இந்திய ராணுவத்தின் அட்டூழியங்கள் ஒவ்வொன்றாய் வெளியாகி அம்பலமாகிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை பெரும்பான்மைத் தமிழக மக்கள் ஆதரிப்பதாக மாதிரி வாக்கெடுப்பு ஒன்று நடத்தி செய்தி வெளியிடுகிறது இந்து நாளேடு. எல்லா பார்ப்பனப் பத்திரிக்கைகளும் இந்திய ராணுவ நடவடிக்கையை ஆதரித்து பக்கம் பக்கமாக எழுதித் தள்ளுகின்றன.

நேற்றுவரை பிரபாகரனின் புகழ் பாடிய ஜூனியர் விகடன் இன்றைக்கு இந்திய ராணுவம் தாக்கத் தொடங்கியவுடன் கருத்து எதுவும் சொல்லாமல் சர்வகட்சி பிரமுகர்களின் அறிக்கைகளை வெளியிட்டு முடங்கிக் கொள்கிறது. தமிழகத்தில் எந்த அடித்தளமும் இல்லாத ஒட்டுண்ணிகளான காங்கிரஸ் கும்பலோ இந்திய ராணுவ அட்டூழியங்களை ஆதரித்து சென்னை நகரவீதிகளில் துணிச்சலாக ஊர்வலம் போகிறது; நகரெங்கும் ராணுவ நடவடிக்கையை ஆதரித்தும், கருணாநிதியை எதிர்த்தும் ஆயிரக்கணக்கில் சுவரொட்டிகளை ஒட்டுகிறது.

ஆக்கிரமிப்பை எதிர்ப்பவர்கள்—கருணாநிதி, நெடுமாறன், வீரமணி —இதற்குக்கொடுத்திருக்கும்பதிலடி என்ன? இவர்கள் நேர்மையாக, உளப்பூர்வமாக தங்கள் சக்திக்கேற்ற வகையில் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்களா? இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழக மக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்ட முயன்றிருக்கிறார்களா?

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட விழைபவர்கள் பரிசீலிக்க வேண்டிய விஷயங்கள் இவை.

ஆக்கிரமிப்பையும், இந்திய—இலங்கை ஒப்பந்தத்தையும் ஆதரிக்கின்றவர்கள் தெளிவாக அணி வகுத்து நிற்கிறார்கள். காங்கிரஸ், வலது—இடதுபோலி கம்யூனிஸ்டுகள், தா. பாண்டியன், சோ, ஜெயகாந்தன் வகையறாக்கள் என்று இவர்களை பட்டியல் போட்டு விடலாம்.

போர் நிறுத்தம் கோருகின்றவர்களில் நெடுமாறனும், வீரமணியும் தங்கள் கோரிக்கை நிறைவேற வேண்டும் என்பதைவிட எம்ஜியார் மனம் புண்பட்டு விடக்கூடாது என்பதில் வெகு கவனமாக இருக்கிறார்கள். கருணாநிதி எவ்வளவு நெருங்கி வந்தாலும் எச்சரிக்கையாக விலகிக் கொள்கிறார்கள். அதிமுக ராஜீவுக்கு வால்பிடிப்பதை மறைப்பதற்காக காளிமுத்துவின் மூலம் அவ்வப்போது சவடால் அறிக்கைகள் விடப்படுகின்றன.

விடுதலைப் புலிகள் மீது இந்திய அமைதிப்படை (கல்கத்தாவிலேகாளி; காஞ்சியிலே காமாட்சி என்பதைப்போல இந்தியாவிலே ராணுவம், இலங்கையிலே அமைதிப்படை) தாக்கத் தொடங்கிய தினத்திலிருந்து எதிர்ப்பாளர்கள் என்று சொல்லப்படும் இவர்கள் பேசியும் எழுதியும் வந்ததை ஆராய்ந்தால் இவர்களது எதிர்ப்பின் 'வேகத்தை'ப் புரிந்துகொள்ளலாம்.

ஃ ஃ ஃ

15—10—87 அன்று சென்னையில் நடத்தப்பட்ட கண்டனக் கூட்டத்தில் 'இந்திய ராணுவத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்து தமிழினமே' பொங்கியெழு என்று போர்க் குரலா எழுப்பினார் கலைஞர்? அவலக் குரலல்லவா எழுப்பினார்!

"நாம் ஆத்திரப்பட்டு பேசுவதாக தயவு செய்து யாரும் கருதக் கூடாது. நான் ஆத்திரப்பட்டுப் பேசவில்லை. வேதனையோடு பேசுகிறேன். கந்தப்பன் வரிகொடா இயக்கம் தொடங்கலாம் என்று சொன்னார். வீராசாமி பேசும்போது இந்திய ராணுவத்தை எதிர்க்கக்கூடிய நிலை இங்கேயுள்ள தமிழர்களுக்கு ஏற்படும் என்று சொன்னார். வரிகொடா இயக்கமும் தேவையில்லை; இந்திய ராணுவத்தை இங்கேயுள்ள தமிழர்கள் எதிர்க்கக் கூடிய நிலையும் தேவையில்லை."

விடுதலைப் புலிகளின் அச்சகம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

வடமராச்சியில் விடுதலைப்புலிகளைத் தேடுகிறோம் என்ற பெயரில் அப்பாவித் தமிழர்கள் 10 பேர் இந்திய ராணுவத்தால் கொல்லப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் 20 தமிழ்ப் பெண்கள் இந்திய ராணுவத்தால் கற்பழிக்கப்பட்டனர்—என்று இந்திய ராணுவத்தின் வெறியாட்டங்களைப் பட்டியல் போட்டுவிட்டு ராணுவத்திற்கே மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறார் கலைஞர்.

“இமைகளே, விழிகளைக் குருடாக்காதே—சிப்பியே, முத்துக்களை சிதைக்காதே—ரோஜாவில் உள்ள முள்ளே ரோஜாவைக் குத்திக் கிழிக்காதே—இந்திய ராணுவமே தமிழர்களை அழிக்காதே என்று கேட்டுக் கொள்வதற்காகத்தான் இந்தக் கூட்டம் நடத்தப்படுகிறது. இந்தக் கேள்வி எழுப்ப வேண்டிய நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்காக வேதனைப்படுகிறோம்.”

எவ்வளவு எச்சரிக்கையாக, பயந்து பயந்து பேசுகிறார் கலைஞர்! ராணுவத்தின் அட்டூழியத்தைக் கண்டுகூட அவர் வேதனைப்படவில்லையாம். இத்தகைய ஒரு கேள்வி எழுப்ப வேண்டிய நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டு விட்டதே அதற்காகத்தான் வேதனைப்படுகிறாராம்.

வீரமணியோ இன்னும் ஒருபடி மேலே போய் “தமிழன்தான் ஊருக்கிளைத்தவனா? பஞ்சாபில்பயங்கரவாதம் தலை தூக்குகிறது. கிழக்கே சீன ராணுவம் 5 மைல் உள்ளே புகுந்து பரண் அமைத்து தான் ஆக்கிரமித்த பகுதியைக் கட்டிக் காக்கிறது” என்று இந்திய ராணுவம் படையெடுக்க வேண்டிய இடங்களைப் பட்டியல் போட்டுக் காட்டுகிறார்.

“சீனாக்காரன் பிடித்து வைத்திருக்கின்ற அந்தப் பகுதியை பிடித்தால் நாங்கள் அனைவரும் ஓடோடி வந்து ரோஜா மாலை போட்டு உங்களை வாழ்த்தத் தயாராக இருப்போம்” என்று தனது பாரம்பரியத்தை ராஜீவுக்கு நினைவுபடுத்துகிறார் கலைஞர்.

சீனாவின் மீது இந்தியா நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தம் தொடங்கியவுடனே திராவிடநாடு கோரிக்கையை மூட்டை கட்டினார் அண்ணாத்துரை. அதன் பின் பாகிஸ்தான் மீது இந்திய ராணுவம் படையெடுத்த போதெல்லாம் தங்கள் முழுநிறை ஆதரவையும் ஒத்துழைப்பையும் கழகங்கள் வழங்கி வந்திருக்கின்றன. இப்படிப்பட்ட துரோக பாரம்பரியத்தில் வந்தவர்களால் இந்திய ராணுவத்தின் இன்றைய ஆக்கிரமிப்பு நடவடிக்கையை எதிர்க்க முடியாமல் போனதில் வியப்பில்லை.

‘ராணுவ ரீதியாகத் தலையிடுவது இந்தியாவின் உரிமை’ என்று ஏற்கனவே செய்த பிரச்சாரம் தமிழக மக்களிடம் ஊன்றியிருக்கிறது. அதை மாற்ற இயலாமல் உலக்கையை விழுங்கியவனைப் போல விழிக்கின்றன கழகங்கள்.

கருணாநிதிக்கும் வீரமணிக்கும் இப்போது உள்ள ஆற்றமாட்டாத மனக்குறை என்ன தெரியுமா? இந்திய ராணுவம் இப்படி ஜெயவர்த்தனேயின் உத்தரவுக்கு ஆடும் சிங்களரின் கூலிப்படையாக மாறிவிட்டதே என்பதுதான். இந்திய ராணுவம் ஏற்கனவே ஏதோ விடுதலை வீரர்களின் படையாக இருந்ததைப் போலவும் இப்போதுதான் கூலிப்படையாக மாறிவிட்டதாகவும் இவர்கள் ஏன் கயிறு திரிக்கிறார்கள்? ஜெயவர்த்தனேயின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்துதான் இந்திய ராணுவம் இயங்கும் என்ற ஒப்பந்தமெல்லாம் வெறுமனே காகிதத்தில்தான் என்பதும் முழுக்க முழுக்க ராஜீவ் கும்பலின் உத்தரவின்படிதான் ஈழத்தில் இந்தக் கொலை வெறியாட்டம் நடக்கிறது என்பதும் கலைஞருக்கும், தளபதிக்கும் தெரியாதா? தெரியும்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காகப் புறப்படும்போது ‘இலங்கை இன்னொரு சிக்கிம் ஆகும்’ என்று ராஜீவ் வை. கோபால்சாமியிடம் மிகுந்த ஆணவத்துடன் சொல்லவில்லையா?

ஜெயவர்த்தனாவின் உத்தரவின்படிதான் இந்திய ராணுவம் இயங்குகிறது என்று சொன்னால் யாழ்ப்பாணப் பகுதிக்குள் சிங்கள பத்திரிக்கை நிருபர்கள் நுழைவதற்கு இலங்கை அரசு தீட்சித்திடம் ஏன் அனுமதி கேட்க வேண்டும்?

ஒன்றா, இரண்டா? இந்திய அரசு தன்னுடைய மேலாதிக்கத்தை இலங்கையில் நிலைநாட்டத்தான் இந்த ஒப்பந்தத்தைப் போட்டது—தான் சொன்னபடியெல்லாம் தாளம் போடவில்லை என்பதற்காகத்தான் விடுதலைப் புலிகள்மீது பாய்ந்து குதறுகிறது என்பதை நிருபிக்க ஆதாரங்கள் எவ்வளவு வேண்டும்?

இதோ முரசொலி மாறனே 18—10—87 அன்று முரசொலியில் எழுதிய கட்டுரையில் இதற்குச் சாட்சி சொல்கிறர்: “இன்று அந்தச் சிங்களவர்களின் கூலிப் பட்டாளமாக ராஜீவ் இந்திய ராணுவத்தைப் பயன்படுத்துவது கேட்டு மண்ணுக்குள் உறங்கும் இந்திரா காந்தியார் நிச்சயம் வருந்தத்தான் செய்வார்! ஏனென்றால் ஈழத்தை உருவாக்கத் தனித் திட்டமே வைத்திருந்தவர் அவர்.”

போதுமா, இதைவிடத் தெளிவான வாக்குமூலம் வேறென்ன வேண்டும்? ஈழத்தை உருவாக்க பிரபாகரன் திட்டம்வைத்திருந்தார்; பாலகுமாரன் திட்டம் வைத்திருந்தார் என்றால் புரிந்து கொள்ளலாம்; நியாயம். ஆனால் இந்திரா

‘யார் மீதும் அடிபடக் கூடாது என்பதற்காக’:
டி.வி.யை அடித்தார்கள்



www.padippakam.com

இதற்குத் திட்டம் வைத்திருந்த ரகசியத்தை அல்லவா மாறன் இப்போது வெளியிடுகிறார்.

அப்படி ஒரு படையெடுப்பு நடத்தி விடுதலையை வாங்கித்தர வேண்டும் என்றுதானே இத்தனை நாளும் வீரமணி, கருணாநிதி, நெடுமாறன் வகையறாக்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இந்திரா அப்படி ஒரு ஈழத்தை உருவாக்கி பிரபாகரன் கையில் கொடுத்திருந்தாலும் தான் சொன்னதற்கெல்லாம் அவர் தாளம் போடாவிட்டால் இப்போது தனயன் செய்யும் அதே காரியத்தைத்தான் செய்திருப்பார்.

அதனால்தான், "அது (படையெடுப்பு) எதற்காக என்றுஎங்களுக்குப் புரியும்; என்ன உள்நோக்கம் என்று எங்களுக்கு விளங்கும்;



திமுகவின் பேரணி—நீர்த்துப் போன அரசியல்.

எப்படிப்பட்ட அரசியல் நோக்கம் என்பதும் எங்களுக்குத் தெரியும். அதை நாட்டு மக்களுக்கும் எங்களால் விளக்க முடியும். ஆனால் இப்போது அதுவல்ல பிரச்சினை" என்று பேராசிரியர் விளக்க முடிந்ததை விளக்காமலேயே வழுக்குகிறார். "நம்முடைய கைவிரல் என்பதற்காக நம்முடைய கண்ணை நாமே குத்திக் கொள்ளலாமா" என்று புலம்புகிறார்.

நம்முடைய கைவிரல் என்று உரிமையுடன் அன்பழகன் எதைக் குறிப்பிடுகிறார்? இந்திய ராணுவத்தைத்தான். இந்திய அரசுக்கும், அதிகார வர்க்கத்திற்கும், ராணுவத்திற்கும் எதிராக இப்படித் தொடை நடுங்குவது எதற்காக? இந்திய அரசியல் அமைப்புக்கு எதிராக, ஒருமைப்பாட்டுக்கெதிராக ஏடாகூடமாக எதையாவது பேசித் தொலைத்தால் சட்டசபை, பாராளுமன்றத்தில் நுழையும் வாய்ப்பு போய்விடுமோ என்ற அச்சத்தினால்தானே?

இந்திய அரசு, இந்திய ராணுவம் ஆகியவற்றின் முகத் திரையை நார் நாராகக் கிழித்தெறிகிறதே என்ற நடுக்கத்தினாலும், திமுகவின் அரசியலுக்கு ஒத்து வரவில்லை என்ற காரணத்தினாலும்தானே மாத்தையா 'இந்து' நாளேட்டுக்குக் கொடுத்த பேட்டியின் மொழி பெயர்ப்பில் முக்கியமான பகுதிகளை வெட்டிவிட்டு வெளியிட்டது முரசொலி. இதைவிட கோழைத்தனம் வேறென்ன இருக்க முடியும்? (விவரங்களுக்குபார்க்க:மாத்தையா பேட்டி)

இந்திய அரசு ஏன் படையெடுத்திருக்கிறது என்பதைத் தெள்ளத் தெளிவாகச் சொல்கிறது திராவிடர் கழகம் "இந்திய வல்லாதிக்க நோக்கமும், வல்லரசுகளின் நலன் என்ற உள்நோக்கமும்தான் இந்த உடன்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கிறதேதவிர தமிழ் ஈழ மக்களின் நலன் அல்ல, அல்லவே அல்ல." (விடுதலை— 14.10.87 தலையங்கம்)

'பரவாயில்லை; விஷயத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார்களே' என்று நாம் நினைப்பதற்குள் நேரே ஒரே பாய்ச்சலாக சாக்கடையில் குதிக்கிறது விடுதலை. "அமெரிக்காவைச் சேர்ந்த 1000 பேர் கிரெனடா தீவில் பாதிப்புக்கு ஆளானார்கள் என்றவுடன் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரீகன் கிரெனடா தீவிற்கே அமெரிக்கப் படையை அனுப்பித் தங்கள் நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தார்" (விடுதலை—16.10.87)

அப்படியானால் அமெரிக்கா வியத்நாம்மீது படையெடுத்ததும் சரிதான். இந்தியா பிஜிமீது படையெடுத்தால் அதுவும் சரிதான். இப்போது இந்தியா இலங்கைமீது படையெடுத்திருப்பதும் சரிதான். (தவறு என்றால் இந்தியப் படையை வாபஸ் வாங்கு என்றல்லவா கேட்க வேண்டும். ஆனால் கழகங்கள் கேட்பது போர் நிறுத்தம் மட்டும்தானே.) ஆனால்தமிழர்களைக் கொல்கிறார்களே அது தான் தவறு. சிங்கள மக்களைக் கொன்றிருந்தால் கழகங்கள் வாய் திறக்கப் போவதில்லை.

அதனால்தான் "இன்றைக்குத் தமிழர்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டிருக்கும் இந்திய ராணுவத்தின் துப்பாக்கிகள் நாளை சிங்களர்களுக்கு எதிராகவும் திரும்பும்" என்று மாத்தையா தனது பேட்டியில் குறிப்பிட்டதை முரசொலி கத்தரித்து விட்டது.

தமிழர்களுக்கெதிரான தாக்குதலை எதிர்க்கின்ற இவர்களே இந்திய ராணுவத்திடம் மண்டியிட்டு பிரார்த்தனை செய்யும்போது மக்கள் எங்கிருந்து ஆக்கிரமிப்பை எதிர்த்து ஆர்த்தெழுவது?

இந்திய ராணுவத்திடம் மட்டுமல்ல; ராஜீவிடமும் இவர்கள் எப்படிக் குழைந்து, கூழைக்கும்பிடு போடுகிறார்கள் தெரியுமா?



படிப்பகம்

www.padippakam.com

“குமுறிக் கொண்டிருக்கிறோம் கொதித்துப் போயிருக்கிறோம் என்றாலும்கூட, ஏதோ இந்திய அரசை, ராஜீவ்காந்தியைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல; நான் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்... எச்சரிக்கை விடுவதோ அல்லது இந்திய அரசை எதிர்ப்பதோ இந்தப் பேரணியின் நோக்கம் இல்லை” (16.10.87 கண்டனப் பேரணியில் கலைஞர் உரை)

“கண்டனப் பேரணியில் கலைஞர் ஆவேச போர் முரசு” என்ற தலைப்புச் செய்தியைப் பார்த்துவிட்டு பத்திரிக்கையைப் புரட்டிய பின்னால்தான் தெரிகிறது ஆவேச போர்முரசின் லட்சணம்!

ராஜீவ் காந்தி விஷயத்தில் கலைஞரே பரவாயில்லை என்கிற அளவுக்குப் போய்விட்டார் வீரமணி. “இந்த இமாலய உண்மையை (விடுதலைப் புலிகளுக்குயாழ்ப்பாணத்தில் உள்ள செல்வாக்கை) வெறும் சோற்றுக்குள் மறைத்துவிடலாம் என்று இந்தியப் பிரச்சார பீரங்கிகளும் பிரதமருக்கு ஆலோசனை கூறும் ‘அரை வேக்காட்டு அதிகாரிகளும்’ கனவு காண்கிறார்கள்.” (14.10.87—விடுதலை)

ராஜீவ் ஏதோ ஒன்றுமே தெரியாத நல்ல மனம் கொண்ட பிரதமர் போலவும் சில அதிகாரிகளின் தவறான ஆலோசனைகளின் காரணமாக உண்மைநிலை புரியாமல் புலிகள்மீது ராணுவத் தாக்குதல் நடத்த அவர் உத்தரவிட்டுவிட்டது போலவும் ராஜீவுக்கு உண்மைகளை எடுத்து விளக்கும் பணியை மேற்கொள்கிறார் வீரமணி.

‘பனங்காட்டு நரி’ காளிமுத்துவைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. “எங்கள் வரிப்பணத்தில் கொழுக்கும் இந்திய ராணுவமே! டில்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே அகழி வெட்டாதே” என்று கூக்குரலிடுகிறார். டில்லி அரசுக்குத் தெரியாமல் ராணுவம் இலங்கையில் போர் நடத்துகிறதா என்ன? காளிமுத்துவுக்கு வந்த மிகப் பெரிய கவலை தமிழர்களைக் கொல்வது பற்றியெல்லாம் இல்லை. ராபின் மெய்ன் வழக்கு அகழிக்கு அந்தப் பக்கம் டில்லியிலே சிக்கிக் கொண்டால் என்ன செய்வது என்பதுதான்.

தெருப் பொறுக்கிகளின் வாய்ச் சவடாலுக்கும்காளிமுத்துவின்‘வீரத்திற்கும்’ வித்தியாசம் ஏதும் கிடையாது. ‘காளிமுத்து சவால்’ ‘காளிமுத்து ஆவேசம்’ என்பதெல்லாம் வெறும் சரக்கு என்பது எல்லோரும் அறிந்ததுதான். வீரமணிக்கு மட்டும் இது தெரியாமலா இருக்கும்?

இருந்தும் காளிமுத்துவின் ‘வீர உரை’களைவிடுதலை முதல்பக்கத்

பாசிஸ்டு காங்கிரஸ் குண்டர்களையும், தா. பாண்டியன், சோ, ஜெயகாந்தன் போன்ற ஏவல் நாய்களையும் உயிர் வாழ அனுமதித்திருப்பதே பெரிய சலுகை. ஜனநாயகம், கருத்துரிமை என்ற பெயரில் அவர்களை பிரச்சாரம் செய்ய அனுமதிப்பது வடிகட்டிய முட்டாள்தனம்.

தலைப்புச் செய்தியாக வெளியிடுவது ஏன்? அது மட்டுமல்ல; புலிகளுக்கும் இந்திய ராணுவத்துக்கும் நடைபெறும் போரை தடுத்து நிறுத்துங்கள் என்று கோரி ராஜீவுக்கு எம்ஜியார் எழுதிய கடிதத்தை ‘ராஜீவுக்கு எம்ஜியார் எச்சரிக்கை’ என்று தலைப்பிட்டு செய்தி வெளியிடுகிறது விடுதலை.

ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடுவதைவிட, எம்ஜியார் அரசுடன் தனது உறவை வலுப்படுத்திக் கொள்ள வாய்த்த ஒரு சந்தர்ப்பமாகவே இன்றைய அரசியல் சூழலை தி.க பயன்படுத்தி வருகிறது.

தமிழக போலீசால் கிட்டு கைது செய்யப்பட்டதை “எம்ஜியார் அரசின் மனிதாபிமானமற்ற செயல்” என்று கருணாநிதிகண்டிக்கும்போது வீரமணியும் நெடுமாறனும் “கிட்டு, கோபால்சாமியைக் கைது செய்தது இந்திய அரசின் ஜனநாயக விரோதப் போக்கு” என்று வருணிக்கின்றனர். ரயில் மறியல் போராட்டம் தொடர்பாக சமூக விரோதிகள் என்ற பெயரில் 2000 திமுகவினரைக் கைது செய்த போதும் அதைக் கண்டிக்க வக்கில்லாமல் போனாலும், மத்திய அரசு, ரயிலை நிறுத்தக் காரணமே அதிமுக அரசுவிடுத்த எச்சரிக்கையாகத்தான் இருக்கும் என்று எம்ஜியார் ஆட்சிக்கு வக்காலத்து வாங்குகிறார்கள்.

இவை மட்டுமல்ல; விடுதலைப் புலிகளை இத்தனை நாள் ‘போராளிகள்’ என்று எழுதிவந்த அதிமுகவின் ஏடான ‘அண்ணா’இப்போது தீவிரவாதிகள் என்று அவர்களைக் குறிப்பிடுவது பற்றியோ, தொடர்ந்து புலிகளுக்கு எதிராகவும் இந்திய ராணுவத்திற்கு ஆதரவாகவும் எழுதி வருவதைப் பற்றியோ வீரமணி கண்டு கொள்வதில்லை. இதையெல்லாம் பேசிக் கொண்டிருந்தால் டிரஸ்டை எப்படிப் பாதுகாப்பது? அதில் தனதுஉரிமையை எப்படி தக்க வைத்துக் கொள்வது? கூழுக்கும் மீசைக்கும் சேர்த்து ஆசைப்படக்கூடாது என்பதால் மீசை போனால் போகட்டும் என்று ‘சுயமரியாதைச் சுடரொளி’ விட்டுவிட்டார் போலும்!

இப்படியாக, தொட்ட இடமெல்லாம் ஒரே குளறுபடியாகஇருந்தாலும்அவ்வப்போது ‘புறநானூற்று வீரம்’ கிளர்ந்தெழாமல் இல்லை. வேட்டியை மடித்துக் கட்டினால் தானே கால்நடுக்கம் தெரியப்போகிறது என்பதால் நடுநடுவே இரண்டு வீரவசனங்களையும் சேர்த்துப் பேசிக் கொள்கிறார்கள்.

“வானொலி—தொலைக்காட்சியின் பொய்யைப் பரப்பும் போக்கு நீடித்தால் அவற்றை நிரந்தரமாக நிறுத்தும் காலகட்டம் வரும். எரிமலை வெடிக்கும். தமிழ்நாடு தமிழருக்கே என்ற நிலைக்குத் தள்ளி சுதந்திரத் தமிழ்நாட்டின் வானொலியாக இயங்கும் நிலைமைக்குளங்களைத் தள்ளாதீர்கள்” என்று வீரமணியே பேசும்போது காளிமுத்துவால் பொறுக்கமுடியுமா?

“பிரபாகரனுக்கு ஏதாவது என்றால் தமிழகம் தாங்காது. தமிகம் ரத்தக்களறியாக மாறும். தமிழ்நாட்டு இளைஞர்களை ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய அரசியல் நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கிவிடாதீர்கள்” —காளிமுத்து.

ஏதோ தனக்குப் பின்னால் கையில் ஆயுதங்களுடன் தயாராக ஒரு இளைஞர்படை நின்றுகொண்டிருப்பதைப் போலவும், தன்னுடைய கையசைப்பில் அவர்கள் பொங்கியெழுந்து இந்திய ராணுவத்தையே தவிடுபொடியாக்கி விடுவார்கள் என்பதைப் போலவும் காளிமுத்து உதார்விட்டாலும் மத்திய அரசு கண்டுகொள்ளவில்லையே ஏன்? காளிமுத்துவின் பின்னால் திரண்டிருப்பது ஊர்சுற்றிகளும், தெருப் பொறுக்கிகளும், ரவுடிகளும் சமூக விரோதிகளும்தான் என்பது நமக்கே தெரியும்போது அரசுக்குத் தெரியாமலா இருக்கும்?

வீரமணி அவ்வப்போது அரிப்புக்குச் சொரிந்து கொள்வதைப் போல தனிநாடு பற்றிப் பேசுவார்.

ஒரே நாளில் காலையில் இப்படி ஒரு கடும் எச்சரிக்கை விடுகிறார்கள்; மாலையில் மன்றாடுகிறார்கள்; மறுநாள் ஐயோ தமிழ் நாட்டில் தமிழனே இல்லையா என்று ஒப்பாரி வைக்கிறார்கள். நாட்கள் செல்லச்செல்ல ஒப்பாரிதான் அதிகமாகிக் கொண்டே போகிறது.



படிப்பகம்

www.padippakam.com

**கேள்வி: இந்தியா மிகப் பெரிய நாடு. உலகிலேயே நான்காவது மிகப் பெரிய ராணுவ பலத்தைக் கொண்டது. சிறிய இயக்கமான உங்கள் புலிப் படையோ, தமிழ் மக்களோ இந்திய ராணுவத்தை எதிர்த்துத் தாக்குப் பிடிக்க முடியுமா?**

பதில்: இந்தியாவோடு ஒப்பிடும்போது நாங்கள் உண்மையில் சிறிய இயக்கம்தான். ஆனால் இது எங்களது நாடு. எங்களது நிலப்பகுதியின் ஒவ்வொரு அங்குல நிலத்தைப் பற்றியும் நாங்கள் நன்றாக அறிவோம்.

(நாங்கள் சுதந்திரமாக வாழ விரும்பினோம். அதனால் தான் சிங்களர்களை எதிர்த்துப் போராடினோம். பார்க்கப் போனால் நாங்களும் சிங்களர்களும் ஒரே தீவைச் சேர்ந்தவர்கள். ஆனால் இங்கே வந்து எங்களை நாட்டாண்மை செய்வதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது இந்தியாவுக்கு? அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள். இந்த ஆக்கிரமிப்புக்கு எங்களை மவுனமாக அடிபணிந்து போகச் சொல்கிறீர்களா?

சொல்லப் போனால் இலங்கை ராணுவமும் கூடத்தான் எங்களைவிட வலுவானது; அதற்குப் பயந்து நாங்கள் போராடாமல் இருந்து விட்டோமா என்ன? இந்திய அரசும் எங்களிடமிருந்து பாடம் பெற்றுக் கொள்ளட்டும். நாங்கள் மடியத் தயாராக இருக்கிறோம். ஆனால் கௌரவமாக மடிவோம்!

அமெரிக்காவுக்கு வியட்நாம் பாடம் கற்பித்ததே அதைப் போல, ரஷியாவுக்கு ஆப்கானிஸ்தானம் பாடம் கற்பிக்கிறதே அதைப்போல இந்தியாவுக்கு நாங்கள் பாடம் புகட்டுகிறோம். நாங்கள் அனைவரும் இறப்பதாக இருந்தாலும் சரி, இந்திய ராணுவமும் பெரிய அளவில் இழப்புகளைச் சந்தித்தே தீரும்.

மிகப் பெரிய இந்திய ராணுவத்தை எதிர்த்து எப்படிப் போராட முடியும் என்று கேட்டீர்கள். சுயமரியாதை, தன்மானம், எங்கள் தேசிய இனத்தின் கவுரவம் ஆகியவைதான் முக்கியம்—இதுதான் எங்கள் பிரச்சினை. எங்களது லட்சியங்களை கைவிட்டுவிட்டு நாங்கள் யாரிடமும் சரணடைந்து விடமாட்டோம்—இந்தியாவிடமும்தான்.)

கே: மக்கள் எவ்வளவு காலத்திற்கு இதனை ஏற்றுக் கொள்வார்கள்? எவ்வளவு காலத்திற்கு அவர்கள் துன்பங்களை அனுபவிப்பார்கள்? அமைதித் தீர்வுக்கு வேறு வழி இல்லையா? சமாதானத்திற்கு ஏற்புடையதாக அல்லாததாக, உங்கள் நிலை இல்லையா?

ப: நாங்கள் சமாதானத் தீர்வுக்கு எதிரானவர்கள் அல்ல... நாங்கள் நினைத்திருந்தால் ஜெயவர்த்தனேயின் இடைக்கால அரசு நிபந்தனைகளை ஏற்று எங்களது வீரர்களுக்கு அந்த நிர்வாகத்தில் ஊதியம் வாங்கித் தந்து வசதியான வாழ்க்கையை நடத்தியிருக்க முடியும். இந்திய மேலாதிக்கத்தை ஏற்று வெட்கத்தை விட்டும் வாழ முடியும் (தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியையும், வேறு சில குழுக்களையும் போல.)

(கே: இந்தியப் படையில் கூர்க்கா இனத்தவர்கள் இருக்கிறார்களா?

பதில்: இதுவரை அவர்கள் எங்கள் கண்களில் படவில்லை. ஆனால் அவர்களும் வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். இங்கே வந்துள்ள இந்தியப் படையில் சீக்கியர்கள் இருக்கிறார்கள். மராட்டியர்கள், ராஜபுத்திரர்கள், தமிழர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். கூர்க்காக்களும்தான் வரட்டுமே. இந்தியாவில் தனிநாடு கேட்டுக் கொண்டிருக்கும் சீக்கியர்கள் இங்கே தனி ஈழம் கேட்கும் எங்களைக் கொல்ல வந்திருக்கிறார்கள். வேடிக்கையாக இல்லை! இந்தியாவில் தனித் தாயகம் கேட்கும் கூர்க்காக்கள் எங்கள் தாயகத்தில் எங்களைக் கொல்ல வந்திருக்கிறார்கள்.)

(கே: தமிழர்களோடு தமிழர்கள் மோதுகிறார்கள்—இது விநோதமாக இல்லை?

ப: இங்கே இந்திய ராணுவத்திலுள்ள தமிழர்களில் பெரும்பாலோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களல்லர். அவர்கள் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு தமிழின உணர்வு இல்லை. ஆனால் இது தமிழனுக்கும் தமிழனுக்கும் இடையே நடக்கும் யுத்தமல்ல; இந்திய ராணுவத்திற்கும் ஈழமக்களுக்கும் இடையே நடைபெறும் யுத்தம்.)

கே: ஜெயவர்த்தனேயின் சித்து வேலைகளுக்குப் பலியாகி நிலைமையை நீங்களே சிக்கலாக்கிக் கொண்டு விட்டீர்கள் இல்லையா?

ப: இந்த நிலைக்கு தாங்கள் தள்ளப்பட்டோம்... இந்திய ராணுவத்தின் உண்மை நிலையை மக்கள் இப்போது புரிந்து கொண்டார்கள். ஜெயவர்த்தனே வெற்றி பெற்றுவிட்டதாக இப்போது நினைக்கலாம்.

(உண்மையில் இந்திய ராணுவத்தை அழைத்ததன் மூலம் மிகப் பெரிய முட்டாள்தனத்தை செய்திருக்கிறார். இந்திய ராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறாது. தமிழர்களை ஒழித்துக் கட்டிய பிறகு இந்திய ராணுவத்தின் துப்பாக்கிகள் சிங்களர்களை நோக்கித் திரும்பும். இந்திய மக்களடையே, குறிப்பாக தமிழக மக்களிடையே தோற்றுவிக்கப்படும் பொதுக் கருத்து இத்தகைய நடவடிக்கையைக் கோரும்.)

கே: இந்தியாவின் மக்கள் தொகை அதிகம். கணிசமான சிப்பாய்களை இழந்தாலும் அவர்களால் தாங்க முடியும். ஆனால் அது உங்கள் இயக்கத்தினால் முடியுமா? மேலும் 'நாங்கள் சாகத் தயார்' என்று நீங்கள் குறிப்பிடுவது ஏதோ தோல்வி மனப்பான்மையில் பேசுவது போலல்லவா இருக்கிறது?

ப: நாங்கள் சாகத் தயார் என்று கூறுவது எங்களுடைய உன்னத லட்சியத்தின் மீது கொண்டுள்ள உறுதிப்பாட்டின் அடையாளம் ஆகும்.

ஆனால் முட்டாள்களைப் போன்று நாங்கள் தற்கொலை செய்து கொள்வதில்லை.

(நாங்கள் எங்களது போராட்டத்தைத் தொடருவோம். நீங்கள் குறிப்பிட்டதைப் போல ஏராளமான சிப்பாய்களை பலி கொடுத்தாலும் கவலை இல்லை என்ற நிலையில் இந்திய ராணுவம் இருக்கலாம். ஆனால், தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு மேலும் மேலும் ராணுவத்தையும் ஆயுத தளவாடங்களையும் கொண்டு வந்து குவித்தே தீரவேண்டிய சூழ்நிலையை இந்திய அரசுக்கு நாங்கள் ஏற்படுத்துவோம்.

இந்திய ராணுவம் ஏராளமான அப்பாவி, சிவிலியன் தமிழ் மக்களைப் படுகொலை செய்யும். இந்திய ராணுவத்தின் முகமூடி கிழிந்து உண்மையான முகம் அம்பலமாகும். மகாத்மா காந்தியின் கொள்கைகளைச் சொல்லிக் கொண்டு இந்திய அரசு நடத்திவரும் பித்தலாட்டம் அம்பலப்பட்டுப் போகும். சின்னஞ்சிறிய ஈழத் தமிழ் மக்களுடைய விழைவுகளை-விருப்பங்களை நசுக்குவதற்காகப் போராடும் மாபெரும் இந்திய அரசைப் பார்த்து உலகமே கைகொட்டிச் சிரிக்கும்.)

கே: விடுதலைப் புலிகளை வளர்த்துவிட்டது இந்தியாதான். வினை விதைத்த அவர்கள் இப்போது வினையை அறுவடை செய்கிறார்கள் என்று சிலர் சொல்லுகிறார்களே!

ப: (கோபமாக) இதை எப்படி அவர்கள் சொல்லலாம்? ......ஆரம்ப காலத்தில் தனிப்பட்ட முறையில் இந்திய ராணுவத்தைச் சேர்ந்த சில தமிழ் அதிகாரிகள் எங்களுக்கு உதவி செய்தார்கள். அதற்குப் பின்னர் எங்கள் சொந்த மண்ணில் நாங்களே எங்கள் இயக்கத்தினருக்குப் பயிற்சியளித்தோம். (அதனால்தான் பிற குழுக்களுக்கு பின்பலமாக இந்தியா இருந்தும் கூட எங்களை அவர்களால் வீழ்த்த முடியவில்லை.)



படிப்பகம்

www.padippakam.com

அதையெல்லாம் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளத்தேவையில்லை. அவரது எச்சரிக்கைப்படி தமிழ்நாடு பிரிவதாயிருந்தால்இதுவரைகுறைந்தது ஒரு நூறுதடவை தமிழ்நாடு தனியே பிரிந்திருக்க வேண்டும்.

ஒரே நாளில் காலையில்இப்படி ஒரு கடும் எச்சரிக்கை விடுகிறார்கள்; மாலையில் மன்றாடுகிறார்கள்; மறுநாள் ஐயோ தமிழ்நாட்டில் தமிழனே இல்லையா என்று ஒப்பாரி வைக்கிறார்கள். நாட்கள் செல்லச் செல்ல ஒப்பாரிதான் அதிகமாகிக் கொண்டே போகிறது.

“தமிழன் தூங்குகிறான். தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிக்கிறவரை லாபம் என்ற எண்ணமா? இந்த செயலுக்கெல்லாம் காரணம் தூங்குகிற தமிழன் எழுந்திருக்க மாட்டான் என்ற திட்டம்தானே. தமிழனால் எழுந்திருக்க முடியாவிட்டாலும் அவனுக்கென்று தனியாக தொலையலாம் என்றுதான் கருத வேண்டியிருக்கிறது” என்று விரக்தியின் விளிம்பிற்கே போகிறார் கருணாநிதி.

‘தமிழன் சோற்றுத் துருத்தியல்ல என்பதை உலகுக்கு உணர்த்துவோம்’ என்கிறது விடுதலை. “அன்றாடம் சோறுதின்று தூங்குகின்ற அறியாமைத் தமிழர்களே” என்று அவலக்குரல் எழுப்புகிறார் பொன்னிவளவன் என்ற கவிஞர்.

இவர்கள் வெறுமனே மக்களை வசைபாடுகிறார்கள் என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

83இல் ஆர்த்தெழுந்த தமிழகம் ‘அமைதிப்படை’யின் அட்டூழியங்களைக் கேட்டபின்னாலும் அரை உறக்கத்தில்தான் இருக்கிறது. ஆனால் இதற்கு யார் காரணம்? யார் பொறுப்பு?

ஈழப்போராளிகளை மிரட்டுவது, அவதூறு செய்வது என்று மத்திய அரசின் உளவுத்துறை பகிரங்கமாக இறங்கியபோது—குறிப்பாக சூளைமேடு சம்பவம்— கழகங்கள் கைகட்டி வாய்பொத்திக் கிடந்தன. எதிர்ப்புப் பிரச்சாரம்கூட மேற்கொள்ளவில்லை.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கு ஈழப்போராளிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஒப்பந்தம் கையெழுத்தானது. “எப்படியோ ஒரு சமாதானம் வந்து ஒருவேளை நல்ல காரியம் நடைபெற்றுவிட்டால் அதற்கு நாம் தடையாகிவிட்டோம் என்று நம்மைப்பற்றிக் கருத்து ஏற்படக்கூடாது என்பதற்காக சற்று அமைதி காத்தோம்” என்று திமுக மவுனம் சாதித்தபோது “அமைதி எப்படி வந்தாலென்ன; எப்படியோ ஒரு சமாதானம்” என்ற கருத்து தமிழகமக்கள் மத்தியில் பரப்பப்பட்டது. தங்களுடைய அரசியல்

●

## “முரசொலி சென்சார் போர்டு”



மாத்தையா பேட்டி

‘இந்து’ ஆங்கில நாளேட்டின் கொழும்பு நிருபர் ஜெயராஜ் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ராணுவத் தளபதி மாத்தையாவை யாழ்ப்பாணம் போர்முனையில் பேட்டி கண்டார். இந்து நாளேட்டில் வெளியான இப்பேட்டியின் மொழி பெயர்ப்பை ‘முரசொலி’ வெளியிட்டது.

பேட்டியில் மாத்தையா கூறிய பதில்களை முழுமையாக வெளியிட்டுவிட்டு, “மாத்தையாவை குறிப்பிடும் இன்னின்ன விஷயங்களில் எங்களுக்கு உடன்பாடில்லை” என்று நேர்மையாகஎழுதுவதற்குப் பதிலாக, மாத்தையா கூறியவிஷயங்களை திமுகவின் அரசியலுக்கு ஒத்து வராதவற்றை தணிக்கை(சென்சார்) செய்துவிட்டது முரசொலி. இது ‘பத்திரிக்கைத் தொழில்’ நேர்மை’ அடிப்படையில் பார்த்தால்கூட மிகவும் இழிந்த நடவடிக்கை. விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு திமுக ஆதரவு தெரிவிக்கிறது என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் ‘முரசொலி’ அவர்களையும் திமுகவாக மாற்ற முயற்சிக்கிறது போலும்!

**எதிரே கொடுக்கப்பட்டுள்ள பேட்டிக் கட்டுரையில் அடைப்புக் குறிக்குள் காணப்படுபவை முரசொலியால் வெட்டப்பட்ட பகுதிகள்:**

உணர்ச்சி வராவிட்டாலும், ஆந்திரா முதல்வரைப் போன்றவர்கள் நம் பக்கம் இருக்கிறார்கள் என்ற அந்தத் துணிவோடு சொல்கிறேன்...” (கருணாநிதி. மாலை முரசு—23.10.87)

“தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு’ என்று பேசிய காலம் போக இன்றைக்கு ஈழப்போராட்டம் என்.டி.ராமராவின் தயவிலா போய் நிற்க வேண்டும்?

“தமிழனும் தமிழனும் மோதிக் கொண்டு சாகின்ற இந்தக் காட்சியைக் காண—அதைக் கண்டு உயிரோடிருக்க— நம்முடைய காலத்திலே இதுநடைபெற்றது; நாம் வாழ்ந்தோம் என்ற அவப்பெயரை எடுப்பதைவிட—தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை பேரும் செத்துத்

என்னதான் தமிழினம், தமிழினம் என்று பேசினாலும் பாகிஸ்தான் மீதும் சீனாமீதும் இந்தியா படையெடுத்த போதெல்லாம் தமிழினத் தலைவர்களும் தளபதிகளும் தாங்கள் டில்லிக்குக் காவடியெடுத்ததுடன் தமிழ்மக்களையும் அதற்கு அணி சேர்த்துக் கொண்டார்கள். இப்போது தேசிய போதைக்கு ஆட்பட்டு தமிழர்களில் பலர் அரை மயக்கநிலையில் டில்லியை ஆதரிக்கிறார்கள்.

ஈழப்போராளிகள் சீரழிந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது அவற்றைக் கழகங்கள் கண்டு கொள்ளவில்லை. ஆனால் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு ஈழ விடுதலை எதிர்ப்புப் பிரச்சாரத்தை ‘சோ’ கோஷ்டியினர் தமிழக மக்கள் மத்தியில் முடுக்கிவிட்டனர்.

பேடித்தனத்திற்கு இப்போது மக்கள்மீது பழிசுமத்துகிறது திமுக.

இவை அனைத்துக்கும் மேலாக ‘ராணுவத்தைஅனுப்பு’, ‘ராணுவத்தை அனுப்பு’ என்று ஏற்கனவே கூச்சல் போட்ட காரணத்தினால் இன்று ‘ராணுவத்தை வாபஸ் வாங்கு’ என்று கேட்கக்கூடத் திராணியில்லாமல் ‘போர் நிறுத்தம் செய்’ என்று புலம்பும் நிலைக்கு கழகங்கள் ஆளாகியிருக்கின்றன. ‘ராணுவ ரீதியாகத் தலையிடுவது இந்தியாவின் உரிமை’ என்று ஏற்கனவே செய்த பிரச்சாரம் தமிழக மக்களிடம் ஊன்றியிருக்கிறது. அதை மாற்ற இயலாமல் உலக்கையை விழுங்கியவனைப் போல விழிக்கின்றன கழகங்கள்.

போர் நிறுத்தம் கோரி திமுக நடத்தும் போராட்டங்களும் ‘அற



படிப்பகம்

www.padippakam.com



**வானொலி நிலையம் முன்பு 'மறியல்' செய்து கைதாகிறார் வீரமணி—நெருக்கடியிலிருந்து தப்பிக்க சிறை செல்லும் தந்திரம்.**

வழி' 'சாத்வீக' 'அண்ணாவழி' போராட்டங்களாகவே இருக்கின்றன. ரயில் மறியல், விமான நிலைய மறியல் தொடர்பாக ஏறத்தாழ 20000 திமுகவினர் கைது செய்து சிறையிலடைக்கப் பட்டிருக்கின்றனர்.

இதற்கு மேல் வெளியில் இருந்தால் தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்படும் என்பதால் 'தொலைக்காட்சி நிலைய மறியல்' என்ற பெயரில் பாதுகாப்பாகச் சிறையில் இடம் பிடித்துக் கொண்டனர் வீரமணியும் நெடுமாறனும். முனைமழுங்கிய போராட்டம், முனைமழுங்கிய அரசியல் ஆகியவற்றை வைத்துக் கொண்டு இதைத்தான் சாதிக்க முடியும். தங்களது தொண்டர்களும், மக்களும் எப்போதாவது தன்னெழுச்சியாக போர்க்குணத்துடன் அரசையும், போலீசையும் எதிர்க்கத் தலைப்பட்டால் உடனே அவர்களை சாத்விகப் படுகுழியில் தள்ளும் இவர்களுக்கு தமிழ் மக்களைக் குறைசொல்ல என்ன உரிமை இருக்கிறது?

பார்த்த மாத்திரத்தில் ஆத்திரத்தைத் தூண்டக்கூடிய ஆளுயர சுவரொட்டிகளை காங்கிரஸ் கூலிப்பட்டாளங்கள் மாநிலம் முழுவதும் ஒட்டுகின்றன; சில நூறு பேர் இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆதரவு ஊர்வலம் நடத்துகிறார்கள். ஆனால் கலைஞரோ 20,000 தொண்டர்களை சிறைக்கு அனுப்பி தியாகிகள் பட்டியல் போட்டுக் கொண்டிருக்கிறார்.

பாசிஸ்டு காங்கிரஸ் குண்டர்களையும், தா.பாண்டியன், சோ, ஜெயகாந்தன் போன்ற ஏவல் நாய்களையும் உயிர்வாழ அனுமதித்திருப்பதே பெரிய சலுகை. ஜனநாயகம், கருத்துரிமை என்ற பெயரில் அவர்களை பிரச்சாரம் செய்ய அனுமதிப்பது வடிகட்டிய முட்டாள்தனம். ஹிட்லருக்கும், முசோலினிக்கும் கருத்து சுதந்திரம் கொடுத்ததன் விளைவை ஜெர்மன், இத்தாலிய மக்கள் மட்டுமல்ல; உலக மக்கள் அனைவரும் அனுபவித்தார்கள்.

காங்கிரஸ் ஊர்வலம் நடத்த அனுமதிக்க மாட்டோம் என்று தனது கட்சித் தொண்டர்களை கொண்டு வந்து குவித்து கருணாநிதி எச்சரிக்கை விட்டிருந்தால் பாராட்டலாம். "கருணாநிதி வன்முறையைத் தூண்டுகிறார். தொலைக்காட்சிப் பெட்டியை உடைப்போம் என்று கூறியது, யார் மீது அந்த அடிவிழும் என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுகிறார்" என்று பழனியாண்டி மிரட்டியவுடன் "யார்மீதும் அந்த அடி விழக்கூடாது என்பதால்தான் ரேடியோ, தொலைக்காட்சிப்பெட்டியின் தலைமீது அந்த அடியைப் போடுகிறோம்" என்று கலைஞர் கூட்டுக்குள் சுருங்கிக் கொள்கிறார்.

ராணுவம் என்ற பெயரில் ஒரு கூலிப்படையை வைத்துக்கொண்டு இன்னொரு நாட்டில்புகுந்து அங்கே அவர்களுடைய (விடுதலைப் புலிகளின்) தொலைக்காட்சி நிலையத்தையும், பத்திரிக்கை அலுவலகத்தையும் குண்டுவீசித் தகர்த்து விட்டு, தனது வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கை எடுபிடிகளை வைத்துக் கொண்டு பொய்ப்பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விடும் இந்திய அரசின்பிரச்சார சாதனங்களை இயங்க அனுமதிப்பது என்ன நியாயம்? என்ன ஜனநாயகம்? இதை நேரடியாக மோதித்தகர்ப்பதை விட்டு விட்டு அடையாளப் போராட்டம் நடத்தி அடங்கிக் கொள்வது ஏன்?

1988இல் ஆர்த்தெழுந்த தமிழக மக்கள் 1987இல் அடங்கிக் கிடக்கஇவை மட்டுமல்ல காரணம். அன்று கொளுத்தப்பட்டவை ஜெயவர்த்தனாவின் கொடும்பாவிகள். இந்திய அரசுக்கு அதில் எந்த ஆட்சேபணையும் கிடையாது. 'தட்டி கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டபிரசண்டன்' என்ற கதையாக தமிழ் மறவர்கள் ஜெயவர்த்தனாவுக்கு கொடும்பாவி கொளுத்தினார்கள். ஆனால் இன்று நிலைமை இவ்வளவு மோசமான பிறகும் ராஜீவ்காந்திக்குக் கொடும்பாவி கொளுத்தக்கூட கழகங்கள் தயாரில்லை. அவர் மனம் மாற மட்டுமே வேண்டுகோள் விடுகிறார்கள்.

ஆளில்லாத இடத்தில் சவடால் அடிக்கும் "பேட்டை ரவுடி அரசியல்". அரசியல் நிலைமைகள் குறித்து அக்கறை கொள்வோரை இந்த நோய் பிடித்திருக்கிறது. மீதி நடுத்தரவர்க்கமும், தொழிலாளிகளில் கணிசமானோரும் ரிலையன்ஸ் கோப்பை, தவணை முறை டெலிவிஷன் ஆகியவற்றில் மூழ்கியுள்ளனர்.

இவற்றையும் மீறி தமிழக மக்களைத் தட்டியெழுப்ப முடியும். ஆனால் 'இராணுவ ஆக்கிரமிப்பை வாபஸ் பெறு' என்று சொல்லக்கூட சக்தியற்றுப் போன திமுக உப்புசப்பற்ற போராட்டங்களில் தங்கள் தொண்டர்களை மூழ்கடிப்பதில் வியப்பில்லை. அரசியல் முழக்கத்தின் வேகமும், போராட்டத்தின் போர்க்குணமும்தான் ஒதுங்கியிருப்போரை ஈடுபடவைக்கும்; எதிர்ப்பவர்களை வாயடைக்க வைக்கும்.

● சூரியன்

ராஜீவ் ஏதோ ஒன்றுமே தெரியாத நல்ல மனம் கொண்ட பிரதமர் போலவும் சில அதிகாரிகளின் தவறான ஆலோசனைகளின் காரணமாக உண்மை நிலை புரியாமல் புலிகள்மீது ராணுவத் தாக்குதல் நடத்த அவர் உத்தரவிட்டு விட்டது போலவும் ராஜீவுக்கு உண்மைகளை எடுத்து விளக்கும் பணியை மேற் கொள்கிறார் வீரமணி.



படிப்பகம்

www.padippakam.com

> “இந்திய அரசு நம்ப வைத்துக் கழுத்தறுத்த துரோகி;
>
> இந்தியராணுவம் இலங்கைத்தீவில் ஒரு ஆக்கிரமிப்பு சக்தி”

# ஈழ அகதிகளுடன் ஒரு பேட்டி!

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து இந்திய இராணுவத் தாக்குதலைத் தாங்கிவிட்டுத் தப்பி வந்த கள்ளியங்காட்டைச் சேர்ந்த குணசேகரன், கொண்டவில்லைச் சேர்ந்த வசந்தன் ஆகியோர் சென்னையில் சில பத்திரிக்கை நிருபர்களுக்குப் பேட்டி அளித்தனர். அச்செய்திகளை பத்திரிக்கைகள் முழுமையாக வெளியிடவில்லை. கடந்த அக்டோபர் 9 முதல் அக்டோபர் 24 வரை இந்திய இராணுவத் தாக்குதலை அவர்கள் இதோ விவரிக்கின்றனர்.

எங்களைப் பொறுத்தவரை, இந்திய இராணுவம் எங்கள் மக்களைத் தாக்கும் நிலை இப்போதைக்கு எழாது என்றே நினைத்திருந்தோம். ஜூலை மாத அமைதி ஒப்பந்தமும், அதற்குப் பின்பு ஏற்பட்ட ஆயுதக் கையளிப்பும் எங்களுக்கு இந்த உத்தரவாதத்தை அளித்தன. யாழ்ப்பாணத்தைத் தம் கைவசம் வைத்திருந்த விடுதலைப் புலிகள் பலரும் இவ்வாறே நினைத்தனர். பல விடுதலைப்புலிகள் வீடுகளுக்குத் திரும்பித் திருமணம் செய்து கொண்டதும் இதையே காட்டுகிறது.

ஆனால் எங்கள் நம்பிக்கைகளை குலைக்கும் வண்ணமே இந்திய இராணுவத்தினர் நடந்து கொண்டனர். பொதுமக்களை, குறிப்பாகப் பெண்களையும், வயோதிகர்களையும் ஏசுவது, வெளிநாட்டுக் கடத்தல் எலெக்ட்ரானிக் சாமான்கள், ஆங்கில சினிமாக்கள் பின்னால் அலைவது இவையே அவர்களுக்கு குறியாய் இருந்தது. தெல்லிப்பனை துர்க்கையம்மன் கோயிலில் இந்தியத் தளபதி எழுதியிருந்த நோட்டீசே இதற்கு எடுத்துக் காட்டாகும். ‘‘பெண்கள் எங்கள் வீரர்களை அவமதிக்கும் வண்ணம் கவுனோ, ஸ்கர்ட்டோ போட்டுக் கொண்டு சைக்கிளில் வரக் கூடாது. கோயிலுக்கு வரும் பெண்கள் புடவையோ, பாவாடை தாவணியோ அணிய வோண்டும்.’’

மேலும், இந்திய இராணுவம் விடுதலைப்புலிகள் அதிகமாகயிருந்த யாழ்ப்பாணப் பகுதியிலேயே தங்கியது எங்களை மேன்மேலும் அச்சுறுத்தியது. புலிகள் எல்லா ஆயுதங்களையும் கையளித்துவிடவில்லை என்பதும், இந்திய அரசும், இராணுவமும் புலிகளைக் குறைத்தே மதிப்பிட்டு வந்துள்ளார்கள் என்பதும் எங்களுக்குத் தெரிந்ததே.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை, அவர்களுக்குள் எத்தனையோ தவறுகள் இருந்தாலும், கொரில்லாப் போர் முறையிலும், தியாகவன்மையிலும், போர்க்காலத்தில் பொதுமக்களிடம் நடந்து கொள்ளும் போக்கிலும் நீங்கள் குறைகள் எதுவும் காணமுடியாது. இந்திய இராணுவத்தை எதிர்த்து அவர்கள் போரிட்டது ஏன் என்று எல்லோரும் தமிழ்நாட்டில் கேட்கிறார்கள். பொதுமக்களின் உயிருக்கு எந்த உத்தரவாதமும் இனி இல்லை என்ற கட்டத்தில்தான் அவர்கள் போரைத் துவக்க வேண்டி வந்தது.

அக்டோபர் 5ம் தேதி, தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 விடுதலைப்புலிகள் சயனைட் அருந்தி மடிந்த துயர நிகழ்ச்சி, இனி விடுதலைப் புலிகளுக்கோ, தமிழர்களுக்கோ ஒப்பந்தம் மேல் எந்த நம்பிக்கையும் வைக்க இடமில்லை என்பதைத் தெளிவாக்கியது. இந்திய அரசு நம்ப வைத்துக் கழுத்தறுத்த துரோகி; இந்திய இராணுவம் இலங்கைத் தீவில் ஓர் ஆக்கிரமிப்புச் சக்தி என்பதும் தெளிவாகப் புரிந்தது.

தொடர்ந்து ஏற்பட்ட பல நிகழ்ச்சிகள்— 150 சிங்களர்கள் கொலை, 8 சிங்கள பணயக் கைதிகள் சுட்டுக் கொலை—ஆகியவற்றின் பழிபாவம் விடுதலைப் புலிகளுடையதாகும். இவ்விஷயத்தில் விடுதலைப்புலிகள் வழக்கம்போல் அவசரப்பட்டு நடந்துவிட்டனர். ஆயினும், அவர்கள் கொலைசெய்த சிங்களர்களில் பெரும்பகுதியினர் ஆயுதம் வழங்கப்பெற்ற சிங்களக் குடியேற்ற மக்களாவர்.

திலீபனின் உயிர்த்தியாகமும், 12 பேர் சயனைட் அருந்தி மாண்ட துயரமும் யாழ்ப்பாண நகர மக்களில் ஒரு பகுதியினரைக் கொதித்தெழ வைத்தன. கோட்டை முகாமுக்கு சென்ற ஊர்வலத்தாரில் 12 பேர் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதையடுத்து, விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரச அலுவலர்களுக்கும் நடந்த பேச்சு வார்த்தை முறிந்து நேர் யுத்தம் துவங்கியது.

மக்களுக்குப் புரிந்துவிட்டது— புலிகள் எவ்வளவு முயன்றாலும் இந்திய இராணுவம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி, கண்ணில் பட்ட அனைத்தையும் அழித்துக் கொண்டு வெற்றி பெற்றுவிடும். ஆகவே, பல்லாயிரக்கணக்கானோர் வடமராச்சி, மற்றும் கிழக்கு மாகாணம், தென்னிலங்கைப் பகுதிகளுக்கு ஓடினர். ஓடியவர்கள் தொகை மட்டும் 4 லட்சமாகும். இலங்கைத் தமிழர்கள் மீண்டும் வீடு, வாசல் இழந்து அகதிகளாகும் நிலை ஏற்பட்டது.

தொடர்ந்து 24 மணி நேரமும் ‘செல்லிங்’—பெரும் பெரும் குண்டுகள் டாங்கிகளிலிருந்தும், மார்ட்டார்களாகவும் கிளம்பி வீடுகளை அழித்தன. வீடுகளில் ஒளிந்து கொண்டிருந்த பல மக்கள் இடிபாடுகளிடையே அழிந்தனர். மீண்டும் ஹெலி

‘‘யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் ஆசிரமங்கள் அமைத்து அமைதிப்படை வீரர்கள் தாங்கள் கையோடு கொண்டு சென்றிருக்கும் ராட்டையில் நூல் நூற்றுக் கொண்டிருக்கிறார்கள்’’ என்கிற பாணியிலான செய்திகளை விரைவில் அகில இந்திய வானொலி ஒலிபரப்பக்கூடும். இலங்கையில் ‘அமைதி’ காக்கும் இந்திய ‘வீரர்’களுக்காக ஒலிபரப்பப்படும் அன்புவழி, நேசக்கரம், வெற்றிமாலை ஆகிய நிகழ்ச்சிகளில் அமைதிப்படையினர் ஈழத்தின் பூர்வீகக் குடிகள் என்பது போலவும், புலிப்படை அவர்கள் மீது ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தி அமைதியான வாழ்க்கையை சிதறடிப்பது போலவும் செய்திகளை ஒலிபரப்புகிறது. தெய்வபக்தி, தேசபக்திப் பாடல்களுக்கு இடையிடையே ஒலிக்கும் ‘கோயபல்ஸ்’களின் குரல்கள் நம் காதில் நெருப்பைக் கொட்டுகின்றன.

இந்திய ராணுவத்தின் கொலை வெறித் தாக்குதலுக்குத் தப்பி, தமிழகம் வந்திருக்கும் ஈழத்து இளைஞர்களின் இந்தப் பேட்டி ராஜீவ் புளுகுணிக் கும்பலின் முகங்களில் கரியைப் பூசுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

காப்டர்களையும், பெரும் குண்டு வீச்சு விமானங்களும் தாழப் பறந்து குண்டு வீசியதைக் கண்டோம். பலமுறை குண்டு வீச்சு நடை பெற்ற பின்னர் இந்திய இராணுவம் அகதிகள் முகாம்களாக அறிவித்திருந்த பல இடங்களில் குண்டு வீச்சு தொடர்ந்து நடப்பதாகக் கூறினார்கள்.

மக்கள் நிலை பெருந்துயரமானது—மின் சக்தி, நீர், உணவுத் தட்டுப்பாட்டுடன் காயம்பட்ட மக்கள் மாட்டுவண்டிகளில் குறுக்குச் சாலைகளில் ஓடினார்கள். இரவு பகலாக யுத்தப் பகுதியை விட்டு வெளியேறிய மக்களையுங்கூட இந்திய டாங்கிகள் சுட்டுக் கொன்றன. பல இடங்களில் சிதைக்கப்பட்ட உடல்களையும், மனம் பேதலித்து அலைந்து கொண்டிருந்த மனிதர்களையும் நாங்கள் கண்டோம்.



என் டி எல் எஃப் - இந்திய இராணுவ் கைக்கூலி



தாக்குதலிலிருந்து தப்பிக்க ஊரை விட்டு ஓடும் ஈழத் தமிழ் மக்கள்.

எம்மக்களில் சிலர் புலிகளின் முன்பு நின்று இந்திய இராணுவம் முன்னேற கூடாது தடுத்துக்கொண்டிருந்ததைக் கண்டோம். மக்களில் பெரும்பகுதியினர் நேரடியாகப் போராட்டத்தில் இறங்கியதையும் காண முடிந்தது. பலர் கண்ணி வெடிகள் வைத்தனர்; சிலர் கிரனேடுகளை வீசினர்; குழந்தைகள், பெரியவர் உட்படப் பலர் புலிகளுக்கு நேரடி உதவி புரிந்தனர்.

இதற்கிடையில் சுமார் 300 இந்திய இராணுவத்தினர் கண்ணி வெடிகள் வெடித்ததில் கொல்லப்பட்டனர் என்று தெரிந்தது. இராணுவம் முன்னேறுவதைத் தடுத்து நிறுத்திய புலிகள், பின்வாங்கிப் போராடினர். புலிகள் நடத்திய பத்திரிகை நிலையங்களை இராணுவம் குண்டு வைத்துத் தகர்த்ததாலும், ரேடியோ—டிவி நிலையங்களைக் கைப்பற்றியதாலும் புலிகளின் செய்திகளைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. இந்திய இராணுவமும், சிங்கள இராணுவமும் சேர்த்து செய்த வெறித்தனத்துக்கு சப்பைக்கட்டு கட்டிய இந்திய வானொலியையும், அதன் செய்திகளையும் நாங்கள் மனதார வெறுத்தோம். செய்திகள் வாசித்த குரல்களில் இருந்த நடுக்கமும் எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பொய்களைத் தெரிந்தே சொல்லும் எங்கள் விரோதிகளாகி விட்டனரா இந்தியத்தமிழர்கள் என்று வருந்தி நின்றோம்.

தொடர்ந்து முன்னேறிய இந்திய இராணுவம் எங்கள் மக்களைக் கொன்று குவித்த வண்ணமிருந்தது. பின்வாங்கிப் போராடிய புலிகள் மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறச் சொல்லித் தாமும் வெளியேறத் துவங்கினர். உரும்பிராய், கோப்பாய், நாவற்குழி ஆகிய இடங்களிலேதான் கடும் போர் நடந்தது.

இடையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைத் தாக்கி அழிக்கும் நோக்கத்துடன் வானிலிருந்து இறங்கிய பாராட்ரூப்பர்களைப் புலிகள் கண்ணிமைக்கும் நேரத்தில் பாக்கிக் கொன்றனர். பரிதாபமாகப் தல இந்திய வீரர்கள் அங்குமிங்கும் அலைந்து பின்னர் கொல்லப்பட்டதும் வருத்தத்தையே அளித்தது. சிறைபிடிக்கப்பட்ட இந்திய இராணுவத்தினரை புலிகளின் துணைத் தளபதி மாத்தையா மக்களுக்கு அறிமுகப்படுத்தினர். இடையில் சில வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் மாத்தையாவிடம் பேசியதைக்காண முடிந்தது.

அக்டோபர் 24ம் தேதி பொய்ப் பிரச்சாரக் கருவியான இந்திய வானொலி யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியதாகக் கூறியது. ஆனால் அன்றுதான் யாழ்ப்பாண நகரை விட்டு நாங்கள் வெளியேறி

ராணுவ துப்பாக்கிகளுக்கு உற்றார் உறவினரைப் ப்லி கொடுத்த பெண்கள் கதறியழுகிறார்கள்.





படிப்பகம்

www.padippakam.com



# ஈழம் எரிகிறது பத்மனாபா பாதுகாப்பாக இருக்கிறார்!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ பி ஆர் எல் எஃப்) என்று ஒரு ஈழ விடுதலை அமைப்பு. இதன் தலைவர் பத்மனாபா. இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை சிரமேல் ஏற்றுப் போற்றுபவர். இந்துமாக்கடல் அமைதி பிராந்தியமாக மாறும் வரை இந்திய ராணுவம் இலங்கையில் இருக்க வேண்டும் என்று இவர் துக்ளக்குக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். இந்திய ராணுவம் புலிப்படையையும் பிரபாகரனையும் ஒழித்து விட்டுத் தன்னை அரியணையில் அமரவைக்கும் நாளுக்காகக் காத்திருக்கிறார் இந்த எட்டப்பன். இவர் ரஷிய ஆதரவு நபராக இருந்தாலும், தற்போது இந்திய ராணுவத்தை ஆதரிப்பதால் வெகு சிரத்தையுடன் இவரது பேட்டியை வெளியிட்டது துக்ளக். கடும் யுத்தம் நடைபெறும் யாழ் நகரில் வைத்தே பேட்டி எடுத்ததாக எழுதியிருக்கிறார் துக்ளக் நிருபர்.

ஆனால் எமக்குக் கிடைத்துள்ள தகவல் உண்மையை அம்பலமாக்கி விட்டது. கடும் யுத்தத்தின் மத்தியில் யாழ்நகரில் பத்மநாபா தங்கியிருந்த இடம் எது தெரியுமா? இந்திய ராணுவ முகம். தங்களது தலைவரின் இந்த கோழைத்தனத்தையும் துரோகத்தையும் பொறுக்க முடியாமல் அவரது இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் ஆயுதமேந்தி இந்திய ராணுவத்தை எதிர்த்து போரிடுகின்றனர். இருவர் இந்திய ராணுவத்தால் கொல்லவும் பட்டனர். ஏராளமான ஈ பி ஆர் எல் எஃப் போராளிகள் இந்திய ராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் பத்மனாபா பாதுகாப்பாக இருக்கிறார். 10 நாட்களாக சென்னையில்தான் இருக்கிறார். யாழ்ப்பாணத்து மக்களால் ஒருவேளை பத்மனாபாவின் உயிருக்கு ஆபத்தோ என்னவோ! ஆனால் ஆள்காட்டிகளுக்கும் துரோகிகளுக்கும் தமிழ் மக்கள் தஞ்சமளிக்க மாட்டார்கள்!

வடமராச்சிப் பகுதியை அடைந்தோம். எங்களுடன் வந்த பல அகதிகள் குடும்பங்கள் முல்லைத்தீவு, திரிகோணமலைப் பகுதிகளுக்குச் செல்லத் துணிந்தனர். சிலர் கொழும்புக்கும், மன்னாருக்கும் புறப்பட்டனர். எங்கள் உறவினர் இந்தியாவில் அகதியாக இருக்கும்படியால், ஒரு படகில் இங்கு வரத்தீர்மானித்தோம். வழியில் கப்பற்படைப் படகுகள் எதையும் நாங்கள் காணவில்லை!

தமிழ்நாட்டுக்கு வந்தவுடன் எங்கள் துயரங்களைக் கூட இங்குள்ள மக்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாத நிலையைக் கண்டு அதிர்ச்சி அடைந்தோம். இந்திய—இலங்கை ஒப்பந்தம் எங்கள் இனத்துக்கு மேலும் சொல்லொணாத்துயரத்தையே அளித்துள்ளது என்பது இங்குள்ள பலருக்குப் புரியவில்லை. தமிழர்கள் ஆயிரம் பேரைக் கொன்று குவித்த இந்திய இராணுவம் சிங்களவர்களை மட்டும் விட்டு விடுமா? மேலும் தென்னிலங்கைக்குச் சென்று அவர்களையும் கொல்லாது என்பது என்ன நிச்சயம்?

இந்திய அரசு தனது இராணுவத்தை விடுத்து மக்களை அழித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதால் தன்னை ஓர் ஏகாதிபத்திய அரசென்று வெளிப்படுத்திக்கொண்டுள்ளது. பொய்ச் செய்திகளையே கூறி பித்தலாட்டம் செய்யும் இந்த அரசு, உணவுப் பொருட்களையும் மருந்துகளையும் மட்டுமேகொடுத்து எங்கள் மக்களை மயக்கத்தில் வைத்திருக்க முடியாது. கலாச்சார அளவிலும் எங்களை அழிக்க முற்படும். அப்போது நாங்கள் கிளர்ந்தெழுவோம்!

ஆனால் எங்கள் விடுதலைக்கு இப்போது தடையாக இருப்பது, இந்திய இராணுவமும், சிங்கள இராணுவமும் மட்டுமல்ல— இந்திய அரசின் கைக்கூலிகளாகிவிட்ட விடுதலை இயக்கங்களும்தான். இவற்றால் எங்களுக்கு மேன்மேலும் தொல்லையே ஏற்பட வாய்ப்புண்டு. ஒரு பொம்மை அரசிலாவது தாம் இடம்பெற வேண்டும் என்று அவர்கள் துடிப்பாக இருப்பது எங்களுக்கு வேதனையைத்தருகிறது.

விடுதலைப்புலிகளை நாங்கள் மற்ற இயக்கங்களிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கிறோம். மிகுந்த போர்த்தந்திரமும், தன்மான உணர்வும் இவர்களிடையே இருந்த போதிலும், அரசியல் அறிவற்று அவசரத்தில் பயங்கரவாதிகளாக இவர்கள் மாறி விடுகிறார்கள். இந்த அபாயத்தைத் தவிர்க்க இந்திய இராணுவத்தாக்குதலிலிருந்து இவர்கள் ஒருபாடம் கற்க வேண்டும்.

ஈழமக்களைப் பொறுத்தவரை, தாயகம் திரும்ப விழையும் அகதிகள் உட்படப் பலரும், அங்கு ஒரு அந்நிய இராணுவ சர்வாதிகாரத்தையே பொறுத்து வாழ வேண்டியுள்ளது. இஸ்ரேலில் வாழும் பாலஸ்தீனியர்கள், தென்னாப்பிரிக்காவில் வாழும் நீக்ரோக்கள் போல "கெட்டோ" அமைப்புக்களில் நாங்கள் இனி வாழ நேரிடக்கூடும்.

மேலும், சிங்கள இராணுவத் தாக்குதலின்போது எங்களுக்காகக் குரல் கொடுத்த யாருமே இன்று வாய் திறக்காதிருப்பது எங்களுக்கு உலகின்மீது, மனித இனத்தின்மீது இருந்த நம்பிக்கையையே இழக்கச் செய்வதாக உள்ளது.

கடந்த சில வாரங்களாக நடந்த உரிமைப்போர், எங்கள் கனவுகளிலும், நினைவுகளிலும், கலை இலக்கியங்களிலும் பதிந்து விடும்.

இந்திய அரசும், இராணுவமும் இன்று அங்குள்ள நிலைமைகளை மறுக்கலாம்; மறைக்கலாம். ஆனால் எங்கள் கனவுகளையும், நினைவுகளையும் அவற்றால் அழிக்கவே முடியாது.

● ●

—ஃபெர்னாண்டஸ்

இந்திய இராணுவத் தாக்குதலின்போது வசந்தன், குணசேகரன் கணிப்பில் இறந்தோர் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| தமிழ் மக்கள் | (இறந்தோர்) | 1000 |
| | காயமுற்றோர் | 5000 |
| இந்திய இராணுவத்தினர் | (இறந்தோர்) | 800 |
| | காயமுற்றோர் | 2000 |
| விடுதலைப்புலிகள் | (இறந்தோர்) | 125 |
| | காயமுற்றோர் | 400 |
| | கைதானவர்கள் | 250 |

படியுங்கள் —

**புதிய ஜனநாயகம்**
(மாதமிருமுறை)

1—15 நவம்பர் '87

"கொலைகாரன் ராஜீவ்"

ஈழத்தில் இந்திய ராணுவம் நடத்தும் கொலை வெறித் தாக்கு தலை மூடி மறைத்து வானொலி, தொலைக் காட்சி, ஏடுபிடி பத்திரிக்கைகள் செய்யும் பொய் பிரச்சாரத்தை ஆதாரங்களுடன் அம்பலப் படுத்தும் சிறப்புக் கட்டுரை.



படிப்பகம்

www.padippakam.com

# 45 இந்திய சிறை ஒன்றிலே எனது சில ஆண்டுகள்

## நள்ளிரவில் வெளியேற்றப்பட்டேன்!

தூதரக அதிகாரி சூட்கேசோடு திரும்பி வந்தார். எனது உடமை, பொருள் எல்லாம் நைந்து போன காக்கிப்பைகளில் கிடந்தது. அதற்கு மாற்று ஏற்பாடாக சூட்கேஸைக் கொண்டு வந்திருந்தார். அவர் தானாக விருப்பப்பட்டு இன்னும் சில பொருட்களை வாங்கி வந்திருந்தார். எனது சகோதரியின் குழந்தைகளுக்காகச் சில இனிப்புப் பொருட்கள்; ஒரு ஜோடிக் காலணிகள்; டென்னிஸ் காலுறை. இங்கிலாந்து வெப்ப நிலைக்கு எனது இந்தியக் காலணிகள் நிச்சயமாகச் சரிப்பட்டு வராது.

ஐரோப்பிய உடைக்கு நான் மாறிக் கொண்டேன். என்னிடம் இருந்ததெல்லாம் தொள தொளப்பான ஒரு ஜதை பாண்ட்கள். நானே தைத்துக் கொண்டிருந்த மேல் சட்டை ஒன்று தூதரக அதிகாரி மனைவி ஒரு பூச்செண்டைக் கொண்டு வந்து கொடுத்தாள். நான் மகிழ்ச்சி அடைகிறேனோ இல்லையோ எனக்காக அதிகமாகவே அவர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். என் மனத்தில் மறுபடி மறுபடி அமலேந்துவின் உருவமும், அவரது குடும்பத்தாரின் உருவங்களும் நிழலாடிக் கொண்டிருந்தன. ஏதோ ஓர் அதிசயம் நடந்து, நான் போகிறேன் என்று தெரிந்து கொண்டு, கடைசி நேரத்தில் வழியனுப்ப வந்து விடமாட்டார்களாஎன்றெல்லாம்யோசித்துப்பார்த்தேன். மறுபடிசாப்பாடு வந்தது—இந்தமுறை வேக வைத்துச் சமைத்த காய்கறிகள் மட்டும். என்னால் ஆட்டுக் கறி சாப்பிட முடியவில்லை. (அந்த அளவு வயிறு சிறை வாழ்க்கையால் கெட்டுப் போயிருந்தது. மொ—பெ.)

மணி நள்ளிரவு பன்னிரண்டு ஆக இன்னமும் கால் மணி நேரமிருக்கும். முக்கியப் பிரமுகர்கள் வெளியேறும் வாயில் வழியாக என்னை அழைத்துப்போனார்கள் பீகார் உள்துறை இணைச் செயலாளர் மறுபடி வந்திருந்தார்; பகலில் என்னைப் பார்க்க வந்த அதிகாரிகளில் பலரும் இருந்தார்கள். வரிசையாக நின்று கை குலுக்கினார்கள். நல்வணக்கம் சொன்னார்கள். நாகரீகமாகப்புன்னகை செய்தார்கள். சாதா உடை போலீஸ் இருவர் விமானத்துக்குள் ஏறும் வரை தொடர்ந்து வந்தார்கள். அதற்குப் பிறகுதான் பயணச் சீட்டை என்கையில் ஒப்படைத்தார்கள்.

பிரிட்டிஷ் ஏர்வேஸ் (பிரித்தானிய விமான சேவை) விமானம் அது. இப்படி மரியாதை கொடுக்கிறார்களாம்!? மேலாளர் ஒருவர் என் காதில் கிசுகிசுத்தார்: கொஞ்சம் பிராந்தி எடுத்துக் கொள்கிறீர்களா?'' வேண்டாம் தேவையில்லை—நான் மறுத்தேன்.

நள்ளிரவுதாண்டி அரை மணி சென்றிருக்கும். வறுத்த கோழி, பிரஸ்ஸல்ஸ் பச்சைப் பயிறு கொடுத்தார்கள். எனக்கு வாந்தி எடுக்க வேண்டும் போலிருந்தது. (சிறை உணவுப் பழக்கத்தினால் இந்த விசேஷ உணவுகளைப் பார்த்ததும் உமட்டல் எடுத்திருக்கிறது. மொ—ர்.)

பதினான்கு மணி நேரப் பயணம்—அலுப்பாக இருந்தது. எனக்குப் பக்கத்தில் ஒருவங்காளி மருத்துவர். தனது நோயாளித் தகப்பனாரை இங்கிலாந்துக்கு சிகிச்சைக்கு அழைத்துப் போகிறார். இந்தியாவில் எனது அனுபவங்களைப்பற்றிக் கேட்க ஆரம்பித்தார். இந்தியாவுக்கு வந்து எத்தனை நாளாயிற்று? என்ன செய்து கொண்டிருந்தேன்?என்ன அனுபவம்? உண்மையைச் சொன்னால் திகைப்படையக்கூடாது என்று சொன்னேன்.

''மேரிடெய்லர்தானே நீங்க?'' அவர் கேட்டார். அவரது ஊகம் சரியானது செய்தித் தாள்களில் பார்த்திருக்கிறாராம்.

ஊழியப் பெண் ஒருத்தி விடாமல் ஏதாவது நச்சரித்து நச்சரித்துச் சாப்பிடக் கொடுத்துக் கொண்டே வந்தாள். ஆரஞ்சு பானம்; ஐரோப்பிய வகை காலை உணவு; காபி; ஆங்கிலேய பாணி காலை உணவு. பாதிகூடச் சாப்பிடப் பிடிக்கவில்லை. உடன் பயணம் செய்தவர்கள் அரைத்து தள்ளிவிட்டார்கள். ஓர் ஊழியர் சிகரெட்டும், மதுவும் விற்றார். கொஞ்சம் சிகரெட்டும், அரை பாட்டில் விஸ்கியும் மட்டும் வாங்கினேன். அதற்குள் திக்கித் திணறிப் போய்விட்டேன். என் பணத்தைச் செலவழித்து ஐந்து வருடங்களாகிவிட்டது. தயக்கமாகவே இருந்தது.

அமலேந்து. அமலேந்துவை நினைக்காமல் இருக்க முடியவில்லை என்ன செய்து கொண்டிருப்பார்? அவருக்குத் தெரியுமா, நான் இங்கிலாந்து போவது? இங்கிலாந்தில் பெற்றோருக்குத் தெரியுமா நான் வருவேன் என்பது?

## லண்டனிலும் எனக்குக் கெடுபிடி!

அதோ ஹீத்ரு விமான நிலையம். விமான மேலாளர் என் காதில் கிசுகிசுத்தார். மற்ற பயணிகள் போகும்வரை காத்திருக்கச் சொன்னார். பத்து நிமிடங்கள் கழித்து என் தந்தை அங்கு ஓடோடி வந்தார். என்னைக் கட்டிப் பிடித்துக் கதறிவிட்டார். என் சகோதரி—இரண்டு வயது மகளுடன் வந்திருந்தார். வாயிலருகே செல்வதற்குள் புகைப் படக்காரர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

எனது பாஸ்போர்ட்டு பழுதே இல்லாமல் என்னிடம் திரும்ப வந்து சேர்ந்துவிட்டது. எல்லோருமே அதைப் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள். எனக்குத் தடுப்பூசி போட்டார்களா என்று விமான நிலையத்தில் விசாரித்தார்கள். ஓ, பலமுறை. அத்தாட்சி இருக்கிறதா? இல்லை. அப்படியானால் மறுபடி தடுப்பூசி போட வேண்டுமே, எதற்கும் போட்டு விடுங்கள். தடுப்பூசி போட்டார்கள்.

அருகே ஓர் அறை. செய்தியாளர்களுக்காக ஒரு பேட்டி. எனது நண்பர்கள். ஜில், அதோ தனது மகள், நான்கு வயது மகள் ரூத்துடன் வந்து என்னைத் தழுவிக் கொள்கிறாள். அவளைப் பற்றிக் கடிதங்களில்தான் படித்திருக்கிறேன். எனது அத்தை, அவரது கணவர் எல்லோரும் உற்சாகமாக இருந்தார்கள். யாரோ எனது கழுத்தில் மைக் (ஒலி வாங்கி) ஒன்றைத் தொங்கவிட்டார்கள்.

கேள்விகள் ஒவ்வொன்றாகக்



படிப்பகம்

www.padippakam.com

கிளம்பின. எனது தந்தை அருகே வந்தார்—அயலுறவுத்துறை அதிகாரி ஒருவர் தந்தையிடம் சொன்னாராம்: ''பேட்டியைச் சுருக்கமாக முடிக்கச் சொல்'' என்று.

ஒருவழியாக வெளியே வந்து சேர்ந்தேன். தந்தை தனது காரில் ஏறிக் கொண்டார். காரன் வாலை நோக்கிய பாதையில் கார் திரும்பியது. காரில் வாழை, ஆப்பிள், பாலாடைக்கட்டி என்னவெல்லாமோ நிரம்பிக் கிடந்தன. நான் எதையும் தொடவில்லை. சன்னல் வழியே வயல்களைப் பார்த்தபடி வந்தேன். எந்த இங்கிலாந்து வயல்வெளிகள் இந்தியச் சிறையில் நான் இருந்தபோது பச்சைப் பசேலென்று நினைவில் நின்றனவோ அவை கண்ணெதிரே வெளுத்துக் கிடந்தன; மஞ்சள் ஏறிக் கிடந்தன.

## நக்சல்பாரிகள் என்ன குற்றம் செய்தார்கள்?

இந்த நூலை எழுதிக் கொண்டிருக்கிறேன். இப்போது 'விடுதலை'யாகி எட்டு மாதமாகிவிட்டது. 1975 ஜூன் 23ஆம் நாள் மற்ற தோழர்கள்மீது தொடங்கிய விசாரணை இன்னமும் இழுத்துக் கொண்டிருக்கிறது. அமலேந்து, கல்பனா, பீனா மற்றும் ஆயிரக்கணக்கான நக்சல்பாரிப் போராளிகள் சிறையில்தான் இருக்கிறார்கள். நான் அனுபவித்ததைவிட மிகக் கொடிய அனுபவங்கள் அவர்களுக்கு. சிலர் விசாரணையே இல்லாமல் ஏழாண்டுகள் கூடச் சிறையில் இருக்கிறார்கள்.

ஜூன் 26, 1975. அவசர நிலை அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு பத்தாயிரக்கணக்கான சாதாரண அப்பாவி மக்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். கணக்கில் அடங்காத ஏழை விவசாயிகளும் தொழிலாளர்களும் நான் சிறையில் பார்த்துப் பழகி நேசித்தவர்களைப் போல எத்தனையோ பேர் எந்த நியாயமுமே இல்லாமல் சிறையில் வாடுகிறார்கள். வழக்குகள் ஒரு நாள் தீர்க்கப்படும் என்று அவர்கள் காத்திருக்கிறார்கள். அவர்களது அடுத்த தலைமுறை சிறையிலேயே வாழ்கிறது.

அமலேந்து என்ன குற்றம் செய்தார்? கல்பனா என்ன குற்றம் செய்தார்? புழுதியிலே பிச்சைப் பாத்திரம் ஏந்தி அலைகின்ற இந்தியச் சிறுமியை, இந்தியச் சிறுவனைப் பார்த்துக் கொண்டு அவர்களால் சும்மா இருக்க முடியவில்லை. அவர்களால் இதயத்தை கல்லாக்கிக் கொள்ள முடியவில்லை. இந்தியாவில்—ஓர் ஏழைச் சிறுமியை பணக்காரனின் விளையாட்டுப் பொருளாக



# மேரிடெய்லர்

விற்கிறார்கள்; கிராமத்தில் அதிகாரம் படைத்த சீமான்களின் சமூக அங்கீகாரம் பெறுவதற்காகக் முதியவர்கள் அரைப் பட்டினி கிடக்கிறார்கள்; கொள்ளை லாபத்துக்கு உணவுத் தானியம் விற்கப்படுகிறது—லட்சக் கணக்கில் பட்டினி கிடக்கிறார்கள்; பாடுபட்டு உழைப்பவரிடமிருந்து உழைப்பின் பலனை ஒருசில கந்து வட்டிக்காரர்களும், சூதாடிகளும் பறித்துக் கொள்கிறார்கள். நியாயமானவர்கள் கஷ்டப்படும்போது மோசக்காரர்கள் கொழுக்கிறார்கள்; நீதி அது விதி விலக்காக எப்போதோ ஒரு நாள் வரும்; அநீதி—அதுதான் ஆட்சியில் இருக்கிறது. பல லட்சக்கணக்கான மக்களின் உடல், மூளை உழைப்பின் ஒட்டு மொத்த சக்தியும் உடலில் உயிரை வைத்திருப்பதற்காக மட்டுமே செலவழிக்கப்படுகிறது. இத்தகைய இந்தியாவைப் பார்த்துக் கொண்டு அமலேந்துவால், கல்பனாவால் சும்மா இருக்க முடியவில்லை. அதுதான் அவர்கள் செய்த குற்றம்.

இங்கே புரட்சி வேண்டும்; அதன் மூலம் மக்களின் திறமை, ஆக்க சக்தி, அயராத சலியாத உழைப்பு ஆகியவற்றுக்கு முழு வீச்சு கொடுத்து ஒரு புதுவிதமான இந்தியாவைப் படைக்க வேண்டும்; ஓர் உண்மையான விடுதலை பெற்ற இந்தியாவை, மேம்பட்ட இந்தியாவைப் படைக்க வேண்டும்—இப்படிச் சிந்தித்ததுதான் அவர்கள் செய்த குற்றம்.

பல ஆண்டுகள் சிறையில் அடைத்து, மக்கள் உரிமைகளைக் குழிதோண்டிப் புதைத்து, சித்திரவதைகள் செய்து—அநீதி, அரக்கத் தனத்துக்கு எதிராகப் போரிடுவோரை அடக்கி விடுவதன் மூலமாக இந்தியாவின் பிரச்சனைகளை ஒரு போதும் தீர்க்கவே முடியாது— அது இப்போதைய நிர்வாகமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த நிர்வாகமாக இருந்தாலும் சரி.

ஒட்டு மொத்தமாக மக்களை வெறுக்கின்ற ஓர் அரசாங்கம் உள்ள வரை, ஓர் இந்தியன் பட்டினியால் செத்தானா அல்லது சத்துணவு இல்லாததால் செத்தானா என்று மயிர் பிளக்க விவாதித்துக் கொண்டு பொழுதைப் போக்கி கொலைகார ஆட்சி நடத்தும் அரசாங்கம் உள்ள வரை இந்தியாவின் துயரங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

(இத்துடன் நூலின் கடைசி அத்தியாயம் முடிகிறது, நூலின் பின் உரையாக மேரிடெய்லர் எழுதியுள்ள பகுதி தொடர்ந்துஇரு இதழ்களில் இடம் பெறும்.) ●

### பார்ப்பனீய வெறியர்களின் சதி!

பெண்கள் பலதார மண முறையை ஆரியக் கலாச்சாரம் ஏற்கிறது. விதவை மறுமணத்தைப் பற்றி அதர்வண வேதம் பேசுகிறது; "ஓ பெண்ணே! எழுந்திரு! வாழுகின்ற உலகத்துக்கு வா! நோயுற்று இருந்த கணவன் அருகில் படுத்திருக்கிறாய்! எழுந்து வந்து வேறு ஒருவனின் கையைப் பிடி. இவன் உனது இரண்டாவது கணவன். மனைவியாக வாழ்க்கையைத் தொடங்கு!"

ஆனால் பிற்காலத்தில் வர்ணக் கலப்பு நிகழக் கூடாது, இனச் சுத்தம் காப்பாற்ற வேண்டும் என்று திட்டம் போட்டு உடன்கட்டை (சதி) முறையைப் புகுத்தினார்கள். எனவேதான் சதி பற்றிய விவரங்கள் பிற்காலத்திய சாத்திரங்களில் இருக்கின்றன. இதற்காக ரிக் வேதத்தையே தில்லுமுல்லு செய்து பார்ப்பனர்கள் மாற்றியிருக்கிறார்கள். மாக்ஸ்முல்லர் என்ற ஜெர்மானிய வேத ஆய்வாளர் தனது "மொழி, புராணங்கள், மதம்—தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள்" என்ற நூலில் இந்த மோசடியை அம்பலப் படுத்தியுள்ளார்.

"ஆரேஹந்து ஜன்யோ யோனிம் அக்ரே" (தாய்மார்களே! முதலில் மணமேடைக்கு வாருங்கள்) என்ற வரியை "ஆரோஹந்து ஜன்யோ யோனிம் அக்னி" (தாய்மார்களே! நெருப்பு கர்ப்பத்துக்குள் நுழையுங்கள்!) என்று மாற்றினார்கள். இப்படி ஊருக்கு உபதேசித்தவர்கள் பார்ப்பனச் சமூகத்தில் சதிப் பழக்கத்தைப் பின்பற்றினார்களா என்றால் கிடையாது. இது சுகபோகம், சுயநலத்திற்காகச் செய்த உபதேசம். ●



ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 22 சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை—600 015. அச்சிடுபவர் எம். கே. சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ பெரியார் பாதை (மேற்கு), சென்னை-94.

புதியகலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள், அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

www.padippakam.com

# "கைத்தடி"

நிசப்தம்.
காற்றுக்கும் தொண்டை அடைத்துக் கொண்டது
பனஓலைகளுக்கும் பல்வலி.
சேரியில்—குடிக்க மறந்தனரா? முனக மறந்தனரா?
சுடுகாடு கிராமத்திற்குள் வந்துவிட்டதா?
நிசப்தம்.
'அவர்கள் வரப்போகிறார்கள்!'
பரட்டைத் தலைப் பூமியை—
யார் யார் ரத்தம் நனைக்கப் போகிறதோ?
... ... ...
சூரியன் கிழக்கே சிவந்தபோது
கிராமத்தில்—
கதவுகள் உடைந்திருந்தன.
பள்ளிக்கூடத்திற்குச் செல்லும்
ஒன்றிரண்டு குழந்தைகளும்
கிழிந்திருந்தன.
சுடுகாடு மட்டும் வெளிச்சமாகவே இருந்தது.

●

அவள் கிழவி.
தலை, தலைமுறைகளைக் கண்டிருந்தது.
கன்னங்களில்
இறுகிக் காய்ந்து வெடித்த களிமண்போல் சதை
கண்ணீரா? உழைப்பா? அனுபவமா? வன்முறைப் ı
எல்லாம்தான்.
அவளால் நடக்கமுடியாது!
அவள் ஏன் ஊருக்குள் இருக்கிறாள்?
'கைத்தடி'யைக் கொண்டுபோன பேரன்
திரும்பி நிச்சயம் வருவான் என்றுதான்.

●

அதே ஊர்தான்.
விடுகள் தளிர்த்திருந்தன.
முன்னைவிட மக்கள் இருக்கிறார்கள்.
"கைத்தடி"யோடு பேரன்மார் நிறையபேர்.
அவர்கள் பேசிக் கொண்டார்கள்.
கண்ணுக்குத் தெரியவில்லை.
வேலைகள் மும்முரமாக நடந்தன.
கிழவி சொன்னாள் :
"அடேய்! அவர்கள் எப்போதும் வரலாம்டா".
.........
வரட்டும்.
கைகள் இறுகின.
சங்கிலிகள் இல்லாமலேயே பேரன்மார்கள்
கிராமத்தை இணைத்திருந்தனர்.
இரவு மலர்ந்தது—கனத்தது.
விளக்குகளில் ஒளி தவழ்ந்தது—பின்னிக் கொண்ட
'வேன்' ஊளையிட்டது.
'நரிப்பயல்கள்... வக்காளி... நரிப்பயல்கள்.

●

சூரியன் கண்கசங்கினான்
சிதறினான்—வழிந்தோடியிருந்தான்.
கிராமத்துக்கு என்ன வந்தது?
நல்ல அறுவடையா?
பேரன்மார்கள் தழுவிக் கொண்டார்கள்.
பறித்த ஆயுதங்களைப் பத்திரப்படுத்தினார்கள்.
காயங்கள் இருக்கத்தான் செய்தன.
செய்திகள் பரவின—வந்தன.
.........
கிழவி ஒருபக்கம் உற்சாகமாக இருந்தாள்.
பேரன்மார்கள்.
நிறைய பேரன்மார்கள்—தொடர்ந்து பேரன்மார்கள்
குழந்தைகள் பாடின.
" 'கைத்தடி' ஒன்றை எடுத்துக் கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"
ஆரவாரம்.



—அலகநந்தா

படிப்பகம்